விலை: 30.00
பக்கங்கள் : 16 + XVI
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 01 ஞாயிற்றுக்கிழமை (17.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 333

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## கிடைக்கப்பெற்ற தபால்மூல வாக்குகளின்படி

# வன்னித் தேர்தல் தொகுதியில்

# சஜித்பிரேமதாச முன்னிலை



## இன்று மதியம் உத்தியோகபூர்வமான இறுதி முடிவுகள் வெளியாகும்

(கொழும்பு)

நாட்டாளவிய ரீதியில் நேற்று நடைபெற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தலில் இன்று அதிகாலை 2.00 மணிவரை கிடைக்கப் பெற்ற தகவலின்படி ஐக்கியதேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்பிரேமதாச வன்னிதேர்தல் தொகுதியில் முன்னிலை வகிக்கிறார். இத்தகவலை தேர்தல் திணைக்களம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. (15ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியான முறையில் வாக்களிப்பு நடைபெற்றது

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

அமைதியான முறையில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நடைபெற்றதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு 12,845 வாக்களிப்பு நிலையங்களில் நேற்று மாலை 5.00 மணிக்கு நிறைவுபெற்றது.

அமைதியான முறையில் நேற்றைய வாக்களிப்பு நடை 15

### கடும் மழைக்கு மத்தியில்

## யாழில் அதிகளவான வாக்குகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்று பெய்த கடும் மழைக்கு மத்தியில் 66.58 சதவீத வாக்குப்பதிவுகள் இடம்பெற்றதாக யாழ்.மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 66.58 சதவீத வாக்களிப்பு இடம் பெற்றுள்ளதாக மாவட்ட தேர்தல் செயலகம் உத்தியோக 15

### வடக்கு நிலவரம்
### தேர்தல் ஆணையாளருடன்

## ரணில் பேச்சு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தேர்தல் ஆணையாளருடன் அவசர சந்திப்பில் ஈடுபட்டார். வடக்கு நிலவரங்கள் குறித்து ஆராய இந்த அவசர சந்திப்பு நடைபெற்றது. 15

### காலி நாகொட பொலிஸ் பிரிவில்

## வாக்களிக்கக் கூடாதென தமிழர்களுக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

காலி - நாகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுகம, காபில்தோட்ட தமிழர்கள் வாக்களிக்கச் செல்லக் கூடாது என அச்சுறுத்தப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

நாகொட பிரதேச சபை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவர் இவ்வாறு குறித்த தமிழ் மக்களை அச்சுறுத்தி 15

### வட்டுக்கோட்டையில்

## காணாமல் போன குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டையில் காணாமற்போன குடும்பப்பெண் ஒருவர் 5 நாட்களின் பின் பாழடைந்த கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். 15

## இலங்கை அரசியலில் குறைந்த வன்முறைகள்



மகிழ்ச்சி வெளியிட்டார் மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் வரலாற்றில் வன்முறைகள் குறைந்த தேர்தல் இதுவென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலை 15

### விடைபெற்றார்

## ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நாட்டு மக்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார். 15

## வரலாற்றில் முதல் தடவையாக நாடெங்கும் சுமுக வாக்களிப்பு

(கொழும்பு)

இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நாடெங்கும் சுமுகமாக நடைபெற்றது.

அண்மைய வரலாற்றில் வன்முறைகள், குழப்பங்கள் அற்ற அமைதியான ஜனாதிபதி தேர்தலாக இந்த தேர்தலே பதிவாகியுள்ளது.

ஆங்காங்கே சிறியளவிலான வன்முறைகள் பதிவான போதும் பாரதூரமான சம்பவங்கள் பதிவாகியிருக்கவில்லை.

காலை 7.00 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு சுமுகமாக 5.00 மணிக்கு நிறைவடைந்தது. (ம-3)

## அமைதியான ஜனாதிபதி தேர்தல்

### பப்ரல்

(கொழும்பு)

தேர்தலில் 300 இற்கும் அதிகமான சர்வதேச கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகவும், அவர்களுடைய கண்காணிப்பு நடவடிக்கை 15

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



**அமரர் லயன் க.ம.இராஜேந்திரன் J.P (ஓய்வுநிலை கணக்காளர்)**

கடந்த 2019.10.21ஆம் திகதியன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் லயன் **க.ம.இராஜேந்திரன்** J.P (ஓய்வுநிலை கணக்காளர்) அவர்களது மறைவுச் செய்தி அறிந்து உடனடியாகவே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்து எமது துயரில் அருகிருந்து ஆற்றுப்படுத்தியவர்கள், எமது இல்லத்துக்கு வருகை தந்து துயரில் பங்குகொண்டவர்கள், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலித்தவர்கள், நினைவுரை நிகழ்த்தியவர்கள், அஞ்சலி நிகழ்வினை நடாத்திய ஞானவீர சனசமூக நிலைய நிர்வாகத்தினர், நினைவு பிரசுரங்களை வெளியிட்டோர், மலர்வளையங்களால் அஞ்சலித்தோர் மற்றும் நேரடியாக வருகை தர முடியாத போதிலும் தொலைபேசி, மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் ஊடாக தமது இரங்கல் களைப் பகிர்ந்து கொண்டவர்கள், அந்தியகால சேவைகளை வழங்கிய நிறுவனத்தினர், மரண அறிவித்தலை உடன் பிரசுரித்து உதவிய பத்திரிகை நிர்வாகத்தினர், ஆத்மசாந்தி இறுதி நிகழ்வு கிரியைகளை நடாத்தி தந்த குருக்கள் ஐயா அவர்கள், குடும்பத்தினருக்கான உணவுகளை வழங்கியவர்கள் மற்றும் பல வழிகளிலும் எமக்கு ஆறுதலாக இருந்து ஆற்றுப்படுத்தி உதவி களை வழங்கிய தங்கள் அனைவருக்கும் எமது சிரம் தாழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (2019.11.18) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 2019.11.20ஆம் திகதி (புதன் கிழமை) அன்று காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் **கொக்குவில், பொற்பதி வீதிச்சந்தியில் அமைந்துள்ள கஜன் மண்டபத்தில்** ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெறவுள்ளது.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.** (C-8245) இவ்வண்ணம்: **குடும்பத்தினர்**


# VACANCY

We are looking for a responsible fulltime Draftsman, you are expected A/L in Mathematics stream passed or Engineering technology stream passed student or Draftsman (Who studied at Technical college) to work on our projects. Send your CV to shiyasutha @gmail.com

(969)



# S.M.E

No.656, Hospital Road, Jaffna.
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

Vespa + பற்றி / எலக்ரிக்கல் Bike & Scoter விசேட கழிவுகளுடன்... Price - 90,000/= இல் இருந்து, உத்தரவாதம் 1&2 வருடங்கள்.

(978) தொடர்பு : **077 763 2454**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

# பதவி வெற்றிடம்



**நீங்கள் வெற்றிகரமான எதிர்காலம் ஒன்றை தெரிவு செய்ய விரும்புகின்றீர்களா?**

ஆசிய பசுபிக் வலயத்தில் புகழ்பெற்ற 100 வருட பழமை வாய்ந்த சர்வதேச ரீதியில் முதற்தர நிதி நிறுவனம் ஒன்றில் இணைந்து நிரந்தர தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம்...

- **வயதெல்லை:- 19 - 60**
- **கல்வித்தகைமை:- க.பொ.த. உயர்தரம் (A/L)**
- **வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் அனுபவம் உள்ளவர்கள், ஓய்வு பெற்றவர்கள், இல்லத்தரசிகள் மற்றும் இவ்வருடம் க.பொ.த உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்.**

நேர்முகத்தேர்வு : **18.11.2019** (திங்கட்கிழமை) காலை 9.30 மணி
AIA நிறுவனம் 62/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**T.P : 076 285 4387**

(C-8250)


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 - 08 - 1974 | 13 - 11 - 2019 |

## திருமதி புஸ்பகாந்தா சிறீதரன் (காந்தினி)

மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பகாந்தா சிறீதரன் (காந்தினி) 13.11.2019 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கிருபாமூர்த்தி - காலஞ்சென்ற சறோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாராயணப்பிள்ளை - செல்லம்மா தம்பதி களின் அருமை மருமகளும், சிறீதரனின் அன்பு மனைவியும் துளஷிதா, துளதீசன், துளஷ்மிதா ஆகியோரின் அருமைத் தாயாரும் ஜெயஹசன் (அமரர்), திருவேணி (லண்டன்), செந்துஷா (லண்டன்), வேதா (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சதீஸ்குமார் (லண்டன்), மகேஸ்வரன் (லண்டன்), சிவகலா (ஆசிரியர்), நகுலேஸ்வரன், நவரத்தினம், உதயகுமார், சிறிபத்மநாதன், மனோறஞ்சன், மனோறாஜ், நாகேஸ்வரி, இரத்தினபூபதி, மனோறஞ்சி ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (17.11.2019) ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**8ஆம் வட்டாரம்,**
**மண்டைதீவு.** (981)

**தகவல்: குடும்பத்தினர்**
**077 969 2216, 077 280 9265**

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 15 - 06 - 1936 | 18 - 10 - 2019 |

திருமதி

## சின்னத்துரை இராசமணி


ஆலம் விருட்சம் போல் வேரூன்றி விழுது விட்டு
கிளை பரப்பி நிழல் தந்த
எங்கள் அன்புத் தெய்வமே
பாரினிலே பந்தங்கள் பலரிருக்க
பக்கத்துணை நீங்கள் இன்றி பயனேது எமக்கு

18.10.2019 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி சின்னத்துரை இராசமணி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (17.11.2019) 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**109, திருமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.** (982)

தகவல்:-
**குடும்பத்தினர்**

# ஆதரவாளர்கள் புடைசூழ சென்று வாக்களித்தார் கோத்தபாய



(மிரிஹானை)
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்றுக் காலை மிரிஹானையில் தனது வாக்குப் பதிவினை மேற்கொண்டார்.(இ-7)

# குடும்பத்தினருடன் சென்று வாக்களித்தார் மகிந்த



(வீரகெட்டிய)
எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தனது. குடும்பத்தினருடன் வீரகெட்டிய, மெதமுலன டீ.ஏ.ராஜபக்ஷ மகா வித்தியாலயத்தில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

அவருடன், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட குடும்பத்தினரும் வாக்களித்தனர்.

இதேவேளை, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு சுமுகமான முறையில் நேற்று நடைபெற்றது. (இ-7)

# மக்களுடன் வரிசையில் நின்று வாக்களித்தார் ஜனாதிபதி



(பொலநறுவை)
ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் பொலநறுவை புதிய நகரத்திலுள்ள ஸ்ரீ வித்தியாலோக்க விகாரையில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

ஜயந்தி சிறிசேன உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் சகிதம் வித்தியாலோக்க விகாரைக்கு சென்ற ஜனாதிபதி முதலில் சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டு ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

அதன்பின்னர் அங்கு தமது வாக்கினை பதிவு செய்த ஜனாதிபதி வாக்களிப்பு நிலையத்திற்கு வருகை தந்திருந்த பொதுமக்களுடன் சுமுக கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். (இ-7)

# வாக்களிப்பதற்கு முன்னர் வழிபாடுகளில் ஈடுபட்ட சஜித்



(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்றுக் காலை 7 மணியளவில் ஆரம்பமாகியுள்ள நிலையில், புதிய ஜனநாயக முன்னணி சார்பாக போட்டியிட்ட அமைச்சர் சஜித் பிரேமதாஸவும், வாக்களிப்பதற்கு முன்னர் மத வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதற்கமைய சஜித் பிரேமதாஸ கதிர்காமம் கிரிவெஹெர மற்றும் கதிர்காம கோயிலில் மத வழிபாடுகளில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து பௌத்த மதகுருமார்களிடமும் அவர் ஆசி பெற்றுக்கொண்டார்.(இ-7)

# ஜனநாயகக் கடமையை நிறைவேற்றிய சஜித்




(அம்பாந்தோட்டை)
தனது ஜனநாயகக் கடமையை தான் சிறப்பாக ஆற்றிவிட்டதாக புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கை சோஷலிச குடியரசின் 8 ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலின் வாக்களிப்பு நேற்றுச் சனிக்கிழமை விறுவிறுப்பாக இடம்பெற்றது.

இந்நிலையில் அம்பாந்தோட்டையில் நேற்றுக்காலை ஜனநாயகக் கடமையை ஆற்றிவிட்டதாக டுவிட்டரில் பதிவிட்ட சஜித் வாக்களிக்கத் தகுதியுடைய அனைவரையும் சென்று வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அந்தப் பதிவில் "இன்று, ஆசியாவின் பழைமையான ஜனநாயக அரசின் மில்லியன் கணக்கான பொது மக்களுடன் சேர்ந்து எங்கள் மாநிலத் தலைவரை தேர்ந்தெடுக்கும் பணியில் பங்கேற்கிறேன்.

உங்கள் வாக்கு உங்கள் உரிமை, அது உங்கள் சக்தி, அது நம் எதிர்காலத்தை தீர்மானிக்கும். உங்கள் வாக்களிக்கும் சக்தியைப் பயன்படுத்துங்கள்" என்று பதிவிட்டார். (இ-7)

# பிரதமர் கொழும்பில் வாக்களிப்பு



(கொழும்பு)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தனது ஜனநாயகக் கடமையை நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 10.20 மணியளவில் நிறைவேற்றினார்.

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலின் வாக்களிப்பு நாடு முழுவதும் மிகவும் விறுவிறுப்பாக நேற்று இடம்பெற்றது.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் வாக்களித்து தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.(இ-7)

# கண்ணீர் அஞ்சலி

## செல்வி.வைஷகி சயந்தராஜன்



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி. கௌரி சயந்தராஜன் அவர்களின் மகள்

செல்வி.வைஷகி சயந்தராஜன்

அவர்கள் 15.11.2019 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவுத் துயரால் துன்புற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**

யா/கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை

(c-8248)

# பங்களாதேஷை இன்னிங்ஸால் வீழ்த்தியது இந்தியா

பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், இந்தியா அணி இன்னிங்ஸ் மற்றும் 130 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்தூர் மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 150 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 493 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து, 343 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய பங்களாதேஷ் அணி, 213 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்தியா அணி இன்னிங்ஸ் மற்றும் 130 ஓட்டங்களால் வெற்றியை பதிவு செய்தது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக 330 பந்துகளில் எட்டு



சிக்ஸர்கள் 28 பவுண்டரிகள் அடங்கலாக 243 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட இந்தியாவின் மாயங் அகர்வால் தெரிவு செய்யப்பட்டார்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி. ஜெ. சுதாயினி அவர்களின் பாசமிகு தாயார்

அமரர் பொன்னுப்பிள்ளை விஸ்வலிங்கம்

அவர்களின் பிரிவினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரி கழகம்**

யாழ் கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம், காங்கேசன்துறை

(c-8249)

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 - 04 - 1962



மறைவு 16 - 11 - 2019

## திருமதி தர்மகுலசிங்கம் ஸ்ரீரஞ்சினி

நெல்லியடி மகாத்மா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மகுலசிங்கம் ஸ்ரீரஞ்சினி நேற்று 16.11.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் வேதர்மகுலசிங்கம் (முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும், ஜசீந்திரன், தனேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(17.11.2019)* ஞாயிற்றுக்கிழமை பிற்பகல். 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர் (c-8247) 0766155581, 0776146339

# மரண அறிவித்தல்



திருமதி

## கண்மணி (கமலா) பரமசிங்காரம்

ஆவரங்கால் மேற்கு சர்வோதயா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமசிங்காரம் - கண்மணி அவர்கள் 15.11.2019 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன்-கட்டைச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், முருகன் பரமசிங்காரத்தின் (ஓய்வுநிலை உற்பத்தி முகாமையாளர்) அன்பு மனைவியும், தங்கவேலு, சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளனின் (லண்டன்) அன்புத் தாயாரும், அனுஷியாவின் அன்பு மாமியும், உமையாழினி, யாழிசனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க இறுதிக் கிரியைகள் யாவும் இன்று 17.11.2019 ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சர்வோதய வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

(992)

தகவல்:-
குடும்பத்தினர்
T.P:-(0761840304),(0212058110)

# தர்மசாஸ்தா ஐயப்பனின் விரதமாலை அணியும் வழிபாடுகள் இன்று பக்திபூர்வமாக ஆரம்பம்

சபரிமலை யாத்திரை மேற்கொள்ள நினைப்பவர்கள் குருசாமி ஒருவரை நாடிச்செல்வர். அவர் அனுமதியைப் பெற்று அவருடன் இணைந்து யாத்திரையை மேற்கொள்வர்.

இங்கு ஒருவர் தனித்தே யாத்திரை மேற்கொள்வதையும் விட குருவுடன் இணைந்து யாத்திரை மேற்கொள்வது என்பது கிடைத்தற்கரிய பாக்கியம்.

இந்தப் பாக்கியம் சபரிமலை யாத்திரை மேற்கொள்ளும் ஒவ்வொரு ஐயப்ப பக்தருக்கும் கிடைக்கிறது. கலையானாலும் சரி, கல்வியானாலும் சரி எமை நன்முறையில் வழிநடத்திச் செல்ல குருவானவர் உதவி புரிகிறார். அந்த வகையில் ஆன்மீக குருவானவர் சிறப்பிடம் பெறுகிறார்.

இந்து மதத்தில் குருவுக்கு மேலான இடம் வழங்கப்பட்டுள்ளது. சபரிமலை யாத்திரை என்பது ஓர் ஆன்மீக யாத்திரை. அதனை குருவின் துணைகொண்டு மேற்கொள்வதே சாலச் சிறந்தது.

## மாலை அணிதல்

எந்த ஒரு காரியத்தை செய்யும் முன்பும் சங்கல்பம் செய்து கொள்வது என்பது முக்கிய கடமையாக கருதப்படுகிறது. மனதில் உறுதியான சங்கல்பம் இல்லாமல் செய்யும் காரியங்கள் முழுமையடைவதில்லை. சபரி மலைக்குப் போகும் முன்பாக மாலை அணிந்து கொள்வது என்பது சங்கல்பம் செய்து கொள்வதே. அதாவது சீரிய முறையில் விரதத்தைக் கடைப்பிடித்து நல்ல முறையில் யாத்திரை மேற்கொண்டு பகவானது மேலான தரிசனம் காண்பேன் என்று சங்கல்பம் செய்து கொண்டிருப்பதையே முத்ரை மாலை உணர்த்துகிறது.

## மார்கழி மாதத்தின் சிறப்பு


மார்கழி மாதம் மேலான மாதம். மாதங்களில் நான் மார்கழி மாதமாக இருக்கிறேன் என்று பகவான் ஶ்ரீகிருஷ்ணன் கூறுகிறார். தவிர மார்கழி மாதம் தான் தேவர்களுக்கெல்லாம் பிரம்மமுகூர்த்த காலம். அதிகாலைப் பொழுதை நாம் இறைவழிபாடு இயற்றும் காலமாக கொண்டால் வாழ்வில் நல்ல முன்னேற்றம் கிட்டும். ஆண்டாள் திருப்பாவை பாடியதும் மார்கழி மாதமே. மார்கழிக் குளிரில் குளிப்பதும் இரவு வெறுந்தரையில் படுப்பதும் உடற்பற்றைக்குறைக்கிறது.

## தீட்சை பெறுதல் மற்றும் தாடி வளர்த்தல்

ஒருவன் தன்னையும் தன் உடலையும் மறக்க மறக்க இறைவனது நினைதல் அவனுள்ளே அதிகரிக்கிறது. தன்னையும் தன் அழகையும் மறந்து இறைவனையே நினைக்கும் போது இறைவனது அருள் அவனுக்குப் பரிபூரணமாகக் கிடைக்கிறது. இறையருள் கிடைக்க தன்னை மறக்க வேண்டும் என்பதை உணர்த்துவதே தீட்சை.

## ஐயப்பன் சுலோகம் கூறுதல்

சுவாமியே சரணம் ஐயப்பா என்று ஐயப்பன் சுலோகத்தை சாதாரணமாகவே வாய்மொழிந்து கொள்ளலாம். ஆனாலும் அதனை அசைவியக்கத்தின் நயத்தோடு உரக்கக் கூறுவது சுவாசப் பயிற்சிக்கு ஒப்பானதாக விளங்குகிறது. பிரணாயாமம் செய்வதால் கிடைக்கும் பலனை இதனூடே பெற்றுக் கொள்ளமுடியும். அவ்விதம் கூறும் போது எமை அறியாமலேயே மனம் ஒருமைப்பட்டு பகவானின் பாதக்கமலங்களில் லயித்து விடுகிறது. இந்த அனுபவம் வார்த்தைகளால் விளக்கிக் கூறிவிட முடியாத இன்பத்தைத் தரும்.



## மாலை அணிந்தவர்களை ஐயப்பா என்றும் சுவாமி என்றும் அழைத்தல்

ஐயப்ப விரதத்தைக் கடைப்பிடிப்போர் விரதம் மேற்கொள்ளும் ஒவ்வொருவரையும் ஐயப்ப சுவாமி யாகவே உருவகப்படுத்திக் கொள்கின்றனர். இத்தகு மனோ நிலை கொண்டு மேன்மைப்படுத்தப்படுகின்றனர். இது கிடைத்தற்கரிய மிக உன்னதமான நிலையாக கருதப்படுகிறது.

## இருமுடியின் தத்துவம்

இருமுடியில் முன் முடியில் அதாவது முன்பகுதியில் சுவாமிக்கு வேண்டிய அபிஷேகப் பொருட்களும் நைவேத்தியப் பொருட்களும் பின் முடியில் பக்தனுக்குரிய அதாவது யாத்திரிகனுக்கு வேண்டிய பொருட்களும் கொண்டு செல்லப்படும். சபரி மலையை அண்மிக்கும் போது பின் முடியில் உள்ள பொருட்கள் அனைத்தும் உபயோகப் படுத்தப்பட்டு பகவான் சந்நிதானத்தை அடையும் பொழுது இருமுடியில் பகவானது பிரசாதங்கள் மட்டுமே இருக்கும். பகவானை அண்மிக்கும் பொழுது யாத்திரிகர்களின் பொருட்கள் குறைவடைந்துவிடும் .

முடிவில் பகவானைத் தரிசித்துத் திரும்பும் பொழுது எமக்கென்று இருப்பது இறை அருள் உடைய அருட் பிரசாதம் ஒன்றாகவே இருக்கும். இதனையே இரு முடியின் தத்துவமாக கொள்கின்றனர்.

## நெய்த் தேங்காய்

நாம் சபரி மலைக்கான யாத்திரையை ஆரம்பிக்கும் போது நெய் நிரப்பி எடுத்துச் செல்லும் தேங்காயை சபரிமலையில் உடைத்துப் பார்க்கும் போது அது நன்கு உறைந்து பூரணம் போல் காட்சியளிக்கும். குருவானவர் முக்கண்களில் ஒன்றான அகக் கண்ணை திறந்து அதன் ஊடே பக்தி என்ற நெய்யை எம் மனதில் நிரப்பி விடுகிறார். சிறிது காலம் செல்ல அதுவே பூரண ஞானமாக வெளிப்படுகிறது. இதுவே நெய்த் தேங்காய் கொண்டுள்ள உட்கருத்து.

## இருமுடியை தலையில் ஏந்திச் செல்லல்

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அந்த வகையில் நாம் ஒருவரைப் புகழ்ந்து போற்றினால் ஏன் அவரை தலைமேல் வைத்துத் தாங்குகிறாய்....? என்று கேட்கும் வழக்கத்தை அறிந்து கொண்டுள்ளோம். இங்கு தலை மீது தாங்குவது என்பது அவ்வளவு மேலான விடயமாக கருதப் படுகிறது. தலைமீது ஒரு பொருளைத் தாங்கி வருகிறோமென்றால் அதற்கு அவ்வளவு முக்கியத்துவத்தை நாம் கொடுக்கிறோம் என்பது அர்த்தம். பரதன் ஶ்ரீராமனின் பாதுகையைத் தோளிலோ தோள் பையிலோ கொண்டு செல்லவில்லை. மாறாக தன் தலைமீதுதான் சுமந்து நடந்து சென்றான் என்பதை இராமாயணத்தில் பார்க்கிறோம் ஆகையால் இருமுடியைத் தலைமீது ஏந்திச்செல்வதுதான் பொருத்தமானது.

## பதினெட்டாம் படியின் தத்துவம்

ஐந்து இந்திரியங்கள், அன்னமிய கோசம், எட்டு ராகங்கள், மூன்று குணங்கள், பிராணமய, மனோமய கோசங்கள், வித்யா, சுவித்யா இவற்றைக் கடப்பது என்பது விஞ்ஞானமய, ஆனந்த மய கோசங்களைக் கடப்பது. எனவே பதினெட்டு தத்துவங்களையும் கடந்தால் ஶ்ரீ ஐயப்பனைச் சென்று அடையலாம் என்பதே பதினெட்டாம் படியின் தத்துவமாக கொள்ளப்படுகிறது.

மேலும் பதினெட்டுப்படி என்பது பதினெட்டுச் சித்தர்களையும் தேவதைகளையும் குறிப்பாகவும் ஒரு ஐதீகமும் உண்டு. அவர்களுக்குச் செய்யும் பூஜையே படிப் பூசையாகும்.

## ஜோதியின் தத்துவம்

கடவுளுக்கு உருவமும் உண்டு. அருவமும் உண்டு. ஆக சபரிமலையில் ஏகாந்தமாய் சின்முத்திரையுடன் கூடிய யோக வடிவில் உருவம் கொண்ட அதே மூர்த்தியே அருவமான ஜோதி வடிவமுமானவன் என்பதை உணர்த்துவதே ஜோதி. அந்த ஜோதியின் பிரகாசத்தினால் தான் சூரிய, சந்திரர்கள் பிரகாசிக்கிறார்கள்.

செந்நாப்புலவர்.மதுரகவி.
காரை.எம்.பி.அருளானந்தன்

## இராசி பலன்

**மீனம்:** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம் புரியாத சந்தேசம் குடிகொள்ளும், பித்தசம்பந்தமான ரோக பயமுண்டு, வாகன சுகமுண்டு.

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**இடபம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** எப்படி நினைக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | சந் ராகு |
| | இராசி பலன் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அனுசம், கேட்டை | | |
| சனி, குரு, கேது | சூரி, சுக் | செவ் புத | |

17.11.2019

கார்த்திகை 01, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

பஞ்சமி மாலை 5.40 மணிவரை

புனர்பூசம் முன்னிரவு 10.46 மணிவரை

சுபநேரம் 9.08.10.38 மணிவரை

இராகுகாலம் 4.38.6.08 மணிவரை

வளவன்

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

**மகரம்:** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும், பெண் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.


**சிம்மம்:** அந்நிய தேச தொடர்புகள் அனுகூலம் தரும், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சிறப்பான நாள், போசன நன்மையுண்டு.

**தனுசு:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், தொலைபேசி வழியில் எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.


**விருச்சிகம்:** அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் கிடைக்கலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொறுமையால் பெருமை காணும் நாள்.

**துலாம்:** விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், தடைகளை தாண்டி தன்னிறைவு காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கூடும்.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலையில் வாக்களித்தார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயத்தில் வாக்களித்தார்.



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் வாக்களித்தார்.



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நாவலர் கலாசார மண்டபத்தில் வாக்களித்தார்.



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் குடத்தனை அ.த.க.பாடசாலையில் நேற்றுக் காலை 7 மணியளவில் வாக்களித்தனர்.

(படங்கள்:- வர்ணன், மகாலிங்கம், 101)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(சாவகச்சேரி)

புதிய சுதந்திரன், தமிழ் சி.என்.என்.ஆகியவற்றின் நிர்வாக இயக்குநர் கலாநிதி முத்துக்குமாரசுவாமி அகிலகுமாரன் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் மாவட்டநீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (இ-7-114)

வைத்தியசாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த

## அம்புலன்ஸ் மீது கல்வீச்சு



(இளவாலை)

இளவாலை பிரதேச வைத்தியசாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அம்புலன்ஸ் மீது கல்வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. கல்வீச்சு தாக்குதலால் அம்புலன்ஸ் கண்ணாடிகள் உடைந்துள்ளன. இது தொடர்பில் இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-5-116)



கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் தேசிய வாசிப்பு மாதத்திற்கான பரிசளிப்பு விழா கடந்த 13 ஆம் திகதி தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக கல்லூரியின் உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி கல்பனா சந்திரசேகர், வைத்திய கலாநிதி வை.தியாகராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- சக்தி)

## "கீர்த்தி ஸ்ரீ" விருது வழங்கல்



(வவுனியா)

இலங்கை சமாதான நீதவான்களின் பேரவையின் வருடாந்த மகாநாடு வவுனியா அருந்ததி மகாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது சமாதான நீதவான் பதவியில் நீண்டகாலமாக சிறந்த சேவையாற்றியவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் டாக்டர் 'தேசமானிய' கந்தப்பு லோகேஸ்வரன் ஜே.பி., 'கீர்த்தி ஸ்ரீ' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (இ

# இலக்கத் தகடு இல்லாத வாகனத்தில் சென்றவர்கள் பலவந்தமாக வாக்குச் சாவடிக்குள் நுழைய முயற்சி

## பேருந்துகள் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(நாவலப்பிட்டி)

இலக்க தகடு இல்லாத ஜீப் வண்டியில் சென்ற சிலர் நேற்றுக் காலை கண்டி, நாவலப்பிட்டியவி லுள்ள வாக்குச் சாவடி ஒன்றுக் குள் பலவந்தமாக நுழைய முயற் சித்ததாக தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் தெரி வித்தது.



நாவலப்பிட்டி தொலஸ்பாகே பிரதேசத்திலுள்ள கனிஷ்ட பாட சாலையில் அமைக்கப்பட்ட வாக் குச் சாவடிக்குள் இவர்கள் பலவந் தமாக நுழைய முயற்சித்தனர் எனவும் தேர்தல் வன்முறை கண் காணிப்பு நிலையம் தெரிவித்தது.

இதேவேளை அநுராதபுரம் தந்திரிமலை பகுதியில் முஸ்லிம் வாக்காளர்கள் பயணித்த பேருந் துகள் மீது இனந்தெரியாத நபர் கள் நேற்றுக்காலை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் பேருந்துகள் செல்வதை தடுக்க வீதியில் தடைகளை ஏற்படுத்தியி ருந்தனர் என்பது குறிப்பிடத்தக் கது. (இ-7)

# வீதிகள் மூடப்படவில்லை

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு நாடு முழுவதும் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சில வீதிகள் மூடப்பட்டிருப்பதாக செய்யப்பட்ட பிரசாரம் முற்றிலும் பொய்யானது எனவும் வாக்கெடுப்பை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்துவதற்கு தேவையான போதியளவு பாதுகாப்பை பொலிஸார் வழங்கியதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# இரு கட்சிகளின் ஆதரவாளர்கள் இடையே ஹப்புத்தளையில் மோதல் - மூவர் படுகாயம்

(ஹப்புத்தளை)


ஹப்புத்தளையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மோதலில் மூவர் காயமடைந்தனர்.

இதன்போது காயமடைந்தவர் கள் சிகிச்சைகளுக்காக வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்ட தாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு ஆண்கள் மற்றும் பெண் ஒருவர் உள்ளிட்டவர் களே இவ்வாறு வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டனர்.

இரு கட்சிகளின் ஆதரவாளர் களுக்கு இடையிலேயே இவ்வாறு மோதல் சம்பவம் இடம் பெற்றதா கவும் இச்சம்பவம் தொடர்பாக பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# வாக்கெடுப்பு நிலையத்தில் குரங்குகள் தொல்லை!



(கல்குடா)

கல்குடா பகுதியில் வாக்களிக் கச் சென்ற வாக்காளர்களுக்கு குரங்குகள் தொல்லை கொடுத்த சம்பவமொன்று நேற்று சனிக் கிழமை பதிவானது.

கல்குடா தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் வாக்கெடுப்பு நிலையக் கூரை யிலும் மரங்களிலும் குரங்குகள் அங்கும் இங்கும் பாய்ந்து சல சலப்பை ஏற்படுத்தின.

அத்துடன் குறித்த குரங்கு கள், வாக்கெடுப்பு நிலையம் அமை ந்துள்ள இடத்துக்கும் வந்து, வாக்காளர்களுக்கு தொல்லை கொடுத்தன.

இதன்போது தேர்தல் பணி யிலிருந்த அதிகாரிகள், சில இளைஞர்களின் உதவியுடன் குரங்குகளை வாக்கெடுப்பு நிலை யத்திலிருந்து வெளியேற்றி னர். (இ-7)

# கேகாலையில் வாக்களித்தவர்கள் மீது தாக்குதல்

## பாதுகாப்பு பலப்படுத்தல்

(கேகாலை)

கேகாலை - தெரணியகல பகுதியில் வாக்களித்த சிலர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதல் சம்பவம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித் தது.

ஒரு தரப்பினருக்கு வாக்களி க்க வேண்டுமென சிலர் அச்சு றுத்தியதாகவும் அதையும் மீறி தாம் விரும்பிய வேட்பாளருக்கு வாக்களித்த சிலர் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலு வலகம் தெரிவித்தது.

இதேவேளை வீடொன்றுக் குள் நுழைந்த சிலர், வீட்டிலி ருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதோடு ஒருவரை கத்தியால் வெட்டியுள்ளனர்.

இதனால், அங்கு பதற்றமான சூழல் நிலவுவதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. (இ-7)

# 600 வாக்குச் சீட்டுக்களுடன் காலையில் கைதானவர் மாலையில் விடுதலை!

(தங்கஸ்வல)

600 வாக்குச் சீட்டுக்களுடன் நேற்றுச் சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்ட நாகொட பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் பொலிஸ் பிணையில் விடுவிக் கப்பட்டார். தல்கஸ்வல பகுதியில் வைத்தே நேற் றுக் காலை பொலிஸார் இவரைக் கைது செய்தனர். குறித்த பகுதிக்கு பொறுப் பான பிராந்திய தேர்வு அலுவலகர் வழங் கிய தகவலுக்கமையவே நாகொட பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கைது செய்யப்பட்டார். எனினும் குறித்த சந்தேக நபர் பொலிஸ் பிணையில் நேற்று மாலை விடுவிக்கப்பட்டார். இச் சம்பவம் தொடர்பாக நாகொட பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# வாக்களிப்பை புறக்கணிக்குமாறு போலிப் பிரசாரம்

## ACJU விளக்கம்

(கொழும்பு)

முஸ்லிம்களை வாக்களிக்க வேண்டா மெனக் கூறி நேற்றுப் பொய்யான ஒரு அறிக்கை பரவியது என அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தெரிவித்தது.

தாம் அவ்வாறான எந்தவித அறிக்கை யையும் வெளியிடவில்லை எனவும் அந்த அமைப்பு தெரிவித்தது. (இ-7)


**கமுகு நாற்றுக்கள் விற்பனைக்கு**

பக்கற்றில் போடப்பட்ட தரமான கமுகு நாற்றுக்கள் தொகையாக விற் பனைக்குண்டு.

தொடர்பு: 077 958 1741 (952)

**மணமக்கள் தேவை**

வெளிநாட்டில் உள்ள மணமகன், மணமளுக்கு படித்த பட்டதாரி மணமக்கள் தேவை. உள்ளூரில் உள்ள மணமகனுக்கும், மணமக ளுக்கும் படித்த பட்டதாரி மண மகள், மணமகன் தேவை.

(Viber)

0094 777 456 837

076 559 0349 (979)

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 4<br>கி.பா:24சூரிசெவ் 9 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:B.Sc,ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரசதொழில்<br>தொ.இ: B/10251 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 19 ¾சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Engineer, Australiaவில் உயர்கல்விகற்கிறார்<br>எதிர்பார்ப்பு:Australia PR<br>தொ.இ: G/10289 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:O/L,நகைத்தொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/10252 | பிறப்பு: 1993கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 45<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:B.Sc<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி வகிப்போர் வேறு சமயத்தவரும் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/10292 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 1சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:O/L,தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/10253 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 26<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BA in Business Management<br>தொ.இ: G/10293 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:Aerobic Engineering, Business<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/10255 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 67சூரிசெவ் 7 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MBBS, MD, Doctor<br>எதிர்பார்ப்பு: தகைமைக்கேற்பவரன் (உள்நாடு)<br>தொ.இ: G/6432 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

**விற்பனைக்கு**

Hitachi Excavetor 120 year 1999-12,50,000/=

JCB year 1990 Registration 2003-13,50,000/=

Kubata Excovetor 27 14,00,000/=

077 480 1734 (955)

# திருமலையில் வாக்களித்தார் இரா.சம்பந்தன்



(திருகோணமலை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், திருகோணமலையில் வாக்களித்திருந்தார்.

புனித மரியாள் கல்லூரி வாக்களிப்பு நிலையத்தில், நேற்றுக் காலை தனது வாக்கினைப் பதிவு செய்தார். (இ-7)



நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் மட்டக்களப்பு கொக்குவில் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று சனிக்கிழமை காலை தனது வாக்கினைப் பதிவு செய்தார்.(இ-7)



அமைச்சர் மனோகணேசன் தெஹிவளை களுபோவில ஸ்ரீ மஹா விகாரையில் நேற்று வாக்களித்தார்.

# மூன்று மணித்தியாலங்களில் 69 வன்முறைச்சம்பவங்கள்

(கொழும்பு)

நேற்று முற்பகல் காலை 10 மணி வரையான் 3 மணித்தியாலங்களில் 69 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகின என தர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் தெரிவித்தது.

இவற்றுள் பெரும்பாலானவை சட்டவிரோத பிரசாரம் மற்றும் அச்சுறுத்தல் குற்றங்கள் என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியது.

அதன்படி ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவிற்கு எதிராக 49 முறைப்பாடுகளும் புதிய ஜனநாயக முன்னணிக்கு எதிராக 14 முறைப்பாடுகளும் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக இரு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்தன. (இ-7)

# குறைந்தளவிலான வன்முறைகள் பதிவான ஜனாதிபதித் தேர்தல்

## தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 716 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனினும் கடந்த ஜனாதிபதி தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் தேர்தல் சட்டமீறல்கள் இடம்பெற்ற தேர்தலாக இம்முறை ஜனாதிபதித் தேர்தல் அமைந்திருக்கிறது என்று தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் தெரிவித்தது.


தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உலக வர்த்தக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அந்நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ரசங்க ஹரிசந்திர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுவரை தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்திற்கு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 716 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் 406 தேர்தல் சட்டமீறல்களும், அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் 203 முறைப்பாடுகளும், 36 தேர்தல் வன்முறை தொடர்பான முறைப்பாடுகளும், சமூகவலைத்தளங்களில் வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் மற்றும் பொய்யான செய்திகளைப் பதிவிடுதல் தொடர்பில் 70 முறைப்பாடுகளும் உள்ளடங்குகின்றன. அத்தோடு இவற்றுடன் சம்பந்தப்பட்டதாக 81 கைதுகள் இடம்பெற்றிருக்கின்றன.

எனினும் கடந்த ஜனாதிபதி தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் தேர்தல் சட்டமீறல்கள் இடம்பெற்ற தேர்தலாக இம்முறை ஜனாதிபதித் தேர்தல் அமைந்திருக்கிறது.

ஆனால் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முடிவிற்குக் கொண்டுவந்த பின்னரும் சமூக வலைத்தளங்களின் ஊடான வன்முறைகளைத் தூண்டும் விதமான பதிவுகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மலையகத்தில் கடும் மழை



(ஹற்றன்)

மத்திய மலையக மேற்கு பிரதேசத்தில் நேற்று நண்பகல் கடும் மழை பெய்தது.

ஹற்றன், பொகவந்தலாவ, நோர்வூட், மஸ்கலிய ஆகிய நீரேந்து பகுதிகளிலேயே இவ்வாறு கடும் மழை பெய்தது. (இ-7)

# விபத்தில் சிறுவன் உயிரிழப்பு

(மாவனெல்ல)

கொழும்பு - கண்டி பிரதான வீதியின் மாவனெல்ல பகுதி யில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுவனொருவன் உயிரிழந்ததுடன் ஆட்டோ சாரதி படுகாயமடைந்தார். நேற்று சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பதங்கல என்ற இடத்தைச் சேர்ந்த ருச்சிர சங்தீப (வயது 16) என்ற சிறுவனே உயிரிழந்தார்.

பிரதான வீதியில் புகைப் பரிசோதனை செய்யும் இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் கண்டியிலிருந்து வந்த ஆட்டோ மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

மேலும் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் சடலம், பிரேத பரிசோதனைக்காக மாவனெல்ல வைத்தியசாலையில் வைக்கப்பட்டதுடன் படுகாயமடைந்த ஆட்டோ சாரதி சிகிச்சை பெற்று வருகிறார். குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# கொங்கிறீட் தூண் விழுந்ததில் மாணவி பரிதாபமாகப் பலி!

(ஹக்கல)

நுவரெலியா - ஹக்கலயிலுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்றுவந்த மாணவியொருவர் பாடசாலையில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்தார். குறித்த மாணவி பாடசாலையை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, திடீரென அங்கிருந்த கொங்கிறீட் தூண் ஒன்று இடிந்து விழுந்ததில் மாணவி பரிதாபமாக பலியானார். 9ஆம் ஆண்டில் கல்வி கற்று வந்த மாணவியே இவ்வாறு உயிரிழந்தார். (இ-7)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

(மொறவக்க)

பாரவூர்தி ஒன்றிற்கு மரக்கட்டைகளை ஏற்றிக்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி நபரொருவர் பரிதாபமாக பலியானார்.

நேற்று முன்தினம் மாலை குறித்த நபர் தனது குழுவினருடன் இணைந்து மேற்படி பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே மின்சாரம் தாக்கியது.

இவ்வாறு மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான மற்றுமொரு நபர் மொரவக்க வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சீரற்ற வானிலையால் மத்தளவுக்கு விமானம் ஒன்று திருப்பி விடப்பட்டது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வருகைதந்த விமானமொன்று நேற்று பிற்பகல் மத்தள விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டது. கட்டுநாயக்கவில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 140 | 150 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 130 | 130 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 280 | 250 | 300 |
| தக்காளி | 120 | 120 | 120 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 90 | 80 |
| கோவா | 140 | 150 | 150 | 110 | 160 |
| கரட் | 200 | 250 | 280 | 200 | 320 |
| பூசணி | 60 | 70 | 60 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 90 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 350 | 320 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 140 | 160 |
| பாகற்காய் | 250 | 250 | 250 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 30 | 60 | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 140 | 140 | 120 | 160 | 200 |
| லீக்ஸ் | 250 | 250 | 320 | 200 | 320 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 60 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 320 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 550 | 310 | 320 |
| போஞ்சி | 160 | 140 | 150 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 130 | 120 | 160 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 80 | 50 | 60 |
| தேசிக்காய் | 150 | 150 | 150 | 150 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 45-60 | 48 | 30-50 |
| இராசவள்ளி | 360 | — | 400 | 160 | 280 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 100 | — | 40 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 80 | 160 | 100 |

# மலையகத்திலும் சுமுகமான முறையில் வாக்குப் பதிவுகள்






(ஹற்றன்)

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமானது.

மலையகத்தில் பெருந்தோட்ட மக்கள் உட்பட அனைவரும் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தமது வாக்குகளைப் பதிவிட்டனர்.

அதேவேளை, பாதுகாப்புப் பணியில் பொலிஸார் ஈடுபட்டதுடன், உள்நாட்டு வெளிநாட்டு சர்வதேச கண்காணிப்பாளர்களும் பணியில் ஈடுபட்டனர். (இ-7)

# ஹக்கீமிற்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு



(கொழும்பு)

அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது.

ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகத் தெரிவித்து பௌத்த தகவல் மையத்தால் இந்த முறைப்பாடு நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (இ-7)

# 25 வாக்குச் சீட்டுக்களுடன் இருவர் கைது

(வெல்லவ)

வெல்லவ பகுதியில் வாக்குச் சாவடி அருகே மோட்டார் சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 25 போலி வாக்குச் சீட்டுகளுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று (சனிக்கிழமை) காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 36 மற்றும் 38 வயதுடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை பொலிஸார் சோதனையிட்டபோது, இருக்கைக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 25 வாக்குச் சீட்டுக்களைக் கண்டறிந்தனர்.

அதனைத் தொடர்ந்தே குறித்த மோட்டார் சைக்கிளை பயன்படுத்திய இருவரை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (இ-7)

# ஆதரவாளர்களுடன் சென்று வாக்களித்த அநுர



(பஞ்சிகாவத்தை)

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க வாக்களித்தார்.

பஞ்சிகாவத்தையில் நேற்றுச் சனிக்கிழமை காலை அவர் தனது வாக்கினைப் பதிவு செய்தார். (இ-7)

# நயினாதீவு சபரீச ஐயப்பனின் மகரஜோதி பெருவிழா இன்று



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு சபரீச ஐயப்பனின் மண்டல பூஜை மகரஜோதிப் பெருவிழா உற்சவம் இன்று தொடக்கம் எதிர்வரும் 14.01.2020 வரை 60 நாட்கள் நடைபெறும். தினமும் அபிஷேகம், தீபாராதனை, பஜனை, 18 திருப்படி பூஜைகள் என்பன சிறப்பாக நடைபெறும். இன்று விரதம் அனுஷ்டிக்கும் சுவாமிகளுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வும் நடைபெறும். (இ)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி புவனேஸ்வரி சிவஞானகுரு



ஈவினையைச் சேர்ந்த திருமதி
புவனேஸ்வரி சிவஞானகுரு அவர்
கள் 14.11.2019 அன்று காலமானார்.
தவலிங்கம் (தவிசாளர் எல்லை
நிர்ணய ஆணைக்குழு ஓய்வு நிலை
நில அளவையாளர் நாயகம்)
அவர்களின் அன்பு மாமியாரின்
மறைவினால் துயரடைவதுடன்
அவரின் குடும்பத்தினருக்கு
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
வல்லிபுர மாயவனை
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்: 27 - 04 - 1936
மறைவு: 14 - 11 - 2019

(A-8246)

பொ.அருணாசலம்
ஓய்வு பெற்ற நில அளவைத் திணைக்கள பணியாளர்.


# அம்பாறையில் ஆர்வத்துடன் வாக்களித்த மக்கள்





(அம்பாறை)

இலங்கையின் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நேற்றுக் காலை 7 மணியளவில் ஆரம்பமானது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள் உட்பட அனைவரும் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று தங்களுடைய வாக்குகளைப் பதிவு செய்தனர்.

அதேவேளை பாதுகாப்புப் பணியில் பொலிஸார் ஈடுபட்டதுடன், உள்நாட்டு வெளிநாட்டு சர்வதேச கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் 523 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெற்றது. மேலும் 53 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (இ-7)

# தேர்தலுக்காக கடுமையான பொலிஸ் பாதுகாப்பு



(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலுக்காக கடுமையான பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியகட்சருமான ருவான் குணசேகர தெரிவித்தார்.

வாக்களிப்பு நிலையங்களை அண்டிய பகுதிகளில் நேற்று விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வாக்களிப்பு நிலையங்களில் இருந்து 500 மீற்றர் பகுதிக்குள் அவசியமற்று நடமாடுவது தண் டனைக்குரிய குற்றமாகும் எனவும் வாக்களிப்பு மத்திய நிலையத்தில் உள்ள அதிகாரிகளின் கடமைகளுக்கோ, வாக்களிக்க வரும் வாக்காளர்களுக்கோ பாதகம் ஏற்படும் வகையில் செயற்படும் நபர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நேற்று நாடு முழுவதும் அமைதியான முறையில் நடைபெற்றதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரட்நாயக்க தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து 39,553 பேரே இலங்கை வருகை

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலை இல க்கு வைத்து வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் பெருந் தொகையானோர் இலங்கை வரவுள்ளதாக கடந்த காலங்களில் பாரிய பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் பெரும் அதிகரிப்பை காட்டவில்லையென குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

2019 நவம்பர் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை 39 ஆயிரத்து 553 பேர் இலங்கை வந்துள்ளனர்.

இதேபோன்று 2018 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை 38 ஆயிரத்து 325 பேர் இலங்கை வந்துள்ளனர்.

2019 ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை மட்டும் 39 ஆயிரத்து 4 பேர் இலங்கை வந்துள்ளனர்.

2019 நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் 809 பேர் வந்துள்ளனர். 2018 ஆம் ஆண்டிலும் இதே மாதம் இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள 723 பேர் இலங்கை வந்துள்ளனர்.

2018 ஒக்டோபர் மாதம் இலங்கை வந்த வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 128 என பதிவாகியுள்ளது. இதில் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் 2 ஆயிரத்து 73 என்று தரவுகள் தெரிவிக்கின்றன.

2019 ஒக்டோபர் மாதம் இலங்கை வந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 297 ஆகவும் இதில் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் 2 ஆயிரத்து 241 ஆகும்.

இந்தத் தரவுகளை ஆராயும் போது இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக விசேடமாக இலங்கையரின் வருகையில் அதிகரிப்பு காணப்படவில்லையென்பது தெரியவருகிறது. (இ-7)

# தெற்காசிய வர்த்தக திறன் விருது வழங்கல் விழா ஜனாதிபதி தலைமையில்



(கொழும்பு)
2019 ஆம் ஆண்டிற்கான சப்சா எனப்படும் தெற்காசிய வர்த்தக திறன் விருது வழங்கல் விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தெற்காசிய புரிந்துணர்வு மாநாடு, சப்சா 2019 விருது வழங்கல் விழாவை ஏற்பாடு செய்திருந்தது. தெற்காசிய நாடுகளில் அரசியல், சமூக, பொருளாதார, நிதி மற்றும் நிறுவனம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கி விருதுகள் வழங்கப்பட்டன. (இ-7)

# கல்வியியலாளர் சேவை-III உத்தியோகத்தர் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

(கொழும்பு)
ஆசிரியர்கல்வியலாளர் சேவை III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை 2020 மாசி மாதம் கொழும்பில் இடம் பெறவுள்ளது எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பான மேலதிகத் தகவல்களை அறிய நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானியைப் பார்வையிடவும். (இ-10)

# வாசகரால் நூல்கள் அன்பளிப்பு



(சாவகச்சேரி)
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் மீசாலை பொது நூலகத்திற்கு வாசகர் ஒருவர் ஒரு தொகுதி நூல்களை அன்ப-ளிப்பாக வழங்கினார். (இ-5-30)

# வாக்கினைப் பதிவு செய்தார் ஹிஸ்புல்லா




(காத்தான்குடி)
**ஜனாதிபதி வேட்பாளர் ஹிஸ்புல்லா தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.**


**அதற்கமைய காத்தான்குடி அல்மில்லத் வித்தியாலயத்தில் அவர் நேற்றுச் சனிக்கிழமை காலை தனது வாக்கினைப் பதிவு செய்தார். (இ-7)**



**யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் பாசையூர் சென்.அன்ரனீஸ் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தில் வாக்களித்தார்.**

# மட்டக்களப்பில் அமைதியான முறையில் வாக்களிப்பு







(ஏறாவூர்)
மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதியான முறையில் வாக்களிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றுச் சனிக்கிழமை காலை 07 மணி முதல் ஆரம்பமாகிய இந்த வாக்களிப்பு நடவடிக்கைகளில் மக்கள் பெருமளவில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு ஆகிய தேர்தல் தொகுதிகளில் 428 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வாக்களிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மைக்கேல் கல்லூரி வாக்களிப்பு நிலையத்தில் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையிலான மதகுருமார்கள் வாக்களித்தனர்.


இதேபோன்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் மட்டக்களப்பு சிசிலிய பெண்கள் தேசிய பாடசாலையில் தனது வாக்கினை பதிவுசெய்தார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தாண்டவன்வெளி ஜோசப்வாஸ் வித்தியாலயத்தில் தனது வாக்கினைப் பதிவு செய்தார். (இ-7)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2019-16.12.2019

## உடன் பிறப்புக்களின் உதவி கிடைக்கும்



விகாரி வருடம் கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்களுடைய இராசி நாதன் சுக்கிரன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதாரப் பற்றாக் குறை அகலும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள நண்பர்களின் உதவியும், உறவினர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப் பொழுது நடைபெறத் தொடங்கும். தற்சமயம் பெயர்ச்சியான குருபகவான் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடமான வெற்றிகள் ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். அங்கிருக்கும் அவரது பார்வை பிதுரார்ஜிதம் எனப்படும் 9 ஆம் இடத்தில் பதிகிறது. எனவே பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் இப்பொழுது சாதகமாக முடிவடையலாம். உங்களுக்குத் தரவேண்டிய பங்கினைத் தர மறுத்தவர்கள் இப்பொழுது தானாக முன்வந்து தருவார்கள். பங்காளிகள் பகை மாறும். பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகம், தொழில் சம்பந்தமாக ஊருக்கு ஊர் சென்று கொண்டேயிருக்கும் வாய்ப்பும், அதனால் உள்ளத்தில் இனம் புரியாத கவலையும் தோன்றும். கண்ணியமிக்க மனிதர்கள் நீங்கள் எண்ணிய காரியங்களை எளிதில் முடித்துக் கொடுப்பர்.

உங்களுடைய இராசியிலேயே தன சப்தமாதிபதியான செவ்வாயும், விரயாதிபதியான புதனும் வீற்றிருக்கிறார்கள். எனவே பணவரவு ஒருபுறம் வந்து கொண்டேயிருந்தாலும், முக்கியச் செலவுகளும் அதிகரிக்கும். ஒருசில காரியங்களை ஒருமுறைக்குப் பலமுறை செய்ய நேரிடும். அதற்காக கவலைப்பட வேண்டியதில்லை. காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும்.

பஞ்சமாதிபதியாகவும், நான்காமிடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சனிபகவான், சகாய ஸ்தானத்தில் இருப்பதால் பிள்ளைகளால் உங்களுக்கு பெருமை சேரும். படித்து முடித்து வேலையில்லாமல் இருக்கும் பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும். பணிநிரந்தரம் ஆகாதவர்களுக்கு வீடு தேடி நல்ல தகவல் வந்து சேரலாம். நேர்முகத் தேர்விற்குச் சென்றும் இதுவரை பலன் கிடைக்கவில்லையே என்று நினைத்தவர்களுக்கு, இப்பொழுது நல்ல நிறுவனத்தில் இருந்து அழைப்புகள் வரலாம். வாக்கு ஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

இம்மாதம் திருக்கார்த்திகைத் திருநாள் வருகிறது. அன்றைய தினம் வடிவேலனை வழிபட்டால் வளர்ச்சி கூடும். மேலும் வியாழன் தோறும் குரு வழிபாடும், வெள்ளி தோறும் சுக்கிர வழிபாடும் செய்து வந்தால் தடைகள் அனைத்தும் தானாக விலகும்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு அதிபதியான சுக்கி ரன், மாதத் தொடக்கத்தில் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதார பற்றாக் குறை அகலும். வாங்கிய கடனை கொடுத்து மகிழ்வீர்கள். தொழில் முயற்சிக்கு இடை யூறாக இருந்தவர்கள் விலகுவர். வாகன மாற்றம் செய்யும் வாய்ப்பு கைகூடி வரும். இழந்த பதவியை மீண்டும் பெற எடுத்த முய ற்சி கைகூடும். ஆடை, ஆபரணச்சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினர்களின் ஆதர வோடு தொழில் வளர்ச்சியில் இருந்த இடை யூறுகளை அகற்றிக் கொள்வீர்கள். பெண்க ளால் ஏற்பட்ட பிரச்சினைகள் விலகும். பிற இனத்தாரால்




பெருமை சேரும்.

விருச்சிக புதன் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த புதன், டிசெம்பர் 3ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செல்கிறார். 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், 2 ஆம் இடத்திற்கு வரும் பொழுது தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். கொடுக்கல் - வாங்கல் ஒழு ங்காகும். அடுத்தடுத்து நல்ல வாய்ப்புகளை எல்லாம் வரவழைத்துக் கொள்ளும் விதத்தில் அதிர்ஷ்ட தேவதையின் ஆதரவு கிடைக்கும். பயணங்கள் பலன்தரும் விதத்தில் அமையும். ஒரு சிலருக்கு வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம். குறிப்பாக இந்த புதன் பெயர்ச்சியால் புத -ஆதித்ய யோகம் உருவாகிறது. கல்வி சம்பந்தமாக எடுக்கும் முயற்சி கைகூடும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாகவோ, தொழில் படிப்பு சம்பந்தமாகவோ எடுக்கும் முயற்சிகள் வெற்றியாகும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த விரிசல்கள் அகலும். சேமிப்பு உயரும். பொதுவாழ்வில் ஈடுபட்டி ருந்தவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும்.

இம்மாதம் வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பணப்பற்றாக்குறை அகலும். பக்க பலமாக இருப்பவர்கள் உங்கள் பிரச்சினைகள் தீர வழிகாட்டுவர். குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். வாக்கு ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால், அடிக்கடி உங்களுக்கு கோபம் வரலாம். கொஞ்சம் நிதானத்துடன் செயற்படுவது நல்லது. குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை சிறப்பாகவே இருக்கிறது. தாய்வழி ஆதரவும் உண்டு. உடன் பிறந்தவர்களாலும் கூடுதல் நன்மை கிடைக்கும் மாதம் இது. புத்திர ஸ்தானாதிபதி சனியோடு கேது சேர்ந்திருப்பதால் பிள்ளைகளால் அதிக விரயங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு, அவர்கள் நினைத்த படியே வேலையில் ஏற்றமும், மாற்றமும் வந்து சேரும்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

## வெற்றிவாய்ப்பு வீடு தேடிவரும்



விகாரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் இலாபாதிபதி புதனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய பாதை புலப்படும். தன ஸ்தானத்தில் குரு பகவான் ஆட்சி பலம் பெற்றுள்ளார். அவரோடு சனி பகவானும், கேதுவும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். எனவே இனிய பலன்கள் ஏராளமாக நடைபெறப்போகிறது. பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். புகழ்மிக்கவர்களின் பட்டியலில் உங்கள் பெயரும் இடம்பெறும். தொழில் சம்பந்தமாக நீங்கள் எடுக்கும் புது முயற்சிகளுக்கு வங்கிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

சுக்கிரன், உங்கள் இராசியிலேயே இருக்கிறது. எனவே சுகங்களும், சந்தோஷங்களும் வந்து அலைமோதும். பெண்களால் பெருமை சேரும். தங்கம்வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். சுபசெய்திகள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் நேரம் இது. உங்கள் இராசிக்கு 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சூரியனும் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். அவரோடு சப்தம விரயாதிபதியான சுக்கிரனும் இணைந்திருக்கிறார். எனவே வாழ்க்கைத் துணை வழியிலும் யோகங்கள் வரலாம். குறிப்பாக வாழ்க்கைத் துணைக்கு படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப் பட்டவர்களுக்கு, இப்பொழுது தகுதியான வேலையும் திறமைக்கேற்ற சம்பளமும் கிடைத்து மகிழ்வீர்கள். தனஸ்தானம் பலம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் உத்தி யோகத்தில் உள்ள ஒருசிலர் விருப்ப ஓய்வில் வெளிவந்து, சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். அதற்கு நம்பிக்கைக்குரிய நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர்.

குரு, சனி, கேது ஆகிய மூன்று கிரகங்களும் குரு வீட்டிலேயே சஞ்சரிக்கிறார்கள். சூரியன், சுக்கிரன் பரிவர்த்தனை யோகமும் பெற்றிருக்கிறது. எனவே கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். கொள்கைப் பிடிப்போடு செயல்படுவீர்கள். அடுத்தடுத்து நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். புதிய வாகனம் வாங்கும் யோகம் முதல் புகழ்மிக்க பதவி உயர்வு கிடைக்கும் யோகம் வரை உங்களுக்கு வருகின்ற நேரம் இது.

இம்மாதம் முருகப்பெருமானுக்கு உகந்த திருக்கார்த்திகைத் திருநாள் வருகிறது. அன்றைய தினம் கவச பாராயணம் செய்து கந்தப்பெருமானை வழிபட்டால் நினைத்த காரியங்கள் நினைத்த படியே நிறைவேறும்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்த சுக்ரன், நவம்பர் 22 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கிறார். அங்கு சஞ்சரித்து வரும் குருவோடு அவர் இணைந்து அற்புதப் பலன்களை அள்ளிக் கொடுக்கப் போகிறார். சொல்லும் சொற்களையெல்லாம் வெல்லும் சொற்களாக மாற்றுகின்ற ஆற்றல் குரு பகவானுக்கு உண்டு. சொக்க வைக்கும் அளவிற்கு பேசி மக்களை தன் வசமாக்கும் ஆற்றல் சுக்கிரனுக்கு உண்டு. இந்த இரண்டு கிரகங்களின் சேர்க்கையும் ஏற்படும் பொழுது நிறைய நண்பர்கள் அறிமுகமாவார்கள். நேசம்மிக்கவர்களின் எண்ணிக்கை உய




ரும். பாசத்தோடு நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து உதவிசெய்யக் காத்திருப்பர். எனவே இக் காலத்தில் நட்பால் நல்ல காரியங்கள் நடைபெறும். நாட்டுப்பற்று மிக்கவர்களின் மூலம் நீங்கள் செய்யும் கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

விருச்சிக புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு அஷ்டம லாபாதிபதியாக விளங்குபவர் புதன். அவர் டிசெம்பர் 3ஆம் திகதி உங்கள் இராசியிலேயே அடியெடுத்து வைக்கப் போகிறார். இலாபாதிபதி உங்கள் இராசியைத் தேடி வரும்பொழுது வருமானம் இருமடங்காக உயரும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். உற்சாகத்தோடு பணிபுரிந்து உன்னத நிலையை அடைய வழிவகுத்துக் கொள்வீர்கள். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணிவும், தன்னம் பிக்கையும் கூடும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். லாபாதிபதி புதன் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுக்கும் ஆற்றலைப்பெற்றவர். அவர் சூரியனோடு இணைந்து புத -ஆதித்ய யோகத்தை உருவாக்குவதால் அறிவு செல்வத்தையும், பொருட்செல்வத்தையும் அள்ளிக் கொடுக்கப் போகிறார். எனவே இனி இமயம் போல் உயர்ந்து இதயங்கள் அனைத்திலும் இடம் பிடிக்கப் போகிறீர்கள்.


இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் தும்பிக்கையானையும், வள்ளி மணாளனையும் தொடர்ந்து வழிபட்டு வாருங்கள்.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் தொட்டது துலங்கும். செல்வ நிலை சிறப்பாகவே இருக்கும். ஜென்மத்தில் சஞ்சரிக்கும் சூரியனும், சுக்கிரனும் செல்வாக்கு உயர வழிவகுத்துக் கொடுப்பர். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். புகுந்த வீட்டிற்கும், பிறந்த வீட்டிற்கும் பெருமை சேர்ப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் வழிகாட்டுதலின் பெயரில் பெருமை காண்பர். தாய் மற்றும் உடன் பிறப்புகள் உங்களுக்கு பக்கபலமாக இருப் பர். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. இல்லம் கட்டிக் குடியேறும் எண்ணம் நிறைவேறும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்கி மகிழப் போகிறீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு, அவர்களின் உயர் அதிகாரிகளின் மூலமாக எதிர்பார்த்துக் காத்திருந்த சில சலுகைகள் கிடைக்கும். பதவி உயர்வும், ஊதிய உயர்வும் பரிசீலனை செய்யாம லேயே உங்களுக்கு கிடைக்கும். முருகப் பெருமான் வழிபாடும், குலதெய்வ வழிபா டும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும். (தொடரும்)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆர்வத்துடன் வாக்களித்த பொதுமக்கள்


கிளிநொச்சி


வவுனியா


முல்லைத்தீவு



மன்னார்

(முறிகண்டி)

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற நிலையில் வன்னி பிராந்தியத்தில் வாக்களிப்பு சுமுகமாக இடம்பெற்றது.

நேற்றுகாலை 7மணிமுதல் அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு ஆர்வத்துடன் சென்று பொது மக்கள் தமது வாக்கினை பதிவு செய்திருந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 17 ஆயிரத்து333 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் 142 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தில் 89 ஆயிரத்து 403 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் 76 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 89 ஆயிரத்து 538 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் 100 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 75 ஆயிரத்து 381பேர் வாக்களிக்கத் தகுதி தகுதி பெற்றுள்ள நிலையில் 135 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற்றது.

அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் பொலிஸார் விசேட பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்ததுடன் அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் காலை 7 மணிமுதல் பிற்பகல் 5 மணி வரை வாக்களிப்பு இடம்பெற்றது. (9-100-250-281-285-299-312)




## வாக்களிப்பு நிலையத்திற்குள் புகைப்படம் எடுத்தவர் கைது

(பனிக்கன்குளம்)

வாக்களிப்பு நிலையத்திற்குள் புகைப்படம் எடுத்த குற்றச்சாட்டில் முல்லைத்தீவைச் சேர்ந்த ஊடக வியலாளர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்புகள் நேற்று இடம்பெற்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையம் ஒன்றில் வாக்களிப்பதனை புகைப்படம் எடுத்த குற்றச்சாட்டில் முல்லைத்தீவைச் சேர்ந்த ஊடக வியலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (9-281)

## டெங்கு அபாயத்தால் மூடப்பட்ட வவு.பாடசாலை மீண்டும் ஆரம்பம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் கடந்த 14ஆம் திகதி டெங்கு நோய் தொற்று அபாயம் காரணமாக மூடப்பட்ட வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி எதிர்வரும் 18 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

குறித்த பாடசாலை வளாகத்தில் டெங்கு அபாய நிலை காணப்படுவதனால் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மூடப்படுவதாக வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் முத்து ராதாகிருஷ்ணன் அறிவித்திருந்தார்.

குறித்த பாடசாலையில் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது டெங்கு நுளம்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து உடனடியாக பாடசாலையை சுத்தம் செய்யுமாறு சுகாதார பணிமனையினரால் குறித்த பாடசாலைக்கு கடிதம் அனுப்பப்பட்டதன் அடிப்படையில் நேற்று முன்தினம் பாடசாலை வளாகம் உட்பட அனைத்து இடங்களும் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் பாடசாலையை மீண்டும் திறப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் திங்கட்கிழமை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தருமாறு கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார். (9-299)



கிளிநொச்சி புளியம்பொக்கனை கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், வகுப்பாசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோர் அண்மையில் பெற்றோர்களினால் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் கண்டாவளை கோட்டக்கல்வி பணிப்பாளர், முன்னாள் கோட்டக்கல்வி பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும். - எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையின் வரலாற்றில் நடந்த ஜனநாயக சாதனை

நேற்று நவம்பர் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

வாக்குகள் எண்ணும் பணிகள் நடந்து கொண்டிருக்கின்ற வேளையில்,

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராய்வதே பொருத்துடையது.

அதாவது தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்னரான வாக்களிப்பும் அதன் போதான களநிலைமைகள் பற்றியும் ஆராய்வதானது பொருத்துடையதாகும்.

அந்த வகையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலானது இலங்கையின் தேர்தல் வரலாற்றில் மிக அமைதியாக நடைபெற்ற தேர்தல் என்ற பதிவைப் பெற்றுக் கொள்கிறது.

தவிர, வாக்களிப்பு வீதம் கணிசமாக உயர்ந்துள்ளதையும் உறுதிப்படுத்தி நிற்கின்றது.

ஆக, அமைதியும் ஜனநாயகப் பண்பும் மிகுந்திருக்கின்றபோது வாக்களிப்பதில் பொது மக்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பர் என்ற உண்மை இங்கு வெளிப்படுத்தப்பட்டு நிற்பதைக் கூறித்தானாக வேண்டும்.

எனவே தேர்தலின்போது மக்கள் வாக்களிப்பதென்பதற்குள் ஜனநாயகப் பண்புகள் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது புரிதற்குரியது.

ஆக, கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின்போது, வாக்களிப்பு வீதம் குறைவடைந்துள்ளதாயின் அதற்கான காரணம் புறச்சூழலில் நிலவிய பாதுகாப்பு அச்சுறுத்தலும் அமைதியற்ற களநிலையும் என்பதை நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பு வீதம் உறுதிப்படுத்தியுள்ளது.

எனவே ஜனாதிபதித் தேர்தல் முடிவு எவ்வாறாக இருக்கப் போகிறது என்பதற்கு அப்பால், நடைபெற்ற தேர்தலானது ஆட்சி அதிகாரத்தில் அமரப்போகின்றவருக்கு ஒரு தெளிவான செய்தியைச் சொல்லி நிற்கிறது.

அதாவது ஜனநாயக வழியில் – ஜனநாயக ரீதியில் அனைத்துக் கருமங்களும் ஆற்றப்படுமாக இருந்தால் அடாவடித்தனங்கள், சண்டித்தனங்கள், மோசடிகள் இல்லாமல் நேர்மையான முறையில் தேர்தல் நடைபெற்றால் பொதுமக்கள் தங்களின் வாக்குகளைப் பிரயோகித்து நாட்டின் ஜனநாயகச் செழுமைக்கு வலுச்சேர்ப்பர் என்பதே அந்தச் செய்தியாகும்.

எனவே ஜனாதிபதி என்ற அதிகாரமிக்க பதவியில் அமரப்போகின்றவர் மக்கள் வழங்கிய தீர்ப்புக்குப் பின்னால் இருக்கக்கூடிய நீதி, நேர்மை, பக்கச்சார்பின்மை, ஜனநாயகம் என்ற உயரிய பண்புகளை கவனத்தில் கொண்டு தொடர்ந்தும் ஜனநாயக வழியில் நாட்டை அழைத்துச் செல்ல வேண்டும்.

இவ்வாறான எண்ணப்பாட்டோடு இலங்கைப் பிரஜைகள் அனைவருக்கும் இந்த நாடு சொந்தம்.

இங்கு இன, மத, மொழி பேதங்களுக்கு அறவே இடமில்லை என்ற நீதியோடு ஆட்சி இடம்பெறுமாயின் இலங்கையின் ஜனநாயக உயர்வு உலகில் பேசுபடு பொருளாகும் என்பது சர்வநிச்சயம்.

# பத்திரிகை சுதந்திரத்தை அதிகரித்து ஜனநாயகத்தை பாதுகாப்பது எதிர்கால ஜனாதிபதியின் பாரிய பொறுப்பாகும்

## திருப்தியுடன் விடைபெறுகிறேன் மைத்திரி மக்களுக்கு விசேட உரை

(கொழும்பு)

பத்திரிகை சுதந்திரத்தை அதிகரித்து ஜனநாயகத்தை பாதுகாப்பது எதிர்கால ஜனாதிபதியின் பாரிய பொறுப்பாகும். திருப்தியுடன் விடைபெறுகிறேன் என நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனவரி 8, 2015 அன்று நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு வாக்களித்த 64 இலட்சம் வாக்காளர்களிற்கும் நன்றி கூறுகிறேன். நான் ஜனாதிபதியாக பதவியேற்ற சில நாட்களுக்குப் பிறகு, கண்டியில் உள்ள ஸ்ரீ தலதா மாளிகையில் ஒரு சிறப்பு அறிக்கையை வெளியிட்டேன்.

உங்களிடம் நான் கூறிய கூற்றை நீங்கள் நினைவில் வைத்திருக்கலாம். அதாவது நான் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன். இது எனக்கு பாராளுமன்றம், அமைச்சர்கள்,அமைச்சரவை,சுதந்திர ஆணைக்குழுக்கள் மற்றும் நீதித்துறை ஆகியவற்றில் வரம்பற்ற நிர்வாக அதிகாரத்தை அளித்தது. அது என்னைத் தடுக்கவில்லை. ஆறு ஆண்டு கால ஜனாதிபதியாக மக்கள் என்னைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால் அரசியலமைப்பு திருத்தத்தின் படி நான் அதை ஐந்து ஆண்டுகளாக குறைத்துள்ளேன்.

எனது ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு அதிகபட்ச சுதந்திரம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு வரம்பற்ற ஊடக சுதந்திரம் வழங்கப்பட்டது. அந்த சுதந்திரம் இறுதியில் எனக்கு ஒரு பேரழிவாக மாறியது. சமூக ஊடகங்கள் உள்ளிட்ட ஊடகங்களால் நான் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளானேன். ஆனால் நான் நடுங்கவில்லை.

எனது ஆட்சிக் காலத்தில் எந்த அரசாங்க துப்பாக்கியும் சுடப்படவில்லை. மக்கள் சுதந்திரமாக இருக்க வேண்டிய சூழலை நான் உருவாக்கினேன். எனது தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பல விடயங்களை நிறைவேற்ற முடியும் என்று நான் நம்புகிறேன்.

எனக்கும் அரசாங்கத்தின் சில பிரிவுகளுக்கும் இடையே எழுந்துள்ள கொள்கை பிரச்சினைகள் காரணமாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் மக்கள் எதிர்பார்த்த சில விடயங்களை என்னால் செய்ய முடியவில்லை. அரசாங்கத்தில் உள்ள பிரச்சினைகள் காரணமாக அது முடியாமல் போனது.

அரசாங்கத்தில் சிலர் தங்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தினர். நான் ஆட்சிக்கு வந்தபோது, இந்த நாடு வெளிநாடுகளில் இருந்து கடும் அழுத்தத்தில் இருந்தது. அது 2014 பருவத்தில் இருந்தது. ஆனால் எனது ஆட்சிக் காலத்தில், சர்வதேச சமூகத்தின் 90 சதவீத அழுத்தம் நீக்கப்பட்டது.

. எதிர்கால ஜனாதிபதிக்கு ஒரு பொறுப்பு உள்ளது. நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட ஜனநாயகத்தை பாதுகாப்பதும் பத்திரிகை சுதந்திரத்தை அதிகரிப்பதும் அவரது பொறுப்பு. போதைப்பொருள் கடத்தல் மற்றும் சிறுநீரக நோய்யை எதிர்த்துப் போராடுவதற்கான அதன் திட்டங்களைத் தொடரவும் நான் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஆட்சிக் காலத்தில், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு சேவை செய்ய முடிந்தது. அவர்களுடைய நிலங்களை விடுவித்து அவர்களின் வாழ்க்கை நிலைமைகளை என்னால் கட்டியெழுப்ப முடிந்தது. நான் அதை செய்ததில் மகிழ்ச்சி.

ஜனாதிபதியாக எனது சில முடிவுகள் சர்ச்சைக்குரியவை. நான் வாளை வெளியே பயன்படுத்தவில்லை என்று சிலர் சொன்னார்கள். நான் வாளைப் பயன்படுத்தினேன். எனது சொந்த பிரதமர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். வேறு யாரோ நியமிக்கப்பட்டுள்ளனர். பாராளுமன்றத்தை கலைக்க ஐந்து வர்த்தமானி அறிவிப்புகளில் கையெழுத்திட்டேன்.

எனது பதவிக்காலத்தில் எனக்கு திருப்தி இருக்கிறதா என்று யாராவது என்னிடம் கேட்டால், நான் ஒரு நொடியில் அளிக்கும் பதில், நான் திருப்தி அடைகிறேன்.

நான் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியிருந்தாலும், எனது அன்பான மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய வேண்டிய அனைத்து அர்ப் பணிப்புடனும் நாளை தொடர நான் உறுதியாக இருக்கிறேன். நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துங்கள், ஊடக சுதந்திரத்தை வலுப்படுத்துங்கள், மனித உரிமைகளை வலுப்படுத்துங்கள். தாய்நாட்டை முன்னோக்கி அழைத்துச் செல்ல நான் நாளை உங்களுடன் சேருவேன்." என்றார். (ம-3)

தம்பிராசா மீது

## இனந்தெரியாதோர் நேற்றுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் இணைப்பாளர் மு.தம்பிராசா மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று நாடளாவிய ரீதியில் நடைபெற்றுள்ளது.

இந்தநிலையில் யாழ்ப்பாணத்தில் தனது வாக்குரிமையைப் பயன்படுத்த சென்ற வேளை, இனந்தெரியாதவர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மு.தம்பிராசா குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்


அமைதி மதிப்புயர்ந்த ஒரு நகை. சத்தியத்தைத் தவிர வேறு எதைக் கொடுத்தாவது நான் அதை வாங்க விரும்புகிறேன். - எம்.ஹென்றி

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது"

-மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- உலகின் ஒளி நானே. என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார். வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்.
- நீ மனம் மாறத் தவறினால் நான் உன்னிடம் வந்து உன் விளக்குத் தண்டை அகற்றி விடுவேன்.
- அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது.
- இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்து கொள்வோமாக.
- நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்டிருங்கள். பிறரிடம் இரக்கமும் சகோதர அன்பும் பரிவுள்ளமும் மனத்தாழ்மையும் கொண்டிருங்கள்.
- இறைப்பற்றோடு சகோதர நேயமும், சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குமாறு முழு ஆர்வத்தோடு முயற்சி செய்யுங்கள்.
- வஞ்சித்துப் பெறும் உணவு சுவையாயிருக்கும் ஆனால், பின்னால் அது வாய் நிறைய மணல் கொட்டியது போலாகும்.

# சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி 91 ஓட்டங்களால் அபார வெற்றி



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 13 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான கிரிக்கெட் தொடரில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 91 ஓட்டங்களால் அபார வெற்றி ஈட்டியது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 13 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான கிரிக்கெட் தொடரில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற ஆட்டத்தில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி பி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியின் கிரிதரன் மற்றும் ரகுராஜ் ஆகியோரின் பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாமல் திணறினர்.

இதனால் யாழ்.இந்துக் கல்லூரி பி அணி 21.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 16 ஓட்டங்களை மாத்திரம் பெற்றன.

அவ்வணி சார்பில் அதிகபட்சமாக ஜனுயன் 8 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கிரிகரன் 4, ரகுராஜ் 3, வேணுஜன் 2, தரணியன் ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இனிங்ஸில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி 28.4 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 156 ஓட்டங்கள்ளப் பெற்ற நிலையில் தனது முதலாவது இனிங்ஸை நிறுத்தியது.

அவ்வணி சார்பில் தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த யாழ்.இந்துக் கல்லூரி பி அணி 33.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 49 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். அவ்வணி சார்பில் இந்துஜன் 31 ஓட்டங்களை பெற்றார்.

பந்து வீச்சில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி சார்பில் தரனிபன் 4, கிரிகரன் 3, டர்சிகன் 2, ரகுராஜ் ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர். (ஜ)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# 5 நிமிடங்களுக்குள் 4 கோல்களைப் போட்டு கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி முன்னிலை





பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் திக்கமுனை மைதானத்தில் விலகல் முறையில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடர் கடந்த புதன்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகியது.

நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகிய இரண்டாவது போட்டியில் வடமராட்சியில் பலம்பொருந்திய கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை, நெடியகாடு இளைஞர்கள் அணி எதிர் கொண்டது.

ஆரம்பத்தில் இரு அணியினரும் தமது திறமைகளை வெளிக்காட்டி பந்து நகர்த்தல்களை கோல் பிராந்தியம் வரை மேற்கொண்டனர். இருப்பினும் முன்கள வீரர்கள் வாய்ப்புக்களை பலதடவை தவறவிட்டனர்.

ஆனால் போட்டி ஆரம்பித்து 13 நிமிடங்கள் கழிந்த பின் போட்டியை அசுர வேகத்திற்கு நகர்த்தி தமது முழுக் கட்டுப்பாட்டுக்குள் றேஞ்சஸ் அணி கொண்டுவந்தது.

அவர்களது அசுர வேகத்திற்குள் வேகிக்போய் நிலைகுலைந்து நின்றது நெடியகாடு இளைஞர்கள் அணி என்றுதான் சொல்ல வேண்டும். இதனால் அந்த நிலைகுலைவை சரியாகப் பயன்படுத்திய றேஞ்சஸ் அணி கோல்களை போடத்தொடங்கியது.

இதனால் 15வது நிமிடத்தில் அந்த அணி தனது முதலாவது கோலைப் பதிவுசெய்தது. அத்துடன் அதிலிருந்து முதல் பாதி ஆட்டம் முடிவுறும் 5 நிமிடங்களுக்குள் 4 கோல்களைப் போட்டு முதல்பாதி ஆட்டத்தை 05:20 மணிக்கு றேஞ்சஸ் அணி 04 : 00 என்ற கோல்களின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு கொண்டு வந்தது.

4.25 மணிக்கு ஆரம்பித்த இரண்டாம் பாதி ஆட்டத்திலும் றேஞ்சஸ் அணி வேண்டுமென்றே மந்தமாக விளையாட்டை நகர்த்திச் செல்லத் தொடங்கியது. ஆயினும் மேலதிகமாக இரு கோல்களை றேஞ்சஸ் அணி பதிவுசெய்தது. இறுதியாக போட்டி 5:45 மணிக்கு நிறைவு காணும் போது றேஞ்சஸ் அணி 06:00 என்ற அடிப்படையில் கோலகளைக் பெற்று முன்னிலை கொண்டமையால் இப் போட்டியில் வெற்றியீட்டி இத் தொடரில் தனக்கான இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது. (ஜ)

# வதிரி பொமேஸ் வாகைசூடியது





பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் திக்கமுனை மைதானத்தில் விலகல் முறையில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித்தொடர் கடந்த 13 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகியது.

கழகத்திற்கு 7 வீரர்கள் பங்குபற்றும் இப்போட்டித்தொடர்- "அமரர் Dr மயிலேறும் பெருமாள்" ஞாபகார்த்த மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி என சிறப்பாக பெயரிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் பலம்பொருந்திய வதிரி பொமேஸ் அணியை, கலைமகள் அணி எதிர் கொண்டது.

இரு அணியினரும் தமது திறமைகளை வெளிக்காட்ட முண்டியடித்துக் கொண்டனர்.

வதிரி பொமேஸ் அணியின் பந்து நகர்த்தல்கள் கோல்பிராந்தியத்திற்குள் சீறிக்கொண்டே இருந்தது. இருப்பினும் கோல்கள் பெறும் வாய்ப்புக்கள் பல தடவை முறியடிக்கப்பட்டன.

ஆனால் போட்டி ஆரம்பித்து 3ஆவது நிமிடங்கள் கழிந்தபின் போட்டியை மிகவேகமாக தமது முழுக் கட்டுப்பாட்டுக்குள் வதிரி பொமேஸ் அணி கொண்டுவந்து கோல்களை போடத்தொடங்கியது.

இதனால் முதல்பாதி ஆட்டத்தை வதிரி பொமேஸ் அணி 04: 00 என்ற கோல்களின் ஆதிக்கத் துடன் முடிவுக்கு கொண்டு வந் தது.

4:25 மணிக்கு ஆரம்பித்த இரண்டாம் பாதி ஆட்டத்தில் வதிரி பொமேஸ் அணி மேலும் இரு கோல்களை போட்டு முன்னிலை பெற்றது.

இறுதியாக போட்டி 4:45 மணிக்கு நிறைவு காணும்போது வதிரி பொமேஸ் அணி, 06 : 00 என்ற அடிப்படையில் கோல்களைப்பெற்று முன்னிலை கொண்டமையால் இப்போட்டியில் வெற்றியீட்டி இத்தொடரில் தனக்கான இடத்தைத் தக்கவைத்துக் கொண்டது. (ஜ)

### தேர்தல் முடிவுகள் குறித்து

# சமூகவலைத்தளங்களில் மோதும் அரசியல்வாதிகள்

(கொழும்பு)

தேர்தல் முடிவுகள் தொடர்பில் டுவிட்டரில் பதிவுகளை இட்டு சில அரசியல்வாதிகள் ஒருவருக்கு ஒருவர் விமர்சனங்களை முன் வைத்து வருகின்றனர். இது வரையில் அதிகாரபூர்வ மான தேர்தல் முடிவுகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச 60 வீத வாக்குகளைப் பெற்றுக்கொள்வார் எனவும் பாரிய வெற்றி நோக்கி நகர்வதாகவும் பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னதாகவே இது பற்றி தாம் எதிர்வு கூறியிருந்ததாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்களில் மிக மோசமான தோல்வியை சஜித் அடைவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமரர் சிறிமா திஸாநாயக்க 1994ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் பெற்றுக் கொண்ட வாக்குகளை விடவும் குறைந்தளவு வீத வாக்குகளையே சஜித் பெறுவார் என உதய கம்மன்பில டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (ம-3)

## வன்னித் தேர்தல் தொகுதி...

தபால் மூல வாக்கில் வன்னி தேர்தல் தொகுதியில் சஜித்பிரேமதாச முன்னிலை பெற்றுள்ளார்.

வன்னித் தேர்தல் தொகுதியில் 9 வாக்கு எண்ணும் நிலையங்களில் மூன்று வாக்கு எண்ணும் நிலையங்களின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

அதில் சஜித் பிரேமதாச 2,673, கோத்தபாய ராஜபக்ஸ் 675, அனுர குமார திஸாநாயக்க 37, சிவாஜிலிங்கம் 53, நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 82, அளிக்கப்பட்ட வாக்குகள் 3583 ஆகும்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் தபால்மூலம் 10 ஆயிரத்து 472 வாக்குகள் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் எட்டாவது ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று முடிந்தது. இந்த முறை ஜனாதிபதி தேர்தலுக்காக ஒரு கோடியே 59 லட்சத்து 92 ஆயிரத்து 96 வாக்காளர்கள், வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

நாடு முழுவதும் 12,845 வாக்களிப்பு நிலையங்களில் இந்த முறை ஜனாதிபதி தேர்தல் வாக்குப் பதிவு நடைபெற்றது.

எந்த வன்முறையும் இல்லாமல் தேர்தல் நடந்து முடிந்ததில் மகிழ்ச்சி. இப்படி முடிந்த முதல் ஜனாதிபதி தேர்தல் இதுதான்" என்று தேர்தல் ஆணையத் தலைவர் கூறியுள்ளார்.

இலங்கை வரலாற்றிலேயே அதிகளவிலான வேட்பாளர்கள் போட்டியிடும் ஜனாதிபதித் தேர்தலாக இது பதிவாகியுள்ளது. மொத்தம் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இப்போது தேர்வு செய்யப்படும் ஜனாதிபதி, எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,250,299)












பூர்வமாக அறிவித்தது.

## யாழில் அதிக...

இந்த எண்ணிக்கை தபால் மூல வாக்களிப்பும் சேர்த்து கணக்கிடப்பட்டதாக செயலகம் குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர்களாலும் வழங்கப்பட்ட உத்தியோக பூர்வ வாக்களிப்பு எண்ணிக்கையுடன் தபால்மூல வாக்களிப்பு எண்ணிக்கையையும் இணைத்து 66.58 சதவீத வாக்களிப்பு இடம் பெற்றதாக மாவட்ட தேர்தல் செயலகம் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்தது. (ம-3)

## அமைதியான முறை...

பெற்றதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்தது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு வீதம் 80 வீதத்தை எட்டியுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது. வாக்களிப்பு வீதம் வருமாறு,

கொழும்பு -75 %, கம்பஹா - 82%, களுத்துறை - 75%, கண்டி - 80%, மாத்தளை - 75%, நுவரெலியா - 80 %, காலி - 80 %, மாத்தறை - 80 %, அம்பாந்தோட்டை- 80 %, யாழ்ப்பாணம் - 66.5%, கிளிநொச்சி - 73 %, வவுனியா - 75 %, முல்லைத்தீவு - 76.2%, மன்னார் - 71%, மட்டக்களப்பு - 75%, திருகோணமலை - 83%, திகாமடுல்ல - 80 %, குருநாகல் - 80%, புத்தளம் - 75 %, அனுராதபுரம் - 75%, பொலன்ன்றுவை - 80 %, பதுளை - 80%, மொனராகலை - 80%, இரத்தினபுரி - 84%, கேகாலை - 75%. (ம-3)

## காணாமல் போன...

வட்டுக்கோட்டை சந்திக்கு அண்மையாக நவீன சந்தை கட்டடத்துக்கு அருகாமையில் (இந்து வாலி பர் சங்க புத்தகசாலைக்கு பின்புறம்) உள்ள பாழடைந்த கிணற்றில் அவ ரது சடலம் மீட்கப்பட்டது.

சங்கரத்தை, திருஞானசம்பந்தா வீதியைச் சேர்ந்த மகேந்திரம் யசோதா என்ற ஒரு பிள்ளையின் தாயாரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குடும்பப் பெண் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் காணாமற் போனார் என்று அவரது மகன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

### மன்னாரில் வாக்களித்து விட்டு

# புத்தளம் சென்ற மக்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(மன்னார்).

மன்னாரில் வாக்களித்து விட்டு புத்தளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்து மீது மதவாச்சி பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றையதினம் மக்கள் வாக்களித்து விட்டு மீண்டும் அரச பேருந்துகளில் மதவாச்சி ஊடாக புத்தளம் சென்று கொண்டிருந்த போது மாலை சுமார் 6.00 மணியளவில் மதவாச்சி பகுதியில் வைத்து இனம் தெரியாதவர்களினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கல் வீச்சுத் தாக்குதலின் போது குறித்த பேருந்தில் பயணித்த சில பயணிகள் காயமடைந்த நிலையில் மதவாச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களையும் சம்பவம் இடம்பெற்ற இடத்தையும் அமைச்சர் ரிஷாட் பதியூதீன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். குறித்த தாக்குதல் தொடர்பாக மதவாச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-3,285)

## அமைதியான...

களுக்கு அமைய இந்த ஜனாதிபதி தேர்தல் மிகவும் அமைதியான முறையில் இடம் பெற்றதாகவும் தேர்தலுக்கான சுதந்திரத்திற்கும் நியாயமானதுமான மக்கள் செயற்பாடு (பப்ரல்) அமைப்பின் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள பெப்ரல் அமைப்பின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியல்ளார் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் கூறுகையில், முன்னைய ஜனாதிபதி தேர்தல்களுடன் ஒப்பிடும் போது இத்தடவை ஜனாதிபதி தேர்தலில் மிகவும் குறைந்தளவு வன்முறை சம்பவங்களும் சட்டமீறல்களும் இடம்பெற்ற தேர்தல் என குறிப்பிட முடியும்.

ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக பெப்ரல் அமைப்பின் 5 ஆயிரம் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆயினும் நேற்று வாக்களிப்பு பணிகளை கண்காணிப்பதற்காக சுமார் 6 ஆயிரம் அதிகாரிகள் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அதேவேளை நடமாடும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக சுமார் 320 இற்கும் அதிகமான அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அத்துடன், 150 அதிகாரிகள் தேர்தல் வாக்கெண்ணும் பணிகளை கண்காணிப்பதற்காக பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்' என கூறினார்.

இதேவேளை காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை யான காலப்பகுதியில் 158 சட்டமீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஜனாதிபதி...

நல்லாட்சி அரசாங்கத்தில் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதியாக தெரிவான மைத்திரிபால சிறிசேன சுமார் 5 வருடகாலம் ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

நேற்று நடைபெற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தலையடுத்து மைத்திரியின் பதவிக்காலம் முடிவுக்கு வந்தது. (ம-3)

## தேர்தல் ஆணை...

வடக்கில் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டதாகவும், மக்கள் வாக்களிக்க நெருக்கடி ஏற்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. அத்துடன், மன்னாரிற்கு வாக்களிக்க வந்த மக்கள் மீதும் நேற்று துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதையடுத்து, நேற்று மாலை தேர்தல் ஆணையாளரை சந்தித்து கலந்துரையாடல் நடத்தினார் பிரதமர் ரணில். (ம-3)

## வாக்களிக்கக் கூடாதென தமிழர்...

யுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரகொட நாகொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பில் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதி ஒருவரை தேர்ந்தெடுப்பது குறித்தான சட்டத்தின் கீழ் நாகொட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக தற்போது எவரும் கைது செய்யப்பட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இலங்கை அரசியலில் குறைந்த...

வர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நிறைவடைந்துள்ள நிலையில், இறுதி முடிவு எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு முன்னர் அறிவிக்கப்படும்.

சரியான முடிவுகளை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் பொறுமையாகவே அறிவிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகள் குறைந்த தேர்தல் என்பதில் மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகவும் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எனினும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தேர்தல் வெற்றி பேரணி மற்றும் கூட்டங்களை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். (ம-3)










## யாழிலிருந்து முல்லைத்தீவுக்குச் சென்ற
# வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த 14 பேர் பொலிஸாரால் கைது

முல்லைத்தீவில் வாள்வெட்டு தாக்குதலில ஈடுபடுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ஆவா குழுவைச் சேர்ந்த 14 பேர் தருமபுரம் மற்றும் புதுக்குடியிருப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் நடத்த மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் சுதந்திரபுரத்தில் நேற்றுமுன் தினம் இரவு பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் இருவரும் வழங்கிய தகவலின் அடிப்படையில் முச்சக்கரவண்டி ஒன்றில் பயணித்த இருவர் புதுக்குடியிருப்புப் பொலிஸாராலும் பேருந்தில் பயணித்த 10 பேர் தருமபுரம் பொலிஸாராலும் கைது செய்யப்பட்டனர்.

ஆனைக்கோட்டை, கூழாவடி மற்றும் மானிப்பாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீண்ட நாட்களாக திட்டமிடப்பட்டு இந்தத் தாக்குதலுக்கு ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் முயற்சித்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸில் கைது செய்யப்பட்ட நால்வரில் இருவருக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் கொலைக் குற்றச்சாட்டு வழக்கிலுள்ளது. அத்துடன், கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய வழக்குகளும் உள்ளன என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் நால்வர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்திலும் 10 பேர் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்திலும் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனரென பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-3,316)


பணிப்பெண் தேவை

யாழ்.நீராவியடியில் வசிக்கும் வயதான அம்மாவுடன் உதவியாக இருக்க குடும்ப பொறுப்பற்ற பெண் உதவியாளர் தேவை. (993)

தொடர்பு:- 0766695524

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK-550 /-Kg
கனடா - 950 /-Kg
ஜேர்மனி - 650 /-Kg
நெதர்லாந்து- 700 /-Kg
இத்தாலி- 700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-8115)
0768226240
V2 TRAVELS

கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
IELTS வகுப்புகளும் நடைபெறுகின்றன
UnLimmited Hours Classes
03/06 Months classes
எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்
யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில்
கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்
WORLD EDUCATION CONSUDTANCY
புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
மற்றும் சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989 (970)


# வடக்கில் சோதனைச் சாவடிகள் இல்லை
## சவேந்திர சில்வா மறுப்பு

வடக்கில் வீதிகளில் சோதனைச் சாவடிகள் இருப்பதாக கூறப்படும் வதந்திகள் தவறானவை என்றும் அவை ஆதாரமற்றவை என்றும் இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப் பதிவுகள் நேற்று இடம்பெற்ற நிலையில் வாக்காளர்களின் அச்சத்தைப் போக்க சோதனைச்சாவடிகள் நீக்கப்பட்டதாக இராணுவத் தளபதி நேற்றுக் காலை அறிவித்திருந்தார்.

இருப்பினும் வடக்கில் எந்தவொரு சோதனைச் சாவடிகளும் அகற்றப்படவில்லை என போலியான செய்திகள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டுவந்த நிலையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் வாக்காளர்களின் நன்மைக்காக பலாலி - பளை வரை உள்ள அனைத்து சோதனைச்சாவடிகளும் எடுக்கப்பட்டுள்ளன என இராணுவ தளபதி கூறினார். (ம-3)

# நீதியான தேர்தல்
## – ரணில் பெருமிதம்

நல்லாட்சி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் அனைத்தும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

நேற்யை தினம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

2015ஆம்ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக நல்லாட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதைத தொடர்ந்து அரசியலமைப்பின் 19ஆவது திருததத்தின் ஊடாக சுயாதீன ஆணைக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவை எவ்வித தலையீடுகளுமின்றி சுதந்திரமாக செயற்பட்டன.

அதன் ஓரங்கமாகவே இம்முறை ஜனாதிபதித் தேர்தல் எவ்வித தலையீடுகளுமின்றி சுதந்திரமானதாகவும் நியாயமான முறையிலும் அமைதியாக நடைபெற்று முடிவடைந்திருக்கின்றது. (ம-3)


(987)
Architectural CAD Centre
Personal & Group Classes
2D-DRAWING &
3D-MODELING
AutoCAD
LINK: 076 9000064 / 071 8617972

சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
(C-8109)




## கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடுகையில்
# வடக்கின் வாக்களிப்பு வீதம் இம்முறை அதிகம்
## தெற்கு பின்னடைவு

| No | District | 2019 President Election Polling % | 2015 President Election Polling % | Perceentage Increase/Decrease |
|---|---|---|---|---|
| 1 | Colombo | 75 | 82.67 | -7.67 |
| 2 | Gampaha | 81 | 82.88 | -1.88 |
| 3 | Kalutara | 80 | 84.73 | -4.73 |
| 4 | Kandy | 80 | 82.63 | -2.63 |
| 5 | Matale | 79 | 82.35 | -3.35 |
| 6 | Nuwareliya | 80 | 81.27 | -1.27 |
| 7 | Galle | 80 | 83.49 | -3.49 |
| 8 | Matara | 79 | 83.36 | -4.36 |
| 9 | Hambanthota | 81 | 84.13 | -3.13 |
| 10 | Jaffna | 66.5 | 66.28 | 0.22 |
| 11 | Vanni | 73 | 72.57 | 0.43 |
| 12 | Batti | 75 | 70.97 | 4.03 |
| 13 | Ampara | 80 | 77.39 | 2.61 |
| 14 | Trinco | 83 | 76.76 | 6.24 |
| 15 | Kurunegala | 82 | 82.98 | -0.98 |
| 16 | Puttalam | 74 | 73.81 | 0.19 |
| 17 | Anuradhapura | 75 | 83.1 | -8.1 |
| 18 | Polonnaruwa | 79 | 83.94 | -4.94 |
| 19 | Badulla | 80 | 82.99 | -2.99 |
| 20 | Monaragala | 80 | 83.75 | -3.75 |
| 21 | Rathnapura | 84 | 84.9 | -0.9 |
| 22 | Kegalle | 75 | 83.6 | -8.6 |

(கொழும்பு)

2019ஆம் ஆண்டிற்கான இலங்கை ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்து 22 தேர்தல் மாவட்டங்களிலும் எத்தனை சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன என்பது தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை கடந்த முறை அதாவது 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது 22 தேர்தல் மாவட்டங்களிலும் பதிவாகிய வாக்குகளின் சதவீதத்துடன் இம்முறை பதிவாகிய வாக்குகளின் சதவீதத்தை ஒப்பிடும் வகையிலான விபரம் வெளியாகியுள்ளது. (ம-3)

# கண்ணீர் அஞ்சலி




கலாநிதி க.தவலிங்கம் (தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு, ஓய்வுநிலை நிலஅளவையாளர் நாயகம்) அவர்களின் மாமியார்

## திருமதி புவனேஸ்வரி சிவஞானகுரு

அவர்கள் 14.11.2019 வியாழக்கிழமை அன்று காலமான செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வலம்புரி நிர்வாகம்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்


# வலம்புரி

சங்குநாதம்

Viber 076 636 3378

நாதம் 242

வள்ளுவர் ஆண்டு 2050 | 17.11.2019 | தொலைபேசி : 021 222 3378




## ஜனாதிபதி தேர்தல் - 2019

## 81.5%

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

கங்காணி கார்த்திகேயன் கையில் சித்தாலேப போத்தல் இருந்தது. அதனை அவதானித்த சாத்திரியார் சதாசிவம் என்ன கங்காணியார் தலையிடி போல என்றார்.

**கங்காணி:** தலையிடி ஒன்றுமில்லை. இப்ப தானே எங்கும் டெங்கு நுளம்பு. கை,காலில சித்தாலேபயைப் பூசினால் நுளம்பு குத்தாது. அதுக்காகத்தான் சித்தாலேப கொண்டு வந்தனான். நீங்களும் பூசிக் கொள்ளுங்க.

(இவ்வாறு கூறியபடி கங்காணி கார்த்திகேயன் சித்தாலேப போத்தலை எல்லோரிடமும் கொடுத்தார்)

**விதானையார்:** டெங்குக் காய்ச்சலும் ஒருவகையான வைரஸ் காய்ச்சலும் சனங்களைப் போட்டுப் படுத்தாப்பாடு படுத்துது. எங்கட கங்காணியார் மாதிரி நுளம்பு குத்தாத வகையில பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேணும்.

**பண்டிதர்:** உண்மை தான். என்ர பேரமக்கள் ரியூட்டறிகளுக்குப் போறவியள். அவையள் சொல்லுகினம் ரியூட்டறிகளில எக்கச்சக்கமான நுளம்புகளாம். நுளம்பு குத்தக் குத்த அதைத் தாங்கிக் கொண்டு படிக்கிறம் எண்டு சொல்லுகினம்.

அதிலும் காலை, மாலை நேரங்களில ரியூசன் நடக்கிறதால நுளம்புகளும் அந்த நேரம்தான் அதிகம்.

**மூப்பர்:** அப்ப பண்டிதர் ஒண்டு செய்தால் என்ன?

**பண்டிதர்:** என்ன மூப்பர் சொல்லுறியள்.

**மூப்பர்:** ரியூட்டறிகள், பாடசாலைகள், முன்பள்ளிகள் இருக்கிற இடங்களைச் சுற்றிப் புகை அடிச்சாலென்ன.

**சிறாப்பர்:** மூப்பர் சொல்லுறது நல்ல ஐடியாத்தான். மாணவர்கள் இல்லாத நேரம் பார்த்து மூப்பர் சொன்ன இடங்களைச் சுற்றி புகை அடிக்கலாம். புகை அடிக்கிறதுக்குச் செலவு ஆகுமெண்டால் அந்தச் செலவில ஒருபகுதியை ரியூட்டறிகளும் கொடுக்கலாம் தானே.

**வாத்தியார்:** நீங்கள் சொல்லுறது சரி. ஆனா எங்கட ரியூட்டறிகள் மாணவர்களுக்கு ஒய்வு கொடுக்காமல் அவர்களுக்கு நெருக்கீடு கொடுக்கிற வேலையையல்லோ செய்யினம்.

**சாத்திரியார்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** மூன்றாம் தவணை நவம்பர் 29 ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகுது. டிசெம்பர் மாதம் முழுவதும் மாணவர்களுக்கு விடுமுறை. ஆனால் ரியூட்டறிகள் டிசெம்பர் 2 ஆம் திகதிக்கு வகுப்புக்களை ஆரம்பிக்கினம் எண்டால் பாருங்களன். ஒருநாள் மட்டும்தான் மாணவர்களுக்கு ரியூட்டறி விடுமுறை.

**விதானையார்:** அட சங்கதி அப்படியோ? முன்பெல்லாம் ரியூட்டறிகள் பாடசாலை லீவோட தாங்களும் லீவு விடுவினம். பிள்ளைகளும் பெற்றாரோட உறவுகளின்ர வீடுகளுக்கும் கோயில்களுக்கும் சுற்றுலாவுக்கும் போய் வருவினம்.

ஆனால் இப்ப ரியூட்டறிக்காரர் வருடம் 365 நாளும் ரியூசன் வைக்கினம். எங்கட மாணவர்களுக்கு மனஅழுத்தத்தைக் கொடுக்கிற வேலைதான் இது.

**கங்காணி:** டிசெம்பர் மாதத்தில லீவு கொடுத்தால் டிசெம்பர் மாதக் கட்டணம் தங்களுக்குக் கிடைக்காது எண்ட காரணத்தாலும் லீவை விட்டால் வேறு ரியூசனுக்கு மாணவர்கள் போய்ச்சேர்ந்து விடுவினம் என்ற உள்நோக்கத்தோடும் மாணவர்களுக்கு லீவே வழங்காமல் தொடர்ச்சியாக வகுப்புகள் நடத்துகின்ற நாசத்தை எங்கட ரியூட்டறிகள் செய்யினம். இது கண்டு ஒருத்தரும் கதைப்பதாகவும் இல்லை.

உலக நாடுகள் முழுவதிலும் மாணவர்களுக்கான விடுமுறை என்பது மிகவும் நேர்த்தியாக அமுல்படுத்தப்படுகிறது.

ஆனால் எங்கட நாட்டில பாடசாலைகள் மூன்று தவணைக்கும் விடுமுறை வழங்கினாலும் ரியூட்டறிகள் மாணவர்களுக்கு விடுமுறை வழங்காமல் தொடர்ச்சியாக வகுப்புகளை நடத்துவது மாணவர்களிட்ட கற்றலை வெறுக்கச் செய்யும்.

**வாத்தியார்:** அப்ப இது விடயத்தில ஆளுநர் அலுவலகமும் வடக்கு மாகாணக் கல்வியமைச்சும் தலையிட்டு ரியூட்டறிகள் லீவு விடுகிற ஒரு நடைமுறையைக் கொண்டு வர வேணும். அதிலும் மாரி காலம் என்பதால டிசெம்பர் மாதம் முழுவதும் ரியூட்டறிகள் மாணவர்களுக்கு விடுமுறை வழங்கவேணும். இதில உயர்தர மாணவர்கள் புறநீங்கல் என்றவாறு நடவடிக்கை எடுக்க வேணும் என்று ஆலடியில ஒரு தீர்மானம் கொண்டு வருவம்.

(இவ்வாறு வாத்தியார் கூற அனைவரும் ஏகமனதாக அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

தீர்மானம் நிறைவேற்றிய கையோட ஆலடியில் சில நிமிடம் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தைக் கலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்)

**மூப்பர்:** இப்ப எல்லா இடங்களிலும் மோசடிகள் தானே நடக்குது.

மூப்பர் இவ்வாறு கூறியதைப் புரிந்து கொள்ளாத சாத்திரியார் என்ன சொல்லுறியள் மூப்பர். சொல்லுறதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**மூப்பர்:** இப்ப மரங்கள், கொப்புகள் வெட்டித்தரலாமெண்டு கொஞ்சப்பேர் கத்தி, கோடாலி, கயிற்றோட வருகினம். சரி மழைகாலம் தானே. மரக்கொப்புகளை வெட்டி விடலாமெண்டு நினைத்து விலைபேசினால் மூவாயிரம், மூவாயிரத்து ஐந்நூறு எண்டு ரேட் சொல்லிப்போட்டு மரக் கொப்புகளை வெட்டிய பிறகு முப்பதாயிரம், நாற்பதாயிரம் தரவேணும் எண்டு கத்தியைக் காட்டி வெருட்டுகிற சம்பவம் கடுமையாக நடக்குதாம்.

**பண்டிதர்:** இதென்ன அநியாயம். அப்ப பொலிஸாருக்குச் சொல்ல வேண்டியதுதானே.

**மூப்பர்:** அண்மையில இப்படியொரு சம்பவம் நடந்தபோது, வீட்டு உரிமையாளர் பொலிஸாருக்கு ரெலிபோன் எடுக்க முற்பட்டிருக்கிறார்.

அப்ப மரக்கொப்பு வெட்டினவர் கத்தியைக் காட்டி; பொலிஸாருக்கு ரெலிபோன் எடுத்தால் பொலிஸ் வாறதுக்கிடையில நீயும் இருக்க மாட்டாய் உன்ர போனும் இருக்காது எண்டு சொல்லியிருக்கிறார்.

என்ன செய்யிறது. இப்படியான அடாவடித்தனங்கள் எல்லாம் நடக்குது. இதுகளை யாருதான் கட்டுப்படுத்தப் போகினமோ.

இவ்வாறு மூப்பர் சொல்ல, எல்லாவற்றுக்கும் முடிவு இருக்குது என்பதை உணர்த்துவது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.




**மாணவர்களுக்கு விடுமுறை வழங்காத ரியூட்டறிகளைப் பாருமினே!**

ஆதித்தன்

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுக்கான காத்திருப்பு





ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்தாயிற்று. இனித் தேர்தலில் யார் வெற்றி பெற்றது என்ற முடிவு மட்டுமே பாக்கி. தேர்தல் முடிந்த மறுநாள் தேர்தல் முடிவோடு விடியப் போவதில்லை என்பது யாவரும் அறிந்ததே.

ஆக, எத்தனை சதவீதம் வாக்களிக்கப்பட்டது. தபால் மூல வாக்குகளின் எண்ணிக்கை என்ற விடயங்கள் வெளியாகியதைத் தவிர, வெற்றி பெற்றவர் யார்? என்பதை அறிவதற்கான காத்திருப்பு தேவையாகவேயுள்ளது.

வாக்குகள் எண்ணப்படுகின்ற இந்த நேரம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முக்கியமான வேட்பாளர்களின் இதயத் துடிப்பு வேகமடைந்திருக்கும்.

அவர்களுக்கு மட்டும்தானா என்று கேட்டால் இல்லை. சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கூட்டுச் சேர்ந்த தரப்புகள், ஆதரவாளர்கள் என எல்லோருக்குமே இதயத் துடிப்பு அதிகமாகவே இருக்கும். இது தேர்தல் முடிவு சார்ந்தவை.

மாறாக தேர்தல் முடிவோடு நாட்டில் அமைதியை ஏற்படுத்துவது என்பதும் மிகவும் முக்கியமான விடயம் என்பதால் அது சார்ந்தவர்களும் மிகவும் உசாரடைந்த நிலையில் காணப்படுவர்.

சரி பரவாயில்லையே என்றால் அதுவும் இல்லை. தேர்தல் முடிவுகள் பலரின் பதவிகளை பறிக்கவும் பலர் புதிய பதவிகள் பெறவும் வழியேற்படும் என்பதால் ஜனாதிபதித் தேர்தல் முடிவு கிடைக்கும்வரை நாட்டில் பெரும்பாலானவர்களுக்கு ஏக்கம் இருக்கவே செய்யும்:



இஃது ஒட்டுமொத்த இலங்கைத் திருநாட்டிற்கும் உரியதென்றால் தமிழ்- முஸ்லிம் மக்களும் தேர்தல் முடிவு கிடைக்கும் வரை ஒரு பதற்றமான சூழ்நிலைக்குள்ளேயே இருக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

எனவே ஒட்டுமொத்தத்தில் ஜனாதிபதித் தேர்தல் முடிவு கிடைக்கும் வரை யார்? என்ற கேள்வி தொடரும்.

இதுதான் என்பதற்கு அப்பால், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகி வெற்றி பெற்றவர் அறிவிக்கப்பட்ட பின்பு; அரசியல் விமர்சனங்கள், வெற்றி கிடைத்ததற்கான காரணங்கள் எனச் சிறிதுகாலம் அந்தப் பராக்கோடு கடந்து போகும்.

இதற்கு மேலாக தமிழ்- முஸ்லிம் மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கிய, அந்த இனம் சார்ந்த அரசியல் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தல் ஊடாக தோல்வியைச் சந்திக்கின்ற சூழ்நிலைக்குள் அகப்படுமாயின் அவற்றின் அரசியல் எதிர்காலம் என்பதும் ஆரோக்கியக் குறைவாகவே இருக்கும்.

மாறாக, சொன்னபடி தேர்தல் முடிவுகள் கிடைக்கப் பெற்றால் சம்பந்தப்பட்ட சிறுபான்மை அரசியல் கட்சிகளின் கை ஓங்குவதற்கான வாய்ப்பும் எட்டப்படலாம்.

எது எவ்வாறாயினும் சில வேளைகளில் குற்றச்சாட்டுக்கள் வலிந்து முன்வைக்கப்பட்டு கைதுகளும் விளக்கம் விசாரணை என்ற நாடகங்களும் அரங்கேறலாம்.

இவை ஒருபுறமாக இருக்க, ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்துவதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கின்றன.

ஆக, பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்றவாறு 2020 ஆம் ஆண்டும் - தேர்தலோடு சென்றுவிடப் போகிறது என்பதை மட்டுமே நாம் இங்கு கூறமுடியும்.

இங்கு ஜனாதிபதியாக யார் பதவியேற்றாலும் அவர் முதலில் செய்யக்கூடிய ஒரே விடயம் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்தி தனக்கு ஏற்றாற்போன்ற மந்திரி சபையை அமைப்பதாகும்.

எனவே 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பித்த ஜனாதிபதித் தேர்தல் இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற தேர்தலாக இருக்கப் போவதும் உறுதி.

அதாவது ஏழு ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாட்டின் 8 ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான இந்த ஜனாதிபதித் தேர்தலை எவரும் சாதாரணமாகப் பார்த்துவிடக் கூடாது.

ஏனெனில் இந்த ஜனாதிபதித் தேர்தல் இந்த நாட்டின் பாரம்பரிய அரசியல் கட்சிகளின் இருப்புத் தொடர்பிலும் புதிய அரசியல் கட்சிகளின் உயிர்ப்புத் தொடர்பிலும் தாக்கம் செலுத்தக்கூடியது.

தவிர, இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்கள் கூட சவால்களையும் சட்டச் சிக்கல்களையும் சந்திக்கக்கூடியதாக அமையலாம்.


என்ன செய்வது, இலங்கையின் அரசியல் என்பது விதிப்பயன் போலவும் கன்ம வினைப் பயன் போலவும் அமைந்து விடுவதுதான் மிகப்பெரிய துரதிர்ஷ்டம்.

இந்தத் துரதிர்ஷ்டத்தை இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் அதிகமாக அனுபவித்துக் கொள்கின்ற வேளையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னாள் ஜனாதிபதி என்றழைக்கப்படுவதற்கு இன்னமும் சில மணித்தியாலங்களே இருக்கின்றன என்றளவில் ஆரம்பம் என்று ஒன்று இருந்தால் முடிவு என்பதும் இருக்கவே செய்யும்.

ஆகையால் தேர்தல் முடிவுகள் எவ்வாறாக அமைந்தாலும் அதற்கும் ஒரு முடிவு உண்டு என்ற மன ஆறுதலோடு தேர்தல் முடிவுக்காகக் காத்திருப்போம்.

**விதுரன்**

# குணம் நாடி



இந்திரன் ஒருநாள் தேவ லோகத்தில் அவையில் வீற்றிருந்தான். அப்போது அவன் "மனிதர்கள் வாழும் உலகில் தற்போது கிரு ஷ்ணதேவன் என்னும் அரசனே மிகவும் நல்ல வன். அவனை போன்ற குணசாலிகள் எங்குமே இரு க்கமுடியாது. அவனே எல் லோரையும் விடச்சிறந்தவன்'' என்று கூறினார்.

இவ்விதம் கிருஷ்ணதேவனைத் தேவேந்திரன் புகழ்ந்து பேசியது அங்கிருந்த ஒரு தேவனுக்கு பிடிக்கவில்லை. அவன் ''கேவலம் ஒரு மனிதனை தேவராஜன் புகழுவதா?'' அப்படி என்ன கிருஷ்ண தேவரிடம் பெரிய சிறப்பு இருக்கிறது? அதையும் பார்த்து விடுகிறேன் என்று தீர்மானித்து கிருஷ்ணதேவனை சோதிப்பதற்கு பூலோகம் வந்தார்.

தேவன் ஓர் இறந்த நாயின் வடிவத்தில் கிருஷ்ணதேவன் வரும் வழியில் விழுந்து கிடந்தான். அந்த உடலில் இருந்து சகிக்க முடியாத துர்நாற்றம் வீசியது. நாயின் வாய் வேறு கிழிந்து அவலட்சணமாகக் காணப்பட்டது.

கிருஷ்ணதேவன் அவ்வழியாக வந்தான். வழியில் கிடந்த அழுகிய நாயின் உடலைக் கண்டான். ஆகா இந்த நாயின் பல்வரிசைதான் எவ்வளவு அழகாக இருக்கிறது. எத்தனை சுத்தமாகவும் வெண்மையாகவும் முத்துக்களைப்போல் அல்லவா பிரகாசிக்கிறது என்று வாய்விட்டு கூறினார்.

கிருஷ்ணதேவனின் கவனம் நாயின் அழுகிப்போன உடலைப் பற்றியோ அல்லது அதிலிருந்து வீசிய துர்நாற்றம் பற்றியோ செல்லவில்லை. ஆனால் அதில் காணப்பட்ட ஒரே ஒரு நல்ல விடயம் இருப்பினும் அதைப்பற்றியே சென்றது அல்லவா? இதுதான் அந்த மன்னனின் சிறப்பு.

கிருஷ்ணதேவனின் குணத்தைக்கண்டு மகிழ்ந்த தேவன் நாயின் உடலை விடுத்து அவன் எதிரே சுய உருவத்தில் தோன்றினான். அரசே உண்மையிலேயே தங்களிடத்தில் குணத்தை மட்டுமே நாடும் தன்மையும் நல்லனவற்றை மட்டும் எடுத்துக்கொள்ளும் உயர்ந்த பணியும் காண்கின்றன. இவ்வுலகில் தங்களைப் போன்ற குணவான்களே சுகமாக வாழ்கிறார்கள் எனக்கூறி கிருஷ்ணதேவனை ஆசீர்வதித்து தேவலோகம் திரும்பினார்.

-சிவனடியான்-



ஜெ.பிரவீஸ். தரம் 02. பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்.

## பழமொழிகள்

- வெறும் வாய் மெல்லுகிற அம்மையாருக்கு அவல் அகப்பட்டது போல.
- செலவில்லாச் செலவு வந்தால் களவில்லாக் களவு வரும்.
- தொடையில் புண்ணை நடையில் காட்டுகிறதா?
- எடுப்பார் மழுவை. தடுப்பார் புலியை. கொடுப்பார் அருமை.
- கைக்கோளனுக்குக் காற்புண்ணும் நாய்க்குத் தலைப்புண்ணும் ஆறா.
- இராகு திசையில் வாழ்ந்தவனும் இல்லை: இராச திசையில் கெட்டவனுமில்லை.










## புலிகளை அழிக்கும்போது தீர்வு தருவோம் என்றார்கள் இப்போது மறுக்கிறார்களே?

## படிப்பதை நினைவில் வைத்திருக்க ஒரு ஐடியா சொல்லுங்களேன்?

## அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். உண்மையா?

**கோகிலன் — வரணி**

**மதரீதியான சாஸ்திரங்கள் நவீன வளர்ச்சிக்கு தடை போடுகிறதா?**

மதரீதியான சாஸ்திரங்கள் என்று உடைக்கப்பட்டதோ அன்றே மனித இனத்திற்கு பீழை பிடித்து விட்டது என்பதே உண்மை.

எதை எதை எங்கு வைக்க வேண்டுமோ அதை அதை அங்கேதான் வைக்க வேண்டும்.

அதை விடுத்து படுக்கை அறைக்குப் பக்கத்தில் குளியலறையுடன் கூடிய மலசல கூடம் இருந்தால்தான் மதிப்பு என்கின்ற நவீனத்துக்குப் புகுந்த மனிதம் நவீனம் எனும் நாசத்துக்குள் ஓடிக்கொண்டிருக்கிறது.

**திகழன் — யாக்கரு**

**புலிகளை அழிக்கும்போது தீர்வு தருவோம் என்றார்கள் இப்போது மறுக்கிறார்களே?**

அட தம்பி ஆரடா உது என்னடா கதைக்கிறாய். புலிகள் என்றால் பயந்து ஒடுங்கி இருந்தவர்கள் புலியளை அழிச்சுப்போட்டினம்.

இனத்தீர்வு தருவினம் எண்டு நினைக்கிறது மேற்காலை வெளிக்கும் எண்டு வானத்தைப் பார்த்துக்கொண்டு இருக்கிறத்துக்குச் சமமடா. பேசாமல் பூபாலசிங்கம் புத்தகசாலையில போய் "30 நாட்களில் சிங்களம் கற்கலாம்" எண்ட புத்தகத்தை வாங்கிப் படியடா.

இல்லாட்டி உன்ர பிடரிக்குத்தான் சேதம்.

**சுதன் — குப்பிளான்**

**தேர்தலின்போதும் அது முடிந்தபின்பும் கூட்டமைப்பின் செயற்பாடு வேறுவிதமாக இருக்கிறதே?**

புலிகேசி படத்தில் வடிவேலு அடிக்கடி சொல்லும் வசனம் "அரசியல் இராஜதந்திரங்களை எல்லாம் கரைத்துக் குடித்தவனடா நீ" என்று. இதில் என்ன வேடிக்கை என்றால் இந்த வசனத்தைச் சொல்லிப் புகழ்வது தன்னை என்பது தான். இதுதான் இன்றைய எம் அரசியல்வாதிகளின் நிலையும்.

தமக்குத் தெரிந்த இருவர் அல்லது மூவர் சொல்வதை வைத்துக் கொண்டு பெரும் கனவுக்கோட்டையினைக் கட்டி மாயை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள்.

எல்லாம் கையை மீறிய பின்பு அங்ங... என்று கதறி அழுவார்கள் வடிவேலு போல்...

**கணபதிதாசன் — கட்டைக்காடு**

**முதலை தின்ற இனத்திற்கு விடுதலை கிடையாதா?**

கிடைக்கும் என்ற நம்பிக்கை துளிர்விட்டது உண்மை. ஆனால் அந்தத் துளிர் காய்ந்து போய் பல வருடங்கள் ஆகிவிட்டது.

நாம் யாரை நம்பினோமோ அவர்கள் எமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தது உண்மை.

தமது அரசியல் ஆதாயங்களுக்காக அவர்கள் எங்களைப் பகடைக்காயாகப் பயன்படுத்தியதும் உண்மை. இனி பாவப்பட்ட அந்த இனத்திற்கு விடிவு என்பது கடவுளால் கூட தர முடியாது என்பதே உண்மை.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**தரன் — மந்துவில்**


**அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். உண்மையா?**

கொஞ்சம் பொறுமையாக இருங்கள். அரசியல் பிழைத்து அதில் பிழைப்பு நடத்துபவர்கள் யார் யார் என்று உங்களுக்குத் தெரியவரும்தானே. அவர்கள் இனிப்படப்போகும் பாட்டை மட்டும் பாருங்கள்.

எங்களிடம் வந்து தேசியம் பேசி நாம் எங்கள் வாக்கை அவர்களுக்கு நாசமறுக்க, அவர்கள் எங்கள் வாக்கை வைத்துப் பிழைப்பு நடத்த, அப்பப்பா என்ன கொடுமை சரவணா. எல்லாவற்றிற்கும் காலம் பதில் சொல்லும். அதுவரை பொறுமனமே.

**நீலாம்பரி — விசுவமடு**

**கோத்தபாய ஜனாதிபதியாக வந்தால்?**



**ஜீபா — கரவெட்டி**

**பத்து ஆண்டுகளுக்கு முன் நடந்தவற்றை மறந்து பேசுபவர்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?**

பத்து நிமிடங்களுக்கு முன் ஒன்று பேசி அதை மறந்து மறுத்து இன்னொன்று பேசும் எம் வீரர்கள் இருக்கும் நிலத்தில் பத்து ஆண்டுபளைப் பற்றி பேசுகிறீரே.

வடிவேலு ஒரு படத்தில் கூறுவார் "அது வேற வாய் இது நாற வாய்" என. அந்த நிலைதான் இதுவும். இந்தா தீர்வு வருகிறது என்பதும் தீர்வு தரா விட்டால் தூக்கி எறிவோம் என்பதும் மீண்டும் அவர்களையே ஆதரித்துத் தொலைப்பதும் இந்தக் கற்றக்கரிக்குள் அடங்கும் தம்பி.

**அருட்கதிர் — துன்னாலை**

**உனக்குள் இறைவன் ஒழிந்துள்ளான் என மீண்டும் சம்பந்தர் தேவாரம் தொடங்கி விட்டதே?**

வந்திடும் வந்திடும் தீர்வு
வேளைக்கு வந்திடும் தீர்வு
இந்த ஆட்சிக்குள் கொடுப்போம் முட்டு
எந்த ஆட்சிக்கும் கொடுப்போம் முட்டு
வங்கிக் கணக்குகள் ஏற
திருவாய் மலர்வாய் திருநீறே.

**ராம் — யாழ்ப்பாணம்**

**படிப்பதை நினைவில் வைத்திருக்க ஒரு ஐடியா சொல்லுங்களேன்?**

பரப்புக்கணக்கில் நுனிப்புல் மேய்வதிலும் அடிக்கணக்கில் அடிவரை புல்லை இழுத்துச் சாப்பிடுவதில் முழுமை இருக்கும்.

படிப்பில் இந்த தியரியைக் கையாளுங்கள் எல்லாம் சரிவரும்.

**தர்ணிகா — கௌந்தில்**

**விடுதலைப் புலிகள் உருவாக்கிய கூட்டமைப்பு. அது இப்போது செயற்படுகிறதா?**

அடப்போமா. விடுதல்லைப் புலிகள் என்றால் யார் என்று கேட்கும் அளவில் அவர்கள் இருக்கிறார்கள். இப்போது போய் இதைக் கேட்கிறீர்கள்.

எல்லாம் காலக்கொடுமை. கட்டுக் கோப்பாய் ஓர் அணியில் அடம்பன் கொடியாய் இருந்த கூட்டமைப்பை, சிங்கம் எருதுக் கூட்டத்தைப் பிரித்த கதை போல பிரித்து அடிபடவைத்து நினைத்ததைச் சாதித்துவிட்டார்கள்.

இனி என்ன, நரிகளுக்குத் தான் வேட்டை. மிச்ச சொச்சங்களைத் தின்று தள்ள வேண்டியதுதானே.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## கொடுங்கோண்மையும் சர்வாதிகாரமும்

இரு துருவங்கள் இணையும்
அரசியல் காலத்திலே
தருவது சாத்தியமா தமிழருக்கு என்று
ஒரு தீர்வு

உருவத்திலே வேறுபட்டாலும்
உள்ளத்தால் ஒன்றாக
செயற்படும் பெரும்பான்மை
ஒருபோதும் தரப்போவதில்லை
எமக்கான உரிமைகளை

தெருவோரம் எம்மவர்கள்
போராடியபோது
ஏறெடுத்துப் பார்க்காதவர்
தேர்தல் காலம் வந்ததும் தேடித்தேடி
அலைகின்றனர்
தமிழர் தேசம் எங்கும்

கருவறுத்தவனும் கண்ணியவான்
போல் பேசுகின்றார்
உருமாறிப் போனான் தமிழன்
என்று எண்ணி
ஒருநாளும் மாறிப்போகாது
எம் இனத்தின் வீரம்

தமிழினத்தின் வாக்குகளே
வெற்றிகளைத்
தீர்மானிக்கும் என்று
உண்மை அறிந்தவர்கள்
ஏற்க மறுக்கின்றனர்
யார் வந்திடினும் எமக்கென்று
எதுவுமில்லை
முடிந்து போன போர்க்காலம்
அறிந்து வாக்களிப்போம்

தமிழ்யோகி

## வாழ்வதற்காக



சமராடினோமாம்
அதனால்
சுட்டுக்கொன்றார்களாம்
இல்லையில்லை
சமமாக வாழவிடவில்லை
அதனால்
சமராடினோம்!

கவிதைக் கலசம்

பயங்கரவாதி
என்கிறார்கள்
கைக்குண்டு
வைத்திருப்பவர்களை
அணுகுண்டு
வைத்திருப்பவர்கள்

அடிமையாக வாழ்வாய்
செங்குருதியின் விளைவு
கண்ணீராகினால்...
சுதந்திரமாக மீள்வாய்
கண்ணீரின் விளைவு
செங்குருதியானால்

விவேகானந்தனூர் சதீஸ், கிளிநொச்சி


## ஆன்மாவின் ஆசை

ஓர்முறை உடலினுள் சென்றிட ஆசை
பிள்ளைகள் முத்தம் பெற்றிட ஆசை
பெற்றவள் மடியில் தலைசாய்த்திட ஆசை
கட்டிய தாலி மீண்டும் கட்டிவிட ஆசை

சொல்லாத சோகம் சொல்லிவிட ஆசை
சொல்லாத சேதிகள் சொல்லிவிட ஆசை
முற்றத்து மண்ணில் படுத்திட ஆசை
நிலவோடு கதைபேசி மகிழ்ந்திட ஆசை

சுற்றங்கள் சேர்ந்து சிரித்திட ஆசை
முற்றத்து வேம்பில் ஊஞ்சலாட ஆசை
தோட்டத்து மண்ணை முத்தமிட ஆசை
கடைசியாய் ஒருமுறை தூங்கிவிட ஆசை

இணுவில் வாகீசன்



## தாகம்

எச்சி இருப்பதும் கொஞ்சம் தான்
தொண்டையில்
எஞ்சி இருப்பதும் கொஞ்சம் தான்

நீயோ (நீர்) கைதியாகி
எட்டும் உயரத்தில் தொட்டியில்

உ.களிஸ்ரன்
அல்வையூர்



## அரசியல் பிழைத்தோர்க்கு....

04

முந்தி வந்த செவியை
பிந்தி வந்த கொம்பு
மறைத்த கதையாய்
முந்தி நிற்பார்
முந்திரியாய் முந்தி நிற்பார்

கண்ட கண்ட
கதையெல்லாம்
கண்கண்டதாய் கதைத்திடுவார்
என்னத்துக்கும் எதற்கும்
நூலைத் தூக்கிப் பிடிப்பார்
மக்களை மோடர்
என்றே நினைப்பார்
தன்னைப் பெரும்
மேதையாய்க் காண்பார்


உண்மை ஒன்றிருக்க
பொய்மையை உண்மையென்பார்
தன்னைச் சார்ந்தோர்க்கு
தாராளமாய் வாரி இறைப்பார்

முறுக்கிவிட முண்டியடித்து
கல்லு முள்ளைக் கடக்கும்
பொம்மைக் கார்கள் போல்
சிலரைச் சேர்த்து வைத்திருப்பார்
முறுக்கி விடுவார்- அவர்
முண்டியடித்து முன்னிற்பார்
குழப்பம் ஒன்றே அவர் டிசைன்

என்ன செய்ய இதுதான் எம்
தமிழ்ச்சனத்தின் நிலை என்று
விம்மி அழுவதைவிட
வேறென்ன செய்திட...

மாவை. நா. கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல் - 472



## இசைத்தட்டுக்கு...

பிறப்பிடத்தை
மறந்தாலும்
பிரியமுள எசமானை
மறக்காத அறம் உனது
நன்றிக்கு
யாரும் ஈடாகார்
இசைத்தட்டுக்கு நீ
இருப்பிடம் தந்தாய் அதனால்
His Master's Voice என
கீர்த்தி பெற்றாய் வாழி நீடு

தவகந்தன், தாவடி

## மௌனத்தின் தேடல் - 473



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்.
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## பலமும் நலமும்

நன்றியுணர்வு
நிறைந்தவர் என்னும்
காரணத்தால்தான்
தராசில் தனியிடம்
குட்டியாருக்கு கிடைத்தது
வெற்றி தோல்விக்கு
பலம் மட்டுமன்றி
நலம் தரும் நிறையும்
நிறைவைத் தரும்
தேர்தலுக்கும்
இது மிகவும் பொருந்தும்

க.நாகராசா,
சாவகச்சேரி.

## குறளைக் கற்றவரே

உடலால் எடை குறைந்தாலும்
உளத்தால் உயர் பண்பின் பிறப்பு நீ!
குறளைக் கற்றவரே நன்றி மறக்கும் போது
நிறை உளத்தால் நீடு நிலைக்கும்
பண்பால் உயர் படைப்பே நீ

த.சிவகாமி
நல்லூர்

## மாற்றம்

குழந்தைப் பிள்ளைக்கும்
குட்டிநாய்க்கும்
இடம்கொடுப்பது கூடாதென்னும்
கூற்றானதென்றும்
உளவியல் ரீதியில்
பிழையான செயலென்று
சடைப்பொருளான தராசு
புரிந்து கொண்டதால்
தடைபோடாமல்
நீதியை நிலை நாட்டும்
காரியத்தைச் செய்கின்றது

ச.வரதலிங்கம்,
சாவகச்சேரி.

## ஐந்து மேலேனும்

ஆறு அறிவிலும்
ஐந்து மேலேனும்
கூறும் நீதி நன்றிக்
குணத்தின் குன்று நீ!
உன்னை உயர்த்திப்
பார்த்து மகிழும்
மனிதநேயம் உயரட்டும்
புனிதப் பிறப்பால் உயர்
பண்பு உனக்குரியதே

சிவமணி, சுருவில்

## கனம்

நாடியில் கையை ஊன்றி
நன்கு நீ யோசித்தாலும்
அளவைத் தராசில்
அளந்து பார்த்தால்
ஐயறிவு நாயினம்
கனமே தம்பி!
ஆறறிவு கொண்ட
மனிதனை விட
அன்பான நாய்க்குட்டி
மேலடா தம்பி!
நன்றாக நீ
சிந்தனை செய்
நாளை உனக்கு
நன்கு புரியும்
மனிதர்கள் எல்லாம்
மறந்தே வாழ்வர்
மறவாது- உன்னை
சுற்றியே வாழும்!

கணபதிதாசன்
கட்டைக்காடு

## இனத்தின் பகுப்பில் அல்ல

குழந்தையும்
தெய்வமும்
குணத்தால்
ஒன்றென
பழகும் பண்பு
இனத்தின்
பகுப்பில் அல்ல
அன்பு, கருணை
காருண்யம் காக்கும்
மனிதநேயம்
சிறுபருவத்திலேயே
வளர வழிசமைத்த
இயற்கையே வாழி

கந்தபாலன்
காவலூர்

## வீதியில் தான் உன் வாழ்க்கை

எங்களை எதற்காக
தட்டில் போட்டீர்கள்?
பசியை அளக்கவா
இல்லை எங்கள்
கவலைகளை அளக்கவா
எசமானைத் தொலைத்த நீயும்
உறவுகளைத் தொலைத்த நானும்
சமநிலை என்றாகிவிட்டது
ஏன் தெரியுமா? என்னைக் காக்க
இல்லங்கள் இருக்கின்றது–ஆனால்
உன்னை வளர்க்க
உள்ளங்கள் இல்லை
வீதியில்தான் உன் வாழ்க்கை
அதனால்தான் முள்
உன்பக்கம் இற(ர)ங்கி நிற்கின்றது

செ.கதிர்
முள்ளியவளை

# செருப்பு தைக்கும் கடை

அதிக சனநடமாட்டம் இல்லாத வீதி. வீதியின் பாதுகாப்பு வேலியில் கட்டிய ஒரு பெரிய குடையும் பலகைப் பெட்டிகளின் மேல் அடுக்கிய சில கிழிந்த சப்பாத்துக்கள். இவற்றை மட்டும் கொண்டது தான் ராமு அப்பாவின் பெயரளவில் சப்பாத்துத் தைக்கும் கடை. ராமு பாடசாலை முடிந்ததும் வீடு செல்லாது அப்பாவுடன் இருப்பதே வழமை. இன்றும் அவ்வாறே.

" மகன் ஸ்கூல் முடிந்து வந்திட்டீங்களா?" இன்றோடு ஸ்கூல் லீவுதானே?

ஆமாம் அப்பா இன்றோடு லீவு விட்டுட்டாங்க. இந்த முறை நான்தான் வகுப்பில் முதலாமிடம். பரிசுகூட தந்தாங்க. என்ட மகன் கெட்டிக்காரன்தானே. அப்பாவுக்கு ரொம்ப சந்தோசம். ஆனால் மகன்ட முகத்தில சந்தோசம் இல்லையே ஏன். என்ன ஆச்சு?

லீவு முடியிறதுக்குள்ள ட்ரிப் கூட்டிட்டு போறதா வகுப்புல டீச்சர் சொன்னாங்க. என்னையும் வரச்சொன்னாங்க என சோகமான தொனியில் கூறினான். இதனைக் கவனித்த அவர், "நீங்களும் போய் வாங்க மகன். சரி எவ்வளவு செலவாகும். எப்படியும் இரண் டாயிரம் ரூபா வரை கேட்டாங்க. யாழ்ப்பாணம் கூட்டிக்கொண்டு போறாங்க அப்பா.

அவ்வளவு காசு தேவையா மகன். அப்பாக்கிட்ட... யோசித்த வாறே " சரி மகன் எப்ப போறாங்க. நம்ம ஊரில இருந்து யாழ்ப்பாணம் ரொம்ப தூரத்தில இருக்குதே.

ஆமாம் அப்பா எப்படியும் ஒரு கிழமையில போகப்போறதாச் சொன்னாங்க.

சரி மகன் அப்பா காசை ரெடி பண்ணித் தாறேன் கவலைப்படா தீங்க. ராமுவின் முகத்தில் சின்ன மலர்ச்சி. "அப்பா நீங்க எவ்வளவு காலமா செருப்பு தைக்கிற வேலை செய்றீங்க?

மகன் நம்ம குடும்பத்தில தாத்தா அவரோட அப்பா எல்லோரும் இந்தத் தொழில்தான் செய்தாங்க. அப்பாவும் சின்ன வயசில இருந்தே தாத்தாகிட்ட கேட்டு செருப்பு தைக்கப் பழகிட்டேன். ஆனா என்ட ஆசைமகன் மட்டும் இந்தத் தொழிலுக்கு வரவே கூடாது. அப்பாட உசிர் இருக்கிற வரைக்கும் படிக்க வைக்கிறன்.

படிச்சு மத்தவங்க மதிக்கிற மாதிரி நல்ல தொழிலுக்கு போகனும். செருப்பு தைக்கிறவங்கள சமூகம் பார்க்கிற பார்வையே வித்தியாச மானது. தகாத தொழில் செய்யிறவங்கள இந்தச் சமூகம் பார்க்கிறத மாதிரி வித்தியாசமா பாப்பாங்க. மத்தவங்களுக்கு வேணும்னா செருப்பு காலுக்கு கீழே போடுறது. ஆனா நமக்கு சாப்பாடு போடுது. தெய்வத்துக்குச் சமம். வியர்வை சிந்திக் கஷ்டப்பட்டது இந்த அப்பாவோடேயே போகட்டும். மகன் அப்பா சொல்வது விளங்குதா? ஆம் என்றவாறு தலையசைத்தான்.

"இந்தாங்க மகன் ஐஸ்கிறீம் வாங்கிச் சாப்பிடுங்க" என மரப்பெட்டியைத் திறந்து பத்துரூபாய் தாளை நீட்ட பணத்தை வாங்கிக்கொண்டு ராமு கடைக்கு ஓடினான். ஒரு சப்பாத்தை அவர் மடியில் வைத்துத் தைத்தவாறு மனதுக்குள்...

எப்படியாவது மகனுக்கு காசு சேர்த்து கொடுக்கணும். முதல் தடவை ஆசையா கேட்டிருக்கான். பாவம் அவன் அம்மாவும் அவன் பிறந்ததில இருந்தே படுக்கையிலதான். என்ன செய்ய கடவுளே! நீதான் கடவுளே ஒரு வழிய காட்டணும்" என்று யோசித்துக் கொண்டிருக்க முதலாளி ஒருவர் அவரைத் தேடி வந்தார்.


"வாங்க முதலாளி சொல்லுங்க... ஒண்ணுமில்ல அண்ணே நம்ம கடைக்கு லொறில சாமாம் வந்திருக்கு. மூட்ட தூக்குற பொடியாங்கள் கொஞ்சம் குறைவாத்தான் இருக்காங்க. உங்களால முடிஞ்சா வந்திங்கன்னா ஐந்நூறு ரூபாய் தாறேன்" யோசித்த அவர் மகனுக்கும் காசு கொடுக்கணும் " சரி முதலாளி நீங்க போங்க. மகன் பக்கத்தில போயிருக்கான் வந்ததும் நான் வருகிறேன். முதலாளி போனதும் ராமு ஐஸ்கிறீம் சாப்பிட்டவாறு வந்தான்.

மகன் கடையைக் கொஞ்சம் பார்த்துக்குங்க. அப்பா ஒருத்தரை பார்த்திட்டு சீக்கிரம் வந்திடுறேன். சப்பாத்து தைத்து கொடுக்க யாராவது வந்தா கொஞ்சம் லேட்டாகி வரச்சொல்லுங்க. நான் சீக்கிரம் வந்திடுவேன் எனக்கூறிவிட்டு மகனுக்குக் காசு கொடுக்க வேண்டும் என்பதற்காக மூட்டையைத் தூக்கக் கூடத் தயங்காமல் கால்கள் விறுவிறுவென நடந்தன. இதுவரை பாரமே தூக்காத ஆனாலும் மகனுக்காக இது ஒன்றும் பெரிதல்ல என்று எண்ணிக்கொண்டு அந்தத் தோள்கள் மூட்டையும் சுமந்தன.

முதலாளி கையிலே ஐந்நூறு ரூபாய் தந்தபோது மனதில் இனம்புரியாத சந்தோசம். "முதலாளி இனி மூட்டை தூக்க இருந்தால் கூப்பிடுங்க. எனக்குக் கொஞ்சம் பணம் தேவைப்படுகுது" எனக் கூறியவாறு வெளியேறினார். மனதுக்குள் எண்ணங்கள் அலை மோதின. "மகனை எப்படியாவது ட்ரிப் அனுப்பி வைக்கணும். காசு பத்தாட்டி இந்த முதலாளிக்கிட்ட கொஞ்சம் காசக்கேட்டு சரி அனுப்பி வைக்கணும்" என நினைத்தவாறு வீதியைக் கடந்து செல்ல "ஆஹா" என்ற அலறல். சுற்றியிருந்த சனங்கள் கூடினார்கள். வேகமாக ஒரு லொறி சென்று மறைந்தது.

இரத்தம் வெள்ளமாக பாதையில் படர்ந்தது. கைகள் காசை இரத்தம் படாமலிருக்க இறுக்க மூடியது. சனக்கூட்டம் சுற்றி வேடிக்கை பார்க்க மூட்டை தூக்கும் போது கூட உடல் வலிக்க வில்லை. மகனின் முகத்தைக் காணாது பாசத்தந்தையின் கண்கள் வலியால் மூடின. ராமுவும் தூரத்தில் சனக்கூட்டத்தைக் கண்டு வேடிக்கை என நினைத்து அதைப் பார்ப்பதற்காக ஓடினான்.

**ரவிச்சந்திரன் போல்கிஷோர்**
**பண்டாரவளை**




**மா.செழியன்**
**வேலணை-03.**

# விடியாத இரவுகள்

சூரியன் தன் கதிர்ச்சிறகுகளை சுருக்கியபடி கீழ்வானில் மறைந்து கொள்ள வேலைக்குச் சென்ற கீதா வீட்டிற்கு வருவதைக் கண்டதும் அவளது இரண்டு பிள்ளைகளும் "அம்மா" என ஓடிச்சென்று தாயினைக் கட்டி அணைத்துக்கொள்ள கீதாவும் தன் பிள்ளைகளை உச்சிமுகர்ந்து முத்தம் கொடுத்துவிட்டு சில்லலென்ற நீரில் முகத்தினைக் கழுவிக்கொண்டு பிள்ளைகளுக்கும் தன் தாயாரான பொன்னாச்சிக்கும் இரவு உணவினைத் தயாரிக்க அடுக்களை சென்றாள்.

கீதாவிற்கு ஆறுதலாக இருக்கின்ற ஒரேயொரு உறவு அவள்தாய் பொன்னாச்சிதான். கீதா வேலைக்குச் செல்லும் போதெல்லாம் பொன்னாச்சி கிழவியின் பாதுகாப்பிலேயே இரு பிள்ளைகளும் இருந்தனர். கீதாவும் உணவினைத் தயாரித்து முடித்து பிள்ளைகளுக்கும் தன் தாயாருக்கும் உணவி னைப் பரிமாறிவிட்டு பொன்னாச்சிக்கு வேண்டிய எல்லாக் கடமைகளையும் செய்துவிட்டு பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு படுக்கைக்குச் சென்றாள்.

தூக்கம் வராது புரண்டு புரண்டு படுத்த கீதா எழுந்து வந்து சூடான தேநீரைப் பருகிவிட்டு கதிரையில் இருந்தபோது சுவரில் மாட்டியிருந்த கணவனின் படத்தைப் பார்த்ததும் விழிகளில் நீர்வடிய கடந்த கால வாழ்வை நோக்கி கீதாவின் மனம் நகர்ந்தது. கீதாவும் கண்ணனும் காதலித்து வந்தனர். கண்ணன் வீட்டில் இவர்களின் காதலை எதிர்த்தனர். அந்த எதிர்ப்பையும் மீறி கண்ணன் கீதாவை திருமணம் செய்து கொண்டான். திருமண வாழ்வில் இணைந்த இருவரும் சுதந்திர வானில் முகிலினம் போல் எதுவித தடையுமின்றி சந்தோசமாக வாழ்ந்து வந்தனர்.

கண்ணன் விறகு வியாபாரம் செய்தே தனது குடும்பத்தை நடத்தி வந்தான். இப்படி இருக்கும் போது கண்ணன் நண்பர்களோடு சேர்ந்து போதைப்பாவனைக்கு அடிமையானான். இரு பிள்ளைகள் பிறந்தும் கண்ணன் திருந்தவில்லை. நித்தமும் குடித்துவிட்டு வரும் தனது கணவனை கீதா எத்தனையோ முறை கண்டித்து ஏசினாள் முடியவில்லை. "கீதா... கீதா" எனக் கண்ணன் கூப்பிட்டான். கீதாவும் ஓர் எரிச்சலோடு " என்ன சொல்லுங்கோ" எனக் கேட்டாள். " நான் விறகு வெட்டப் போறன் கோடரி எங்கே" எனக் கண்ணன் கேட்டான்.

கீதாவும் கோடரியை எடுத்துக் கொடுத்து விட்டு இண்டைக்கெண்டாலும் குடிக்காமல் மனுசன் மாதிரி வாங்கோ" "ஓமெனக் கூறிக்கொண்டு சைக்கிளை எடுத்தபோது " அப்பா நாளைக்கு பள்ளிக்கூடம் போக கொப்பியும் பென்சிலும் வேணும்" என இரு பிள்ளைகளும் சொன்னார்கள். " இரண்டு பேருக்கும் நான் வாங்கிக்கொண்டு வாறன்" எனக்கூறியவாறு கண்ணன் சென்றான். " கடவுளே நீதான் இவரைத் திருத்த வேணும்" எனக் கூறியபடி வீட்டு வேலைகளில் ஈடுபட்டாள். நேரமாகியும் கண்ணன் வீடு வந்து சேராததால் நெஞ்சு படபடக்க வழியினைப் பார்த்தபடி நின்றாள் கீதா.

பிள்ளைகளும் " அம்மா அப்பா எங்களுக்கு கொப்பி வாங்கிக் கொண்டு வருவாரா" எனக் கேட்டனர். பிள்ளைகளின் கேள்விக்கு பதில்கூற முடியாது தவித்தாள் கீதா. வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக கீதா சொன்ன வார்த்தைகளை அசட்டை செய்துவிட்டு அன்று அளவிற்கு அதிகமாக கண்ணன் குடித்துவிட்டு வந்தான். பிள்ளைகளும் தகப்பனிடம் ஒன்றும் கேளாது பயந்து நின்றனர்.


"கீதா... கீதா எனக் கூப்பிட்டவாறு நடக்க முடியாது கால்கள் தள்ளாடி வந்தான். "நீங்கள் திருந்தவேமாட்டீர்களா? வெளிக்கிடும் போது என்ன சொன்னான்" எனக் கீதா கேட்டாள். "கீதா... கீதா... நான் மறந்து போனேன்" எனப் போதையில் வார்த்தைகள் தடுமாறியது கண்ணனுக்கு. "" குடிக்க ஞாபகமிருக்கு பிள்ளைகளுக்கு கொப்பி வாங்க ஞாபகமில்லை "சீ" என்ன மனுசன்" எனக் கீதா கூற " என்ன கீதா நல்லாத்தான் வாய் நீளுது" எனத் தன் மனைவியை அடிக்க கை ஓங்கிய கண்ணன் கீழே விழுந்து வாயால் இரத்தம் ஓடக் கிடந்தான். அதைக் கண்ட கீதா குளறி அழுத சத்தத்தைக் கேட்டு அங்கே ஓடிவந்தார்கள். கண்ணனை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

கீதாவும் இருபிள்ளைகளையும் தனது தாய் பொன்னாச்சியுடன் விட்டுச் சென்றாள். ஏதுமறியாத இரு பிஞ்சு மனங்களும் திகைத்து நின்றன. கண்ணனின் நிலைமை மோசமாகியது. டாக்டர்களும் கண்ணனைக் காப்பாற்றப் போராடிப் பார்த்தார்கள் முடியவில்லை. ஒருசில மணித்துளிகளால் வெள்ளைத் துணியால் மூடப்பட்ட நிலையில் கண்ணனைக் கொண்டு வந்தனர். அந்தக் காட்சியைக் கண்டதும் கீதாவிற்கு உலகமே இருண்டு விட்டது போல் இருந்தது.

" நான் உங்களை நம்பி வந்தேனே. இப்ப என்னையும் பிள்ளைகளையும் தனிமையில் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டீர்களா எனக் குமுறி அழுதாள் கீதா. கண்ணனின் இறுதிப் பயணத்தில் எல்லோரும் கலந்து விட்டுச் சென்றனர். தனது கணவனின் குடியால் கணவனை இழந்து குடும்பமே சீரகுலைந்து எந்தவொரு ஆறுதலும் இல்லாமல் பாதுகாப்பற்ற உலகில் வயதான தாயாரோடு இரு பிள்ளைகளுடன் தனிமையில் வாழ்வதை நினைத்ததும் கீதா தேம்பித் தேம்பி அழுதாள்.

"புள்ள கீதா, கீதா ஏனம்மா அழுகிறாய் எனப் பொன்னாச்சி கேட்க பிள்ளைகளும் கண்களைக் கசக்கிக் கொண்டு "அம்மா, அம்மா" எனத் தாயின் கரங்களைப் பிடித்தனர். அப்போது தான் கீதா உணர்ந்து கொண்டாள். பொழுதுவிடிந்துவிட்டது என்பதை. ஆனால் தனது வாழ்வு மட்டும் விடியாத இரவுகளாக நீண்டு செல்வதை நினைத்த போது மீண்டும் கீதாவின் விழிகள் பனித்தன.

# மத்திய கிழக்கு நாடுகளில் வளரும் ஈரானின் செல்வாக்கு சாத்தியமானது எப்படி?



மத்திய கிழக்கு நாடுகளில் போட்டி நாடாக இருக்கும் சவுதி அரேபியாவுக்கு எதிராக செல்வாக்கு செலுத்தும் தந்திரோபாய போராட்டத்தில் ஈரான் வெற்றி பெற்று கொண்டிருக்கிறது என்று லண்டனை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் சர்வதேச தந்திரோபாய ஆய்வு நிறுவனத்தின் ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

ஈரானின் பிராந்திய போட்டி நாடுகள் மேற்குலக நாடுகளின் ஆயுதங்களை வாங்குவதில் பில்லியன் கணக்கான டொலர்களை செலவிட்டுள்ளன. அவற்றில் பெரும்பான்மையானவை பிரிட்டனில் இருந்து வாங்கப்பட்டுள்ளன.

ஆனாலும், பொருளாதார தடை விதிக்கப்பட்டுள்ள ஈரான், தன்னுடைய தந்திரோபாய கொள்கைகளை நிலைபெற செய்வதில் இந்த பிராந்தியம் முழுவதும் வெற்றிபெற்றுள்ளதாக தெரிகிறது.

சில நாடுகளில் கட்டுப்படுத்தும் செல்வாக்கும் முதல் சிரியா, லெபனான், ஈராக் மற்றும் ஏமன் போன்ற நாடுகளின் விவகாரங்களிலும் வேறுபட்ட நிலைகளில் ஈரான் செல்வாக்கு கொண்டுள்ளது.

**"சமநிலை கொள்ளுதல்"**

பிரக்ஸி ஆயுதப்படையினர் என்ற பெயரில் மத்திய கிழக்கு நாடுகளோடு அல்லாத கூட்டணி வலையமைப்பை மறைமுகமாக ஈரான் கட்டமைத்திருக்கிறது.

லெபனானிலுள்ள ஹிஸ்புல்லா தொடங்கி தனது புரட்சிகர கருத்தியலை வெளிநாடுகளுக்கு பரப்ப தொடங்கிய இஸ்லாமிய குடியரசான ஈரான், 1979ஆம் ஆண்டு டெஹ்ரானுக்கு அயத்துல்லா அலி கமேனி வந்தது முதல் எல்லை கடந்து தனது செல்வாக்கை பரப்பி வருகிறது.

"மத்திய கிழக்கு நாடுகளில் ஈரானின் செல்வாக்கு வலையமைப்பு" என்று தலைப்பிடப்பட்டுள்ள 217 பக்கங்களுடைய இந்த சர்வதேச தந்திரோபாய ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையானது, இந்த பிராந்தியத்தில் ஈரானின் நடவடிக்கைகள் எந்தளவுக்கு உள்ளன, எதுவரை சென்றடைந்திருக்கின்றன என்று இதற்கு முன்னர் இல்லாத விபரங்களை வழங்கியுள்ளது.

"இஸ்லாமிய குடியரசான ஈரான், தனக்கு ஆதரவான நிலைமையை மத்திய கிழக்கு நாடுகளில் சிறந்த சமநிலையில் பேணி வருகிறது" என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

தங்களைவிட வலிமையான மரபுவழி இராணுவத்தை செல்வாக்கு மிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டும், மூன்றாம் தரப்பு சக்திகளை பயன்படுத்தியும் எதிர்ப்பதன் மூலம் இதனை ஈரான் சாதித்துள்ளது என்று இந்த அறிக்கையை தயாரித்தவர்கள் கூறுகின்றனர்.

இதன் முக்கிய பகுதியாக, இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்பு படையின் வெளிவிவகார பிரிவாக இருக்கும் குர்து ஆயுதப் படைப்பிரிவுகள் உள்ளன.

குர்து படைப்பிரிவும், அதன் தலைவர் மேயர் ஜெனரல் காசெம் சுலைமாணியும் ஈரானின் உயரிய தலைவரான அயத்துல்லா அலி கமேனியுடன் நேரடியாக உரையாடுகின்றனர். ஈரானின் இராணுவத்தையும் கடந்து செயற்படும் சிறந்த சுயாதீன அமைப்பாக இது செயற்படுகிறது.

2003ஆம் ஆண்டு ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சியை அமெரிக்காவின் தலைமையிலான படை அகற்றிய பின்னர், மத்திய கிழக்கு நாடுகள் முழுவதும் பயிற்சியளித்தல், நிதியளித்தல், ஆயுதங்கள் அளித்தல் அனைத்தையும் ஈரான் வழங்கியதால், குர்து படைப்பிரிவுகள் தங்களின் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி கொண்டன.

மேலும், திரள் தந்திரங்கள், டிரோன் (ஆளில்லா விமானம்) மற்றும் இணைய தாக்குதல்கள் என மரபுவழி சாராத சமச்சீரற்ற போர் முறைகளை குர்துகள் உருவாக்கியுள்ளனர்.

இதனை பயன்படுத்தித்தான் மரபுவழி ஆயுதங்களில் வலிமையுடையவர்களாக கருதப்படும் எதிரிகளை திணற செய்ய ஈரானால் முடிந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் குர்து படைப்பிரிவுகள் உட்பட இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்பு படையை வெளிநாட்டு தீவிரவாத நிறுவனம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். இன்னொரு அரசின் படைப்பிரிவை வெளிநாட்டு தீவிரவாத நிறுவனம் என அமெரிக்கா அறிவித்தது இதுவே முதல் முறை.

ட்ரம்பின் இந்த முடிவுக்கு பதிலடியாக, வளைகுடா பிராந்தியத்திலுள்ள அமெரிக்க இராணுவத்தை (அடையாள ரீதியில்) தீவிரவாத படை என்று ஈரான் அறிவித்தது.

ஜெனரல் சுலைமாணியின் பங்கு ஒரு இராணுவ தளபதி என்ற நிலைக்கு மேலாகவே உள்ளதாக கருதுகிறார் ஜாக் ஸ்ட்ரா. 2001 முதல் 2006ஆம் ஆண்டு வரை பிரிட்டனின் வெளியுறவு அமைச்சராக இருந்து ஈரானுக்கு பலமுறை சென்று வந்துள்ளவர்தான் ஜாக் ஸ்ட்ரா.

"கூட்டணி படைப்பரிவுகளின் மூலம் இந்த பிராந்தியத்தில் காசெம் சுலைமாணி, அவர்களின் வெளியுறவு கொள்கைகளை செயற்படுத்தி வருகிறார்" என்கிறார் ஜாக் ஸ்ட்ரா.

சர்வதேச தந்திரோபாய ஆய்வு நிறுவனத்தின் இந்த அறிக்கை பற்றி, லண்டனிலுள்ள ஈரான் தூதரகத்தின் செய்தி தொடர்பாளர் பிபிசியிடம் கருத்து தெரிவித்தபோது, "இந்தப் பிராந்தியத்தில் ஈரானின் பங்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என இந்த அறிக்கை தெரிவிக்குமானால், இது வரவேற்க வேண்டிய அறிகுறியாகும்" என்று கூறினார்.

"ஈரானை கண்டுகொள்ளாத கொள்கை வேலை செய்யவில்லை. ஈரான் எதிர்ப்பை வெளிக்காட்டியது. அமெரிக்காவின் பொருளாதார தீவிரவாதத்தின் சேதங்களை ஈரான் வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ளது. எனவே, ஈரான் வலிமையான நாடு. பிற நாடுகளோடு அதிக உறவுகளை பேணி வருகிறது. பிராந்திய அளவில் பல ஒத்துழைப்புகளை மேற்கொண்டு வருகிறது." என்கிறார் அவர்.

**ஹிஸ்புல்லா - இளைய பங்காளி**

லெபனானின் ஷியா இஸ்லாமிய இயக்கமான ஹிஸ்புல்லா அரசியல் கட்சியாகவும், ஆயுதப்படையாகவும் செயற்பட்டு ஈரானின் பங்காளி நாடுகளோடு ஒப்பிடுகையில் தனிச்சிறப்புமிக்க தகு நிலையை பெற்றுள்ளது" என்கிறது இந்த அறிக்கை.

சிரியா மற்றும் ஈராக் வழியாக ஈரானின் விநியோக வழிகளை இந்த அறிக்கை விவரிக்கிறது.

சிரியா ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்திற்கு விசுவாசமான சிரிய படைகளோடு போரிடுவது மற்றும் ஈராக்கின் ஷியா ஆயுதப்படைக்கு உதவியளிப்பது என இவ்விரு நாடுகளிலும் நடைபெறும் போர் களில் ஹிஸ்புல்லா முக்கிய பங்காற்றி யுள்ளது.

ஹிஸ்புல்லாவை நம்பிக்கைக்குரிய இளைய பங்காளி என்று வரையறுக்கும் இந்த அறிக்கை, இதனை ஒரு பிரக்ஸி படை என்பதைவிட ஆயுதம் தாங்கிய ஒரு சகோதரர் போல என்று விபரிக்கிறது.

அரபு ஆயுதப்படையின் வரிசையில் உரையாடலில் பங்குபெறுவதில் முக்கியமானதாக வும், ஈரானோடு உறவிலுள்ள சிறந்த அரசியல் கட்சிகளில் ஒன்றாகவும் இந்த குழு உருவாகியுள்ளது.

**ஈராக் மற்றும் சிரியாவுக்குள் உட்புகுதல்**

அமெரிக்கா தலைமையிலான படை ஈராக்கை ஆக்கிரமித்த பின்னர், சதாம் ஹுசைனின் ஆட்சியை அகற்றியதால், மத்திய கிழக்கு நாடுகளில் பெரியளவில் மாற்றம் ஏற்பட்டது. இதனைத்தனக்கு சாதகமாக பயன்படுத்திகொள்ள ஈரானுக்கு சிறந்த வாய்ப்பும் கிடைத்தது.


இந்த நிகழ்வுக்கு முன்னர், ஈரானிய விவகாரத்திற்கு எதிரான அரணாக சன்னி முஸ்லிமால் ஆளப்பட்ட ஈராக்கை வளைகுடா அரபு நாடுகள் பார்த்தன.

இந்த அரண் அகற்றப்பட்டு விட்டதால், தனது மத மற்றும் கலாசார உறவுகளை ஷியா அரேபிய முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஈராக்கிற்குள் ஈரான் வெற்றிகரமாக அமைத்து, அந்நாட்டில் வலிமையான சக்தியாக உருவெடுத்துவிட்டது.

"ஜனரஞ்சக அணிதிரட்டல் அலகுகள்" என்று அழைக்கப்படும் துணை இராணுவ படைக்கு பயிற்சியளித்து, ஆயுதங்களை ஈரான் வழங்கியுள்ளது. இஸ்லாமிய அரசு என்ற கூறிக் கொள்ளும் குழுவை தோல்வியடைய செய்ய உதவிய இந்தப் படையை, ஈரானிய காலணியாதிக்க வடிவமாக பல ஈராக்கியர் பார்க்கின்றனர்.

சமீபத்தில் ஈராக்கில் நடைபெறும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டங்களை பார்க்கும்போது ஈரானிய ஆதரவோடு செயற்படும் அரசோடு ஈராக்கிய இளைஞர்கள் மகிழ்ச்சியாக இல்லை என்பது தெரிய வருகிறது.

நாட்டுப்பற்றாளர்கள் என்ற அடையாளத்தில் இருந்து நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் நுழையும் ஜனரஞ்சக அணிதிரட்டல் அலகில்



ஏற்பட்டுள்ள மாற்றமே மக்களிடம் இருந்து அதன் ஆதரவை இழக்க செய்துள்ளது என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

ஈரானியர்கள் அங்குள்ள கட்டுப்பாட்டை இழக்கும் ஆபத்து இருப்பதால், ஈராக்கில் நடைபெறும் சம்பவங்களை மிகவும் முக்கியமாக எடுத்துகொள்ள வேண்டியுள்ளது" என்று ஜாக்ஸ்டாரா தெரிவிக்கிறார்.

சிரியா அரசு ஈரானின் கூட்டாளியாக நீண்டகாலமாக இருந்து வருகிறது. சிரியாவின் உள்நாட்டு போரில், ரஷ்ய விமானப் படையோடு, ஈரானிய படைப்பிரிவுகள், ஹிஸ்புல்லா மற்றும் பிற ஷியா போராளிகள் அனைவரும் ஜனாதிபதி ஆசாத்துக்கு உதவி, கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான நிலையை உருவாக்கினர்.

ஆனால், இன்று "சிரியா அரசாங்கமும், அதன் முறைசாரா பாதுகாப்பு கட்டமைப்புகளும் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக பரிணமித்து வரும் நிலையில், ஈரான் அந்த விவகாரங்களில் தன்னை உட்பொதித்து வருகிறது என்று சர்வதேச தந்திரோபாய ஆய்வு நிறுவன அறிக்கை தெரிவிக்கிறது.

**வளைகுடா போட்டியாளர்களை தொந்தரவு செய்தல்**

அமெரிக்கா இந்த பிராந்தியத்தை விட்டு வெளியேறிவிட்டால், ஈரான் அங்கு தனது இராணுவ சக்தியை வலிமையாக்கிக் கொள்ள விரும்புகிறது. இதனை நடக்க விட்டு விடக்கூடாது என்று சவுதி அரேபியா, பஹ்ரைன்மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் எண்ணுகின்றன.

2011ஆம் ஆண்டு அரபு வசந்தம் போராட்டங்கள் தொடங்கியபோது, அந்த கலகத்தை ஈரான் நன்றாக பயன்படுத்தி கொண்டது. நாட்டின் பெரும்பான்மையான ஷியா மக்களிடம் இருந்த குறைகளைத் தீர்த்து கொண்டதோடு, சில வன்முறை குழுக்களுக்கு ஆயுதம் வழங்கி உதவியது.

"பஹ்ரைன், சவுதி அரேபியா மற்றும் குவைத்தில் உள்ள ஆயுதக்குழுக்களுக்கு ஈரானின் ஆதரவு, அந்தந்த நாட்டு அரசுகளை எரிச்சலடையச் செய்யவும், அழுத்தம் கொடுக்கவும், அமெரிக்காவோடு அவைகள் கொண்டிருக்கும் நட்புறவுக்கு அரசியல் ரீதியாக பழிவாங்கவுமே" என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இந்தக் குழுக்களால் வழங்கப்படும் அச்சுறுத்தல் அனைத்தும் எதிர்கொள்ளக்கூடியவை தான். ஆனாலும், கடந்த செப்டெம்பர் மாதம் சவுதி எண்ணெய் நிலையத்தில் நடத்தப்பட்ட டிரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள், சீரற்ற போர் முறையால் வளைகுடா அரேபிய நாடுகள் எந்தளவுக்கு பாதிக்கப்படும் நிலையில் உள்ளன என்பதை தெளிவாகக் காட்டின.

அமெரிக்காவிடம் இருந்து சவுதி அரேபியா விலையுயர்ந்த ஏவுகணை தடுப்பு அமைப்பை வாங்கியுள்ளது. ஆனால், இந்த உயரிய நவீன தொழில்நுட்ப அமைப்பால், நாட்டின் பாதியளவு எண்ணெய் உற்பத்தி திறனை தற்காலிகமாக செயலிழக்க செய்து விட்ட குறைவான தொழில்நுட்ப கருவிகளால் தொடுத்த தாக்குதலை தடுக்க முடியவில்லை. சவுதி எண்ணெய் நிலை யத்தில் நடந்த தாக்குதல் ஈரானில் செய்யப்பட்ட ஏவுகணை களால் நாட்டின் வடக்கில் இருந்து ஏவப்பட்டன என்று சவுதியின் வெளி யுறவு அமைச்சகம் தெரிவித்தது. ஆனால், இந்தச் சம்பவத்தில் ஈரான் ஈடுபடவில்லை என்று ஈரான் மறுத்துவிட்டது.



**ஏமன்**

2014இல் ஏமன் போரில் இறங்கிய போது ஈரான் தலையீடு பெரிதாக இல்லை. ஆனால், 2015 மார்ச் மாதத்தில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் வென்ற இடங்களில் இருந்து அவர்களை வெளி யேற்றும் நோக்கத்துடன் சவுதி அரேபியா விமானத் தாக்குதலில் ஈடுபட்டபிறகு ஈரான் தனது ஆதரவை அதிகப்படுத்தியது.

குறைந்த செலவில் தமது எதிரியான சவுதி அரேபியாவை பணியவைக்க வேண்டும் என்பதற்காகவும், செங்கடல் பகுதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பாப் அல்-மண்டப் பகுதியில் தம்மை வலுப்படுத்திக்கொள்வதற்காகவும் முன்னேறிய தொழில்நுட்பம் கொண்ட ஆயுதங்கள் அளிப்பது போன்ற உதவிகளை ஈரான் செய்தது என்கிறது ஐ.ஐ.எஸ்.எஸ் அறிக்கை.

ஏமன் போரினால், சவுதி அரேபியாவுக்கு பல பில்லியன் டொலர் செலவு, பின்னடைவு. 200க்கும் மேற்பட்ட ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள் ஏவப்படவும் அது காரணமாக இருந்தது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களை மீறி ஹிஸ்புல்லா, ஹவுதி ஆகிய பயங்கரவாத அமைப்புகளுக்கு ஈரான் பேலிஸ்டிக் ஏவுகணைகளை வழங்கியதாக சவுதி வெளியுறவு அமைச்சகம் குற்றம்சாட்டியது.

போரினால் ஏமனில் ஏற்பட்ட பாரிய சேதாரங்கள், குறிப்பாக சவுதி தலைமையிலான விமானத் தாக்குதலால் நிகழ்ந்த சேதங்கள் காரணமாக சவுதி அரேபியாவுக்கு ஏற்பட்ட இழப்பு பெரிதாகத் தெரியாமல் போனது.

இந்தப் பேரழிவு யுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் எவரும் இல்லை. ஆனால், சவுதியும் அதன் கூட்டாளியான ஐக்கிய அரபு எமிரேட்டும் தங்கள் புழக்கடையில் ஈரான் நிரந்தரமாக கால்பதிக்க முடியாமல் செய்ததே ஏமனில் தாங்கள் செய்த சாதனை என்று கருதுகின்றன.

**குறைந்த செலவில் அதிக செயற்றிறன்**

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் இருக்கும் வரை ஈரான் அதன் பாதையை மாற்ற போவதில்லை என்ற இந்த அறிக்கை நிறைவு பெறுகிறது. மூன்றாம் தரப்பு திறன்களை விரிவாக்குவதை ஈரான் தொடரும் என்றும் தெரிவிக்கிறது.

புதிய அணு ஒப்பந்தம் உருவாக்குவதற்காக கடந்த ஆண்டு ட்ரம்ப் பழைய ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறி, தடைகளை விதித்ததால், கடும் மோதலே தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விரிவான வலையமைப்பை ஈரான் உருவாக்கியுள்ளதால், அதிக தாக்குதல் நடைபெறும் சாத்தியமே அதிகம் காணப்படுகிறது.

அமெரிக்க பொருளாதார தடைகள் ஈரான் மக்களை அதிகமாக பாதிக்கின்றன. பொருளாதார ரீதியாக ஈரான் அபாயகரமான இடத்தில் உள்ளது. ஆனால், குறைந்த செலவில் அதிக விளைவை ஏற்படுத்தக்கூடிய ஒரு கூட்டணியை ஐஆர்ஜிசியின் குர்து படைப் பிரிவு உருவாக்கியுள்ளது.

ஈரான் புறக்கணிக்க முடியாத ஒரு சக்தியாக உருவாகியுள்ளதாக இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

**பி.பி.சி. தமிழ்**

# உங்கள் பாதையில் உள்ள ரோஜாக்களை ரசியுங்கள்

ஹாலிவுட் நடிகை, இப்போது வயது 35.

"உனக்குக் கிடைத்திருப்பது ஒரே வாழ்க்கைதான். கலக்கம் வேண் டாம். என்றாவது ஒருநாள் வெற்றி உன்னைத் தேடிவரும். அதனால் நிம்மதியாக, மகிழ்வாக, பாதையில் உள்ள ரோஜாக்களை ரசித்துக் கொள்"

அன்னா கேம்ப்.



இரண்டாம் வகுப்பு படிக்கும் போதே அன்னாவுக்கு நடிப்பின் மீது ஆர்வம். சிறு வயதில் வகுப்பில் கதைகள் சொல்லவும், பாடல்கள் பாடவும் அதிகம் ஆசைப்பட்டார் அன்னா. பிரபல நடிகையாக வேண் டும் என்று மட்டுமே இருந்த ஆர்வம் பின்னாளில் சிறந்த திரைப்படங்களில் மட்டுமே நடிக்க வேண்டும் என்று மாறிப்போனது.

"20 வயதுகளில் நிராகரிப்புகள் நிறையவே இருக்கும். அவற்றை எதிர்கொண்டு கடக்க வேண்டும்" என்று சொல்கிறார் அன்னா.

கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் நியூயோர்க்கின் 189ஆவது தெருவுக்குக் குடிபோனார் அன்னா. தினமும் ஒவ்வொரு விளம்பர ஏஜென்சி. புதிது புதிதாக ஓடிஷன்கள். சில நாட்களில் மூன்று ஆடிஷன்கள்கூட! இப்படி நடையாக நடந்து தொடர் நிராகரிப்புகளைச் சந்தித்தார் அன்னா. வேலை கிடைக்கவில்லை என்றாலும், தேடலில் சுணக்கம் இருக்கவே கூடாது என்று நம்பினார். 2005ஆம் ஆண்டு, முதல் வாய்ப்பு கொலம்பினஸ் என்ற படத்தில் கிடைத்தது. பிராட்வே நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். தி சீன், இகஸ் என மேடை நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பும், அதன்பின் காஷ்மீர் மாஃபியா என்ற தொலைக்காட்சித் தொடரில் நடிக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

2009-ம் ஆண்டு முதல் படங்களில் நடிக்கத் தொடங்கினாலும், சூப்பர் டூப்பர் ஹிட் படம் 2012ஆம் ஆண்டு வெளிவந்த பிட்ச் பர்ஃபெக்ட். குடும்ப வாழ்க்கை அப்படி ஒன்றும் நிம்மதியாக இல்லை. அடுத்தடுத்து தோல்வியில் முடிந்த இரண்டு திருமணங்கள். ஆனால், தன் பணியில் தெளிவாகவே இருந்தார் அன்னா. ஃபிட்னஸ் மீது அதிக ஆர்வம்கொண்ட அன்னா, தினமும் மைல்கணக்கில் நடக்கிறார். நடை மட்டுமே எடையைக் குறைக்கக்கூடியது என்று நம்பும் அன்னா, பிட்ச் பர்ஃபெக்ட் படத்தில் நடனம் ஆட வேண்டும் என்பதற்காக ஒரு நாளைக்கு 8 மணி நேரம் தொடர் நடனப் பயிற்சி எடுத்தார்.

இப்போது நெட்ஃப்ளிக்ஸ் சீரிஸில் நடித்துவரும் அன்னா, பாதையில் உள்ள ரோஜாக்களை ரசித்துக்கொண்டுதான் இருக்கிறார். 22 வயது அன்னாவுக்கு அவரே இப்போது சொல்ல விரும்புவதுதான் முதல் பாராவில் நீங்கள் படித்தது!

ஜெனி பிரிட்டன் பார்

நிறுவனர் - ஜெனிஸ் ஸ்ப்லெண்டிட் ஐஸ்க்ரீம்ஸ், இப்போது வயது 45.



"22 வயதுப் பெண்ணுக்கு என்ன அறிவுரை சொல்வது? எதுவும் இல்லை. அந்த வயதில் பயத்துடனும் எதுவும் எளிதில் கிடைத்து விடாது என்ற எண்ணத்துடனும் இருந்ததால் தான் என்னால் வெற்றி பெற முடிந்தது"

"உங்களுக்குப் பிடித்த பெண் ஆளுமை யார்?" என்ற கேள்விக்கு 'ஹைபேஷியா' என்று பதில் சொல்கிறார் ஜெனி. எகிப்தின் தலைசிறந்த பெண் அறிஞரான ஹைபேஷியாவின் தத்துவ வாதத்தைத் தாங்கமுடியாமல் அவரைக் கல்லால் எறிந்து கொன்றார்கள் ஆண்கள்!

ஒஹையோ நகரின் சிறிய ஐஸ்கிறீம் கடையில் பணியாளராகச் சேர்ந்தார் ஜெனி. சிறு வயது முதலே ஐஸ்கிறீம் மேல் இருந்த காதல்தான் காரணம். பின்னர், ஒஹையோ பல்கலைக்கழகத்துக்கு நடந்து செல்லும் பாதையில் உள்ள பிரெஞ்ச் பேக்கரி ஒன்றில் ஆரம்பத்தில், பகுதிநேர சர்வராக வேலை செய்தார். அதற்கு எதிர் வரிசையில் இருந்த ஐஸ்கிறீம் கடை ஈர்க்கவே, ஒரு வேகத்தில் கல்லூரிப் படிப்பையும் பேக்கரி வேலையை யும் உதறிவிட்டார்.

வாசனைப் பொருள்களில் பெரும் ஆர்வம் ஜெனிக்கு. "செடிகளில் உள்ள வாசனையை ஏன் ஐஸ்கிறீமுக்குக் கொண்டுவரக் கூடாது" என்ற எண்ணம் ஒருநாள் தோன்ற, வீட்டிலேயே லாவண்டர், ரோஸ் என வாசனையூட்டப்பட்ட ஐஸ்கிறீகளை செய்துபார்த்தார். நண்பர்களிடம் அதை விநியோகிக்க, சுப்பர் ஹிட்! அப்புறம் என்ன? கொலம்பஸ் பகுதியில் சிறிய கடை ஒன்றை வாடகைக்குப் பிடித்து தனக்குப் பிடித்த ஐஸ்கிறீம் விற்பனையைத் தொடங்கினார். 'எட்டு ஆண்டுகள் அந்தக் கடையும், அதன் வாடிக்கையாளர்கள் தந்த கருத்துகளும் மட்டுமே தன் எதிர்காலத்துக்கான முதலீடு" என்று சொல்கிறார் ஜெனி.

"சாதாரண வாடிக்கையாளரின் கருத்துதான் பவர்பொயிண்ட் கொண்டு செய்யப்படும் வணிகத் திட்டமிடலைவிட முக்கியமானது" என்று சொல்லும் ஜெனி, வேலைப் பளுவைக் குறைக்க பள்ளி மாணவர்களைப் பகுதிநேரப் பணியில் அமர்த்தினார். கடை விரிவடைந்தது. புதிய கிளைகள் தொடங்கப்பட்டன. ஒவ்வொரு கிளையும் ஒரு புதிய கான்செப்டில் என்று புதுமைகளைப் புகுத்தினார். சமையல் புத்தகம் ஒன்றை எழுதினார். "எனக்கு மிகவும் பிடித்த டார்க் சாக்லேட் ஐஸ்கிறீமுக்கான செய்முறையை சீர்செய்ய ஐந்து ஆண்டுகள் பிடித்தது:என்கிறார் ஜெனி. "இளம் வயதில் வாழ்க்கை போகும் போக்கில் பயத்துடன் பயணித்தால் போதும், வெற்றி உண்டு" என்கிறார் ஜெனி.

உங்களுக்காக ஒரு கேள்வி!

இந்தப் பெண்கள் இளவயது முதலே தனித்துப் போராடி வாழ்க்கையில் வென்றவர்கள். அவர்களது 22ஆவது வயதை திரும்பிப் பார்த்தால் அந்த இளம் பெண்ணுக்கு அவர்களே தரும் அறிவுரை என்னவாக இருக்கும் என்ற கேள்விக்கான விடைகளை இங்கே தந்திருக்கிறோம்.

# அயோத்தியில் என்ன நடந்தது? 01

## பாபர் நுழையாத பாபர் மசூதி

சட்டத்துக்கு அஞ்சாத மக்கள் சாமிக்கு அஞ்சுவதைக் கண்டதும், அரசியல் மதங்களைக் கையிலெடுக்கத் தொடங்கியிருந்தது. மதங்களின் அடிப்படையில் உலக



நாடுகளின் எல்லைக் கோடுகள் வரையப்பட்டதும் அப்படித்தான். கடவுளின் பெயரால் அரசியல் செய்யத் தொடங்கியதும் அரசியலுக்காகவே சில கடவுள்கள் தோற்றுவிக்கப்பட்டதும் அப்படித்தான் நிகழ்ந்தது. யூதர்களுக்கு எதிராகக் கிறிஸ்தவர்களுக்கு இருந்த வெறுப்பை ஹிட்லர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது அரசியல். உலகின் ஒரே யூதப் பெரும்பான்மை தேசமான இஸ்ரேல் அங்கே சிறுபான்மையினருக்கு எதிரான நில அரசியலில் ஈடுபட்டிருப்பதும் மதத்தின் காரணத்தால்தான்.


மண்ரொட்டி சாப்பிடும் அளவுக்கான பட்டினிப் பஞ்சம் நிலவினாலும் மத்திய ஆபிரிக்க நாடுகளின் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையிலான போர் நின்றபாடில்லை. இந்திய தேசமும் இதற்கு விதிவிலக்கல்ல. சர்ச்சையாகக் கிளைத்த சம்பவம்தான் இன்று தேசத்தின் ஆபத்தான அரசியலாகி இருக்கிறது. அடிப்படைவாத உணர்வுகளால் மூன்றடி நிலத்துக்காக தேசமே இரண்டாகப் பிளவுபட்டுக் கிடக்கிறது. தெருவில் காய்கறி விற்பவர்கள் தொடங்கி மளிகைக்கடை நடத்துபவர் வரை அனைவருக்கும் அயோத்தி பாபர் மசூதி நிலம் யாருக்குச் சொந்தம் என்பது குறித்தான கருத்து இருக்கிறது. ராமர் பிறந்த இடம் என்பதற்கான தொல்லியல் சான்றுகளே இன்னும் நிரூபிக்கப்படவில்லை என்று ஒரு தரப்பினர் விவாதிக்கின்றனர்.

ராமர் பிறந்த இடத்தில் இருந்த கோயிலை இடித்துவிட்டுத்தான் பாபர் கட்டடத்தைக் எழுப்பினார். ஆனால் அது மினாராகவோ, மசூதியாகவோ அல்லது தொழுகைக்காகவோ ஒரு காலத்திலும் அவரால் உபயோகிக்கப்படவில்லை என்று வேறொரு வாதத்தை முன்வைக்கின்றனர் வேறு சிலர். நாம் அந்த நிலம் யாருக்குச் சொந்தம் என் விவாதிக்கப் போவதில்லை. ஏனென்றால், தற்போது அயோத்தியில் நிலம் யாருக்குச் சொந்தம் எனப் பேசத்தொடங்கினால், நாளை மதுராவிலும் வாரணாசியிலும் நிலம் யாருக்குச் சொந்தம் என்று பிரச்சினை எழும். அஜ்மீரிலும் மத்தியப்பிரதேசத்தின் ஷிவ்பூரியிலும் நிலம் யாருக்குச் சொந்தம் என விவாதிக்க வேண்டியிருக்கும்.

மூன்றடி நிலத்துக்காக நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர் துப்பாக்கி முனையில் பறிபோன சூழலில், இன்னும் பலரது உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகி இருக்கும் சூழலில் மனிதத்தை விட மதங்கள் பெரிதல்ல என நினைவூட்டுவதே பத்திரிகை அறம். உச்சநீதிமன்றத்தில் அயோத்தி நில விவகாரம் இறுதித் தீர்ப்புக்காக காத்திருக்கும் இந்தத் தருணத்தில் மதங்களை அரசியல் எப்படியாகக் கையிலெடுத்துக் கொள்ளத் தொடங்கியது என்பதை வரலாற்றுத் தரவுகளைக் கொண்டு மக்களின் முன் வைப்பது காலத்தின் தேவையாகிறது.

### பாபருக்கே தெரியாத பாபர் மசூதி!

பாபர் மசூதி எப்படி இருக்கும் என்று உங்களுக்குச் சொல்வதற்கு முன்பு இந்தியாவின் மற்ற எந்தப் பகுதியிலும் இருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க சில மசூதிகளின் பெயர்களைத் தங்களுக்கு



> ராமர் பிறந்த இடத்தில் இருந்த கோயிலை இடித்துவிட்டுத்தான் பாபர் கட்டடத்தை எழுப்பினார். ஆனால் அது மினாராகவோ, மசூதியாகவோ அல்லது தொழுகைக்காகவோ ஒரு காலத்திலும் அவரால் உபயோகிக்கப் படவில்லை என்று வேறொரு வாதத்தை முன்வைக்கின்றனர்.

நினைவுபடுத்த வேண்டியதாகி இருக்கிறது. மூன்று நுழைவு வளைவுகளைக் கொண்ட (Arches) மசூதிகளைக் கட்டும் வழக்கம் 15 ஆம் நூற்றாண்டிலும் 16 ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியிலும் தான் இருந்ததாக தொல்லியல் வரலாற்றுத்தகவல்கள் சொல்கின்றன. அதன்படி 1505 இல் எழுப்பப்பட்ட டில்லி ஹெளஸ் காஸ் நிலு மஸ்ஜித் (மசூதி), டில்லி மெஹ்ரௌலி மஸ்ஜித் , டில்லி, ஷேக் சராய் மஸ்ஜித் ஆகியவை அரசர் லோதி காலகட்டத்தில் எழுப்பப்பட்டன. அதேபோல டில்லி அப்சர்வாலி மஸ்ஜித், பாபர் காலத்தில் கட்டப்பட்டது. பாட்னாவில் 1540 இல் ஷேர்ஷாவும் அதுபோன்றதொரு மசூதியை எழுப்பினார். இப்படியான மூன்று நுழைவு வளைவு கொண்ட மசூதிகளில் கடைசியாக இடம்பெறுவது அக்பர் காலத்தில் கட்டப்பட்ட கயர்- உல்-மன்சில் எனத் தொல்லியல் தகவல்கள் சொல்கின்றன.

சரயூ நதிக்கரையின் வடகிழக்கில், முகடுபோன்ற பகுதியான ராம்கோட்டில் தான் பாபர் மசூதி அமைந்திருக்கிறது.

ஆஃப்கானிய முறை வடிவங்களான இந்த மசூதிகளின் வரிசையில்தான் அயோத்தியின் பாபர் மசூதியும் இடம்பெறுகிறது. சரயு நதிக்கரையின் வடகிழக்கில், முகடுபோன்ற பகுதியான ராம்கோட்டில் தான் பாபர் மசூதி அமைந்திருக்கிறது. மூன்று சதுரவடிவிலான கட்டடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒவ்வொரு சதுரத்தின் மேலும் ஒரு குவிமாடம் (Dome) எழுப்பப்பட்டிருக்கும். முக்கிய நுழைவு வளைவின் கூரையில் (Chha jja) இருக்கும் எட்டு பத்திகளைக் கொண்ட பெர்சிய எழுத்துருக்கள்தான் பாபருக்கு அந்த மசூதியை உரிமைக்குரியவாக்குகின்றன. எழுத்துரு ஆய்வாளர் மௌல்வி அஷ்ரப் ஹுசைன் இதனை மொழி பெயர்த்துள்ளார்.

**வரி 1: நலம்பயக்கும் கருணையுள்ளம் கொண்ட அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையின் பெயரால்...**

**வரி 2: தனக்கென எதையும் உரிமை கொள்ளாத விவேகன், பெரியவனின் பெயரால்... அவரது புகழாலும் அருளாலும் நிரம்பப்பெற்ற உலகின் அதிசிறந்தவரான முகமது நபியின் பெயரால்... இந்த உலகம் செழிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து நாடோடித் துறவியான பாபரின் புகழ் கொண்டாடப்படுகிறது.**

**வரி 3: பேரரசரின் (பாபர்) ஆளுமை வானம் வசப்பட்ட ஏழு காலநிலைகளின் அளவுக்கு உயர்ந்தது. அவரது அவையின் மிர்-பாக்கி, ஆலோசகராகவும் இந்தப் பகுதியின் ராஜாங்க நிர்வாகியாகவும் இருந்தார். மிர்-பாக்கி, கோட்டையை மீட்டுருவாக்கம் செய்து அங்கே மசூதியையும் எழுப்பினார்.** *(kaz-in masjid va hisar hast-bani)*

**வரி 4: இறைவா! அவர் (பாபர்) தனது வளமும் வாழ்வும் இராஜாங்கமும் கிரீடமும் சூழ இந்த உலகில் நீடூழி வாழட்டும்.**

இது எழுப்பப்பட்ட புனித காலம் 935/ 1528-29. அல்லாஹ்வின் பெயராலும் நபியின் அருளாலும் அரசரின் அருளாலும் இது முடிக்கப்பட்டது. இதற்கு அல்லாஹ்வின் திருவொளியே சாட்சி. இதை எழுதியவர் மாண்புமிகு / பத்துல்லாஹ் மொஹமத் கோரி.



மேலே குறிப்பிட்டிருப்பதில் பாபரை ஆட்சியாளராகக் குறிப்பிட்டிருக்கிறதே தவிர மசூதியைக் கட்டியவராகக் குறிப்பிடவில்லை. மாறாக அவரது காலத்தில் அந்தப் பகுதியின் நிர்வாகியாக இருந்த மிர்-பாக்கி பற்றி குறிப்பிடுகிறது. அதுவுமே பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் உருவம் கொடுத்தார் என்றே குறிப்பிடுகிறது. அதனால் மசூதிக்கு பாபரை உரிமைதாரராக்குவதே பொருத்தமாக இருக்காது. இன்னும் சொல்லப்போனால் பாபர் இந்த பகுதிக்கு வந்திருக்கவே இல்லை என்பதை அங்கிருக்கும் மேலதிக எழுத்துருத் தடயங்கள் குறிப்பிடுகின்றன. மேலும் ராம்கோட் பகுதியில் அதற்கு முன்னர் கோயில் இருந்ததற்கான எவ்வித சான்றையும் அந்த எழுத்துருக்கள் குறிப்பிடவில்லை.

மாறாக, ஒரு கோட்டை மட்டும் இருந்ததாகவும் அது மிர்-பாக்கியால் மறுசீரமைக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் 15 ஆம் நூற்றாண்டில் முகலாயர்கள் மீது ஆப்கானியர்கள் படையெடுக்கத் தொடங்கிய காலம் என்பதால் நெருக்கடிகளுக்கு நடுவே மிர்-பாக்கி புதிதாக மசூதியை எழுப்பியிருக்க வாய்ப்பில்லை, ஏற்கனவே இருந்த ஒன்றை பழுதுபார்த்திருக்கவே வாய்ப்புகள் அதிகம். பாபர் காலத்தில் கட்டப்பட்ட மசூதிகளும் கோட்டைகளும் பெரும்பாலும் சிவப்பு நிறக் கற்கள் கொண்டு எழுப்பப்பட்டவை. அவரது பாணிக்குச் சற்றும் பொருந்தாத ரகத்தில்தான் மிர்-பாக்கி எழுப்பிய மசூதி இருந்தது. கோயில் இருந்த இடத்தில்தான் மசூதி கட்டப்பட்டது என்று மிர்-பாக்கி குறிப்பிடவேண்டியதற்கான தேவை என்ன என்கிற கேள்வி எழலாம். அதே உத்தரப்பிரதேசத்தின் சம்பால் பகுதியில் கோயில் இருந்த இடத்தில்தான் அரசர் இப்ராஹிம் லோதி காலத்தில் மசூதி கட்டப்பட்டது.

அதனை பாபர் தனது காலத்தில் மீட்டுருவாக்கம் செய்தார் என்று இன்றும் அந்த மசூதியின் எழுத்துருத் தடயங்கள் குறிப்பிடுகின்றன (மாமன்னர் அரசர் பாபரின் ஆணைப்படி மிர் ஹிந்து பெக் இந்த மசூதியைக் கட்டினார்). அதுவும் 933-1526 பானிபட் போருக்கு ஏழு மாதங்களுக்குப் பிறகு (ஆங்கில வருடப்படி 6 டிசெம்பர் 1526) அன்று கட்டி முடிக்கப்பட்டதாக எழுத்துரு தகவல்கள் குறிப்பிடுகின்றன.

கோயில் இருந்ததாகத் தடயங்கள் கொண்ட, அதுவும் 6 டிசெம்பர் 1526 அன்று நிர்மாணித்து முடிக்கப்பட்ட சம்பால் மசூதி மீது இதுநாள்வரை எந்த மதச் சார்பு அமைப்பும் உரிமை கோரவில்லை.

(அடுத்த வாரம் தொடரும்)

ஜூனியர் விகடன்

# மாடும் மனிதனும்

# ம(றை)றந்துபோகும் எமது பண்டைய வாழ்வியல்



இன்றைய தலைமுறைக்கு இப்படி ஒரு வாழ்க்கை முறை இருந்ததே ஆச்சரியமாக இருக்கும்.

நெல்லுச்சோறு என்பது எல்லோருக்கும் கிடைக்காது. பெரும்பாலான வீடுகளில் கேப்பைக்கூழோ கம்பங்கூழோ இருக்கும். ஒரு கிராமத்தில் உள்ள சில வசதியானவர்கள் வீட்டில் மட்டும் தினமும் நெல்லுச்சோறு சமைப்பார்கள். அங்கே வேலை செய்யும் சம்பளக்காரர்களுக்கு வாரத்தில் சில நாட்கள் நெல்லுச்சோறு கிடைக்கும். இந்தச் சம்பளக்காரர்களின் உடைமைகள் அனைத்தையும் ஒரு மஞ்சள் துணிப்பையில் வைத்து ஒரு ஆணியில் தொங்க விட்டிருப்பார்கள். அந்த மஞ்சள் பையில் இரண்டு கைலிகள், இரண்டு துண்டுகள், ஒரு வேட்டி, ஒரு சட்டை இருக்கும். இந்த வேட்டி சட்டை வெளியூர் செல்லும் பொழுது அணிவது. மற்ற நாட்களில் அதற்கு வேலையில்லை.


கைலி துண்டை துவைப்பதற்கு கிளம்பும் முன், ஆத்தா உப்பு சோப்பு குடுங்க என்று வாங்கிக்கொண்டு கண்மாயில் போய் துவைப்பார்கள். உப்பு சோப்பு என்பது நீளமான சோப். வசதியான வீடுகளில்கூட சிறிய கத்திகள் இருக்காது. அதனால், சடம்பை, அந்த சோப்பின் மீது கட்டி ஒருபுறம் இழுப்பார்கள். அதன் மூலம் ஒரு சிறிய துண்டு சோப்பு கிடைக்கும். இந்த சோப்பைத் துணியில் போட்டு துவைக்கும் போது நுரை வந்து நான் பார்த்ததில்லை. பிரச்சினை சோப்பிலா, அழுக்கான் துணியிலா அல்லது தண்ணீரிலா என்று தெரியவில்லை. சோப்பு போட்டு துவைத்தோம் என்ற உணர்வைத் தருவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருள் அது.

பெரும்பாலான வீடுகளில் அடுப்பு கூட்டுவதே ஒரு நாளைக்கு ஒருமுறை தான் நடக்கும். சுள்ளிகளை அடுக்கி எரிப்பதால், அடுப்புக் கூட்டுவது என்று சொல்வார்கள். தீப்பெட்டி எல்லா வீடுகளிலும் இருக்காது. அந்த ஊரில் உள்ள வசதியான வீட்டிலிருந்து ஒரு கரண்டியில் நெருப்பு வாங்கி அதை வைத்து அடுப்பு கூட்டுவார்கள்.

மாலை நேரத்தில் அடுப்பு கூட்டி கூழோ சோறோ சமைப்பார்கள். அதற்கு ஒரு குழம்பு வைப்பார்கள். அந்தக் குழம்பை சோற்றில் ஊற்றிவிட்டு, அதில் கிடக்கும் கத்திரிக்காயை வெஞ்சனமாகப் பயன்படுத்துவார்கள். அவர்களுக்குத் தெரிந்த ஒரே காய் கத்திரிக்காய்தான். சாம்பாரிலும் புளிக் குழம்பிலும் பயன்படுத்தப்படும் காய் அது மட்டுமே.

தீபாவளி,பொங்கல் போன்ற நாட்களில் பெரும்பாலான வீடுகளில் இட்லி, தோசை செய்வார்கள். இதற்கான மாவை அரைப்பதற்கு ஆட்டுக்கல் என்றொன்று இருந்தது. ஒரு குழியில் அரிசி மற்றும் உளுந்தைப் போட்டு அதன் மீது கல்லை வைத்து, அந்தக் கல்லை ஒருவர் சுற்ற வேண்டும்.





இன்னொருவர் மாவை தள்ளிவிடுவார். எனவே, மாவரைக்க இரண்டு பேர் வேண்டும். சில திறமையான பெண்கள், ஒரு கையால் மாவைத் தள்ளிவிட்டு இன்னொரு கையால் மாவாட்டவும் செய்வார்கள்.

என் பாட்டி வீட்டில் சுடும் தோசையை என் அம்மாவும் செய்வார். ஆனால், அதை ஊத்தப்பம் என்று சொல்வார்! ஒரு பொருளின் பெயர் 6 கிமீ தூரத்தில் மாறிவிடுகிறதே என்று அந்தக் காலத்தில் ஆச்சரியப்பட்டேன்! பல வீடுகளில் பண்டிகை பலகாரம் இட்லியும் ஊத்தப்பமும்தான். அந்தக் காலத்தில் இதைக் கவனித்த நான், மனிதனை விட மாட்டுக்கு நல்ல உணவு தந்தார்கள் என்று நினைத்துக்கொண்டேன். மாட்டுக்கு எள்ளுப்புண்ணாக்கும் தவிடும் கலந்த நீரை ஊரலில் ஊற்றி குடிக்கத் தருவார்கள்.

சில நேரங்களில் கடலைப்புண்ணாக்குத் தருவார்கள். அது தவிர வைக்கோலும் புல்லும் தருவார்கள். இவ்வளவு வகைகள் மனித உணவில் இருக்கவில்லை. இரவு 8 மணிக்கெல்லாம் வீட்டின் வெளியே பாயை விரித்து பொட்டணத்தை தலைக்கு வைத்து படுத்துவிடுவார்கள். பாய் இல்லாதவர்கள், அருகே நிற்கும் மாட்டு வண்டியில் தூங்குவார்கள்.

கோழி கூப்புட எழுந்து சாம்பலையோ வேப்பங்குச்சியையோ ஆலங்குச்சியையோ வைத்து பல் தேய்த்துவிட்டு நீராகாரத்தை குடித்துவிட்டு ஆண்கள் மாடுகளை வண்டியில் அல்லது கலப்பையில் பூட்டி வயலுக்குக் கிளம்பிவிடுவார்கள். ஒரு தூக்குவாளியில் கஞ்சியை ஊற்றி அதில் சின்ன வெங்காயத்தை உரித்துப் போட்டிருப்பார்கள்.

மதிய உணவுக்கு வெங்காயத்தைக் கடித்துக்கொண்டு கஞ்சியை சாப்பிடுவார்கள். பெண்கள் கடகப் பெட்டியுடன் வேலைக்குக் கிளம்புவார்கள். ஒரு ஏர் உழுபவருக்கு பின்னால், ஒரு பெண் கொட்டானில் உள்ள விதைகளைத் தூவிக் கொண்டே செல்வார்.

ஏர் உழுவது என்பது மாட்டுக்கும் மனிதனுக்கும் கடினமான வேலை. மண்ணுக்குள் புதைந்த கலப்பையை இழுத்துக்கொண்டு மாடு நடக்க வேண்டும். மனிதன் மண்ணுக்குள் கலப்பையை ஆழமாக அழுத்த வேண்டும். பூஸ்டும் ஹார்லிக்ஸும் குடித்து வளர்ந்த என்னால் கலப்பையை மண்ணுக்குள் அழுத்த முடியவில்லை. கஞ்சியும் வெங்காயமும் சாப்பிட்டவர்கள் எளிதாக உழுதார்கள்.

நாத்து நடுவது என்பது இன்னொரு முறை. இந்த முறையில் நெல்லை ஒரு சிறிய பகுதியில் (பாத்தி) விளைவித்து, அந்தப் பயிரை (நாத்து) எடுத்து நீர் நிரம்பிய வயலில் நடுவார்கள். இதைப் பெரும்பாலும் பெண்களே செய்வார்கள்.

வயல் சாமி, அதுக்குள்ளே செருப் போட்ட இறங்கக் கூடாது என்று சொன்னார்கள். இன்றைக்கும் வெறும் காலுடன்தான் வேலை செய்கிறார்கள். மழைக்காலம் முடிந்த பிறகு, பயிர்களுக்கு கிணற்றிலிருந்து நீர் இறைப்பார்கள். இதற்குப் பல முறைகள் இருந்தன.

கமலை என்பது ஒரு நீள மரத்துடன் இணைக்கப்பட்ட ஒரு பெரிய பானை. இந்தப் பானையை சால் என்று சொல்வார்கள். மரத்தின் மீது ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்கு ஒருவர் நடப்பதன் மூலம், கமலை கிணற்றிலிருந்து நீரை மேலே கொண்டுவரும். இதில் நடப்பது கடினம்.

ஏறக்குறைய கயிற்றில் நடப்பது போன்றதே இந்த முறை. இன்னொரு முறையில் இரண்டு ஆண்கள் கமலையுடன் இணைக்கப்பட்ட கயிற்றை இழுத்துக்கொண்டு முன்னும் பின்னும் ஓடுவார்கள். பெண்களும் இதைச் செய்வார்கள். இதனால் நீர் இறைக்கப்படும். அதற்கடுத்தது, மாடுகளைப் பயன்படுத்தி கமலையை இழுப்பது.

களை எடுப்பது என்பது ஒரு கலை. கடலை போன்ற பயிர்களின் ஊடே இருக்கும் களை எளிதாகத் தெரியும். களை என்பது புல். கடலைச்.செடிகள் இலைகளுடன் இருப்பதால் எளிதாக களைகளைக் கண்டுபிடித்து கொத்துவானால், கொத்தி விடுவார்கள். ஆனால், நெல் பயிறுடன் இருக்கும் களையைக் கண்டுபிடிப்பது கடினம். இரண்டும் ஒரே மாதிரி இருக்கும்.

நான் சிறுவனாக் இருந்த சமயத்தில் பலமுறை முயன்றும் நெல்லுக்கும் களைக்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. களையெடுக்கும் பெண்கள் எளிதாகக் கண்டுபிடித்து கொத்திவிடுவார்கள். நெல் வளர்ந்த பின் பயிர்களை அறுத்து களத்துமேட்டுக்குக் கொண்டுவருவார்கள். களத்து மேட்டில் நெல்லடிப்பார்கள். "மாடு கட்டி போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டி போரடிக்கும் மாமதுரை" என்று தமிழிலக்கியத்தில் பாடப்பட்டிருக்கிறது. யானை கட்டி போரடித்து நான் பார்த்ததில்லை. ஆனால், மாடு கட்டி போரடித்து நான் பார்த்திருக்கிறேன்.

நெல்லுடன் கூடிய பயிரை பரப்பி, அதன் மீது மாடுகளும் மனிதர்களும் நடப்பார்கள். மாடுகள் மிதிப்பதால், நெல் பயிரில் இருந்து உதிரும். இப்படி நடக்கும்பொழுது மாடு சாணி போட்டால், நெல் வீணாகிவிடும். அதனால், மாடு சாணி போடும்பொழுது வைக்கோலால் சாணியைப் பிடித்து வெளியே போடுவார்கள். பின்னர் வைக்கோலை அள்ளினால், நெல் கீழே கிடைக்கும். அதை எடுத்து கோணிச்சாக்கில் வைத்து தைத்து வீட்டுக்கு மாட்டு வண்டியில் எடுத்து வருவார்கள். வசதியானவர்கள் நெல்லை குலுமையில் சேமித்து வைப்பார்கள். குலுமையை குதிர் என்றும் சொல்வார்கள். "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்ற பழமொழியில் வருகிற குதிர் தான் குலுமை. இது தானியங்களை சேமித்து வைக்க பயன்படுத்தப்பட்டது.

# அடங்குமா டெங்கு!


## சாட்சிகள் இல்லாது தப்பித்துத் திரியும் கொலைகாரன்

இவ்வருடம் யாழ்.குடாநாட்டில் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் அதிகளவு டெங்குக் காய்ச்சல் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். வைத்தியசாலைகளில் கட்டில்களுக்குக் கூட தட்டுப்பாடுகள் ஏற்படும் நிலை நோயாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இம்மாதத்தில் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயினால் பெண்ணொருவர் இறந்துள்ளமை பேரதிர்ச்சியையும், பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது. டெங்கு ஆபத்தான பிரதேசமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லும் போது உரிய பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுனுள் நுளம்புகள் உள்வருவதைத் குறைக்க முடியும். சூரிய ஒளி வீட்டினுள் வருவதைத் தடுக்கும் முகமாக வீட்டுச் சூழலில் அதிகளவு மரக்கிளைகள் காணப்படுவதனால் இருளான சூழலை ஏற்படுத்துமாயின் அக்கிளைகளை அகற்றுவது நுளம்புகளின் நடமாட்டத்தைக் குறைக்க உதவும்.

நீண்ட காற்சட்டைகளை, கைச்சட்டைகளை அணிவதன் மூலம் அல்லது உடலின் பெரும்பாலான பகுதிகளை சூழலிற்குத் தெரியாதவாறு மறைக்கும் ஆடைகளை அணிவதன் மூலம் நுளம்புகள் உடலில் குருதியை உறிஞ்சும் வதற்கு தொடர்ந்து இம் முறைகளைப் பயன்படுத்தும் போது எமது சுவாசத் தொகுதியின் தொழிற்பாடு பாதிக்கப்பட்டு நீண்ட காலத்தில் அவற்றின் செயற்படும் திறன் குறைவடையலாம்.

டெங்கு நோயின் அறிகுறிகளில் ஒன்றான காய்ச்சல் 2 நாட்களுக்கு மேல் காணப்பட்டால் தகுந்த வைத்திய ஆலோசனையின்றி தன்னிச்சையாக மாத்திரைகளை தனியார் மருந்தகங் களில் (Pharmacy) வாங்கி உட்கொள்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

உடனடியாக தரமான வைத்திய ஆலோசனை பெற வேண்



வது சிறந்தது. டெங்குத் தொற்றுள்ள நுளம்புகள் உடலில் குருதியைக் குத்தியுறிஞ்சுவதைத் தவிர்ப்பதன் மூலம், டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை இனங்கண்டு அவற்றின் வாழ்க்கை வட்டத்தின் பல்வேறு பருவ நிலைகளை அழிப்பதன் மூலம், உரியவேளையில் டெங்குக் காய்ச்சலுக்கான முகாமைத்துவ சிகிச்சையைப் பெறுவதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

நுளம்புகள் எமது உடலை நாடாமல் இருப்பதற்காக சிலர் உடம்புகளில் க்றீம் (களிம்புகளை), இயற்கை எண்ணெய்களான சித்திரனெல்லா எண்ணெய், புல்லெண்ணெய்களைப் பூசிக்கொள்கின்றனர்.

சிலவகைப் பதார்த்தங்கள் உடலில் ஒவ் வாமையை ஏற்படுத் தக்கூடியன. இப் பூச்சுவகைப் பதார்த்தங்கள் தரநிர்ணயம் பெற்றவையாக சுகாதார அமைச்சினால் அங்கீ கரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

டெங்குநோய் அபாயம் காணப்படும் பிரதேசங்களில் வசிக்கும் கைக்குழந்தைகளுக்கு நுளம்புகள் கடிப்பதைத் தவிர்ப்பதற்காக பெரும்பாலான நேரங்களில் தரமான நுளம்பு வலைகளைப் பயன்படுத்தலாம். பெரியவர்களும் உறங்கும் போது நுளம்பு வலைகளினுள் உறங்கமுடியும். நுளம்பு வலைகளை இரசாயனப் பதார்த்தத்தில் (Permethrin) தோய்த்து உலர்த்திப் பாவிப்பார்கள். சிலர் யன்னல்களை நுளம்பு வலைகளினால் அடைப்பதுமுண்டு.

குறிப்பாக டெங்கு நுளம் புகள் சுறுசுறுப்பாக இயங்கும் அதிகாலைப் பொழுதிலும் மாலைப் பொழுதிலும் அநாவசியமாக வெளியில் திரிவதைத் தவிர்க்க வேண்டும். இவ் வேளைகளில் வீட்டின் யன்னல் கதவுகளை மூடிவைப்பதன் மூலம் வீட்டி சந்தர்ப்பம் குறைக்கப்படும். குறிப்பாக மாலை நேரங்களில் தனியார் கல்வி நிலயங்களுக்குச் செல்லும் மாணவர்கள் இவ்வாறான ஆடைகளை அணியலாம். மெல்லிய இள நிறங்களில் ஆடைகளை அணிவதனால் நுளம்புகளை இலகுவில் இனங்காண முடிகின்றது. கறுப்பு நிறமான நுளம்புகள் சூழலில் எதிரியிடம் இருந்து தப்பிப் பிழைப்பதற்காக கடும் நிறங்களை நாடுகின்றன. கடும் நிற ஆடைகளை அணிவது நுளம்பு எம்மை நாடிவருவதை ஊக்குவிக்கும் செயலாக அமையும்.

சில வகை நுளம்புகள் எமது உடல் சூடு,வெளிச்சுவாசக்காற்று என்பவற்றிற்கு உணர்திறனுடையவையாகக் காணப்படுகின்றன. மின் விசிறிகளைப் பாவிப்பதனால் விசையுடனான காற்றினால் நுளம்புகள் நிலை குலையச் செய்து விரட்டப்படுவதுடன் அவற்றின் உணர்திறனும் அகற்றப்படும். வளிப்பதனாக்கிளும் (AC) பயன்படுத்தப்பட முடியும்.

நுளம்புத் திரிகளைப் பயன்படுத்துவதனால் சிறிய அறையின் பகுதியில் நுளம்புகள் தற் காலிகமாக விரட்டப்படுகின்றன. புகை பரவாத அறையின் பகுதியில் நுளம்புகள் தற்காலிகமாக சஞ்சரித்து விட்டு நுளம்புத்திரி முடிந்தவுடன் மீண்டும் வந்து உடலைக் குத்துகின்றன.

இயற்கை மூலிகைகளை கொண்டு புகைக்கும் போது தற்காலிகமாக நுளம்புகள் சஞ்சரிப்பது குறைக்கப்படுகின்றது. பெரும்பாலும் இவ்வகையான புகைகளில் சிகரெட் புகையில் காணப்படுவது போன்று காபனீரொட்சைட்டு. காபனோரொட்சைட்டு. காபன் காணப் படுகின்றது.

• இவ் வாயுக்கள் ஓரளவு நச்சுத் தன்மையான உடலுக்குத் தேவையற்ற கழிவுப் பதார்த்தங்களாகும். நுளம்புகளை விரட்டுடும். ஆரம்பக் காய்ச்சலின் போது பனடோல் மாத்திரைகள் பாவிக்கலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பு(B)றூப(f)ன் போன்ற மாத்திரைகளைப் பாவிக்க வேண்டாமென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நுளம்புகள் 10 தொடக் கம் 14 நாட்களில் முட்டையிலிருந்து பறக்கும் ஆற்றலுடைய நுளம்பாக விருத்தியடைந்து விடுகின்றன. எனினும் முட்டையிலிருந்து 4 தொடக்கம் 10 நாட்களில் நீரில் நுளம்புக் குடம்பிகள் இனங் காணப்படுகின்றன. களத்தரிசிப்பின் போது டெங்கு நுளம்புப் பெருக்கங்களைக் கட் டுப்படுத்தும் உத்தியோகத்தர்கள் வீடுகளில் குடம்பிகளை இனங் காணும் போது குறித்த கொள் கலனானது (பேணி,சிரட்டை..) ஏறத்தாழ ஒரு கிழமையாக நீருடன் காணப்பட்டுள்ளது என ஊகிக்க முடியும்.

பொது மக்கள் உட்பட அரச, அரசசார்பற்ற,சமூகத் தொண்டு நிறுவனங்கள், மாணவர்கள் என எல்லோரும் ஒருங்கிணைந்து வாரத்தில் 3 நாட்கள் தினமும் 30 நிமிடங்கள் வீதம் சூழலைப் பரிசோதித்து நுளம்புகள் பெருகும் புற,அகச் சூழலை பரிசோதித்து சுத்தமாக வைத்திருப்போமாயின் யாழ்.குடாநாட்டில் மாத்திரமல்ல நாடு முழுவதும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

பல்வேறு தொடர்பாடல் ஊடகங்களும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பாக பங்களிப்புச் செய்வது பாராட்டத்தக்கதாகும்.

ஒருங்கிணைந்து ஒன்றாய்த் துரத்துவோம் நுளம்பை மாத்திரமல்ல டெங்கையும்.

**வைர.பிறேமகுமார்**
(பொதுச் சுகாதாரப் பரிசோதகர்)

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : முதல் மரியாதை
இயற்றியவர் : வைரமுத்து
இசை : இளையராஜா
பாடியவர்கள்: மலேசியா வாசுதேவன்,எஸ்.ஜானகி



வெட்டி வேரு வாசம் வெடல புள்ள நேசம்
வெட்டி வேரு வாசம் வெடல புள்ள நேசம்
பூவுக்கு வாசம் உண்டு பூமிக்கும் வாசம் உண்டு

வேருக்கு வாசம் வந்ததுண்டோ மானே
வெட்டி வேரு வாசம் வெடல புள்ள நேசம்

பச்ச கிளியோ போட்டுக்கிருச்சு
இச்ச கிளியோ ஒத்துகிருச்சு
பச்ச நெருப்பு ஒத்திகிருச்சு
பச்ச மனசு பத்திகிருச்சு

கைய கட்டி நிக்க சொன்னா
காட்டு வெள்ளம் நிக்காது
காதல் மட்டும் கூடாதுன்னா
பூமி இங்கு சுத்தாது

சாமி கிட்ட கேளு யாரு போட்ட கோடு
பஞ்சுக்குள்ள தீய வெச்சு சுத்தி வச்சவக யாரு

வெட்டி வேரு வாசம் வெடல புள்ள நேசம்
வெட்டி வேரு வாசம் வெடல புள்ள நேசம்
பூவுக்கு வாசம் உண்டு பூமிக்கும் வாசம் உண்டு

வேருக்கு வாசம் வந்ததுண்டோ மானே
வெட்டி வேரு வாசம் வெடல புள்ள நேசம்

உன்ன கண்டு நான் சொக்கி நிக்குறேன்
கண்ணுக்குள்ள நான் தண்ணி வெக்கிறேன்
சொல்லாம தான் தத்தளிக்கிறேன்
தாளாம தான் தள்ளி நிக்கிறேன்

பாசம் உள்ள பந்தம் இது பாவமுன்னு சொல்லாது
குருவி கட்டும் கூட்டுக்குள்ள குண்டு வெக்க கூடாது

புத்தி கெட்ட தேசம் பொடி வெச்சு பேசும்
சாதி மத பேதம் எல்லாம்
முன்னவங்க செஞ்ச மோசம்

வெட்டி வேரு வாசம் வெடல புள்ள நேசம்
வெட்டி வேரு வாசம் வெடல புள்ள நேசம்
பூவுக்கு வாசம் உண்டு பூமிக்கும் வாசம் உண்டு

வேருக்கு வாசம் வந்ததுண்டோ மானே
வெட்டி வேரு வாசம் வெடல புள்ள நேசம்



# அனுமதிகள் ஆரம்பம்

## இப்போது விண்ணப்பியுங்கள்

**SLGTI** KILINOCHCHI SRI LANKA GERMAN TRAINING INSTITUTE

இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனமானது (SLGTI) யாழ். பல்கலைக்கழகத்தின் அயல் நிறுவனமாக அறிவியல்நகர் கிளிநொச்சியில் அமைந்துள்ளதுடன் ஜேர்மனிய நியமங்களுக்கு ஏற்றவாறு ஆறு முக்கிய துறைகளில் எதிர்காலத்தை சரியான முறையில் திட்டமிடக் கூடியவாறு தொழிற்பயிற்சியை வழங்கும் ஓர் நிறுவனமாகும்.

## SLGTI இல் எனது கல்வித் தெரிவுகள் என்ன?

01

| இயந்திரத் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| எந்திரவினைஞர் (தேசிய தொழில் தகைமை மட்டம் -4) | ☑ | |
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| உற்பத்தி தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5) | ☑ | |



02

| மோட்டார்வாகனத் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| மோட்டார்வாகன திருத்துனர் (தேசிய தொழில் தகைமை மட்டம் -4) | ☑ | |
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| மோட்டார்வாகனத் தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5) | ☑ | ☑ |



03

| மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| தையல் இயந்திர திருத்துனர் (தேசிய தொழில் தகைமை மட்டம் -4) | ☑ | |
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| இயந்திர மின்னணுவியல் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5) | ☑ | ☑ |
| இயந்திர மின்னணுவியல் (தேசிய தொழில் தகைமை மட்டம் -6) | ☑ | ☑ |



04

| கட்டுமானத் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| கட்டுமான மேற்பார்வையாளர் (தேசிய தொழில் தகைமை மட்டம் -4) | ☑ | |
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| கட்டுமான தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5) | ☑ | |



05

| உணவு பதனிடல் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| உணவு தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5) | ☑ | ☑ |
| உணவு தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -6) | ☑ | ☑ |



06

| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5) | ☑ | ☑ |
| வன்பொருள் மற்றும் வலையமைப்பு தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -6) | ☑ | ☑ |



முழு நேரம்(F) and பகுதி நேரம்(P)

பகுிநோ கற்கைநெறி தொடர்பான விவரங்களை slgti வலைப்பக்கத்தில் காணலாம்

## நான் SLGTI இல் பயில்வதற்கு தகுதியுடையவரா?

### நான் SLGTI இல் பயில்வதற்கு தகுதியுடையவரா?

- நீங்கள் ஒரு இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
- தேசிய தொழிற்தகைமை மட்டம் 4 : க.பொ.த (சா / த) பரீட்சையில் (குறைந்தது 06 பாடத்தில் ) சித்தியடைந்திருத்தல்
- அடிப்படை கற்கைநெறி : குறிப்பிட்ட துறையில் தேசிய தொழிற்தகைமை 3 பூர்த்தி செய்திருத்தல் அல்லது க.பொ.த (உ / த) பரீட்சையில் (குறைந்தது 3 பாடங்களில் ) சித்தியடைந்திருத்தல்.
- தேசிய தொழிற் தகைமை மட்டம் 5 : குறிப்பிட்ட துறையில் தேசிய தொழிற்தகைமை மட்டம் 4 பூர்த்தி செய்திருத்தல் அல்லது எம்மால் வழங்கப்பட்ட அடிப்படை கற்கைநெறி பூர்த்தி செய்திருத்தல்.
- தேசிய தொழிற் தகைமை மட்டம் 6 : குறிப்பிட்ட துறையில் தேசிய தொழிற் தகைமை மட்டம் 5 பூர்த்தி செய்திருத்தல்.

### SLGTI இன் பயிற்சிநெறிக்காக எவ்வாறு விண்ணப்பிக்க முடியும்?

- www.slgti.com என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்ய முடியும்.
- தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்ள முடியும்– தொ.பேசி இல–021 492 7799.
- கிளிநொச்சி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்ய முடியும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி. **30th November 2019.**

### SLGTI இல் தங்குமிட வசதியினைப் பெற்றுக் கொள்ள முடியுமா?

- 250 மாணவர்கள் (ஆண் மற்றும் பெண்) **SLGTI** இல் தங்குமிட வசதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.


### ஏனைய வசதிகள்

- உங்களது ஆங்கில எழுத்து மற்றும் பேசும் திறனை விருத்தி செய்ய ஆங்கில வள நிலையம்.
- கிறிக்கட்,கரப்பந்து மற்றும் கூடைப்பந்து விளையாட்டு வசதிகள்.
- சமூக கலாச்சார நிகழ்வுகள் (நாடகம்,திரைப்படம்).
- மூன்று வேளை உணவுக்கான சிற்றுண்டிச்சாலை.









## தெரிவு செய்வதற்கான 5 காரணங்கள்

கோட்பாடு மற்றும் நடைமுறைப் பயிற்சி– வகுப்பறைக் கற்பித்தலுடன் மட்டும் நில்லாது நீங்கள் பெற்றுக்கொண்ட கோட்பாடு ரீதியான அறிவினை யதார்த்தமான உலக நடைமுறைக்கு அமைவாக பிரயோகிப்பதற்கான பயிற்சிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

வேலைவாய்ப்பு–சமகால தொழிற்சந்தையின் தேவைக்கு ஏற்றவகையில் இங்கு தொழிற்பயிற்சி பாடநெறிகள் வழங்கப்படுவதால் இப்பயிற்சிநெறியினை பூர்த்தி செய்யும் போது உங்களுடைய வேலைவாய்ப்பு அரச அல்லது தனியார் துறையில் உறுதிப்படுத்தப்படுவதோடு, வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான வழிவகைகளையும் உங்களால் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

சுயதொழில் முயற்சியாண்மை– நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன் அபிவிருத்தி பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்டு சுய தொழிலொன்றை உருவாக்கிக்கொள்ள முடியும்.

திறமையான மற்றும் சரியானநேரத்தில்: நீங்கள் உங்களுடைய நேரத்தையும் பணத்தையும் விரயம் செய்யாது கல்வி மற்றும் திறன்களை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

தேசிய மற்றும் சர்வதேசரீதியில் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பத்தையளிக்கும் ஒரு தொழில் தகைமையினை பெற்றுக்கொள்ள முடியும்.

**SRI LANKA - GERMAN TRAINING INSTITUTE**

Ariviyal Nagar, Kilinochchi.

021 492 7799 / 021 206 0137

info@slgti.com

FOR MORE INFO 021 492 7799 www.slgti.com /srilankagerman

**YOUR FUTURE STARTS HERE!**

# உள்ளே அழுகை; வெளியில் சிரிப்பு:

## கால்பந்து வீரருக்கு வந்த விநோத நோய்

உள்ளே அழுகிறேன். வெளியில் சிரிக்கிறேன். நல்ல வேஷம் தான் வெளுத்து வாங்குறேன்…" என்கிற பழைய தமிழ்த் திரைப்படப் பாடலை நினைவுபடுத்துகிறது பால் பியூவுக்கு வந்திருக்கிற விநோத நோய்.

தன் வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டத்தில் இருந்தார் பால்பியூ. பலமாகத் தாக்கப்பட்டதால் அவரின் மூளையில் ஏற்பட்ட காயத்தால் அவரது வாழ்க்கை இனி எப்படி இருக்கும் என்பதை வைத்தியர்கள் அப்போது தெரிவித்தனர்.

அந்த சந்திப்பு நிறைவடையும் வரை அவர் கட்டுக்கடங்காமல் சிரித்துக்கொண்டே இருந்தார். ஆனால், தேம்பித் தேம்பி அழுவதாகவே அவர் உணர்ந்தார். அது ஒரு நோய் என்று அவருக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

தற்போது 37 வயதாகும் பால், கடந்த ஜனவரி 2007



இல் தன் கால்பந்துக் குழுவின் நண்பர்களுடன், தனது சொந்த ஊரான மேற்கு வேல்சில் உள்ள அம்மன்ஃபோர்டில், இரவைக்கழிக்க வெளியே சென்றிருந்தபோது அடையாளம் தெரியாத நான்கு பேரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

அவரது மண்டை ஓட்டில் காயம் ஏற்பட்டது. பின்னர் இரண்டு மாதங்கள் கோமா நிலையில் இருந்தார். அவரது மூளையில் 10 செ.மீ நீளமும், 4 செ.மீ அகலமும் கொண்ட ஒரு இரத்தக்கட்டு உருவானது.

பேசுவதிலும் நடப்பதிலும் கடுமையான சிக்கலை எதிர்கொண்ட அவர் சக்கர நாற்காலியில் தன் வாழ்வின் மீதமிருக்கும் காலத்தைக் கழிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார்.

மொத்தமாக 13 மாதங்கள் வைத்தியசாலையில் கழித்த அவர், நான்காம் மாதம்தான் இந்த நோய்க்கு ஆளானார்.

"வைத்தியர்களும், மறுவாழ்வு சிகிச்சை நிபுணர்களும் என் குடும்பத்தினர் இருக்கும் போதே என் எதிர்காலம் இனி எப்படி இருக்கும் என்பதைப் பேச ஆரம்பித்தனர். எனக்கு அப்போது மிகவும் பயமாக இருந்தது," என்று கூறும் அவர், அந்த உணர்வு தன் மூளைக்குள் எதையோ தூண்டியதாகவும், அதனால்தான் தொடர்ந்து சிரித்துக்கொண்டே இருந்ததாகவும் அவர் கூறினார்.

"நான் உண்மையில் அழுது கொண்டு இருந்தேன். ஆனால், அது எனக்கு சிரிப்பாக வெளியானது," என்கிறார் பால்.

முதலில் அவர் அவ்வாறு சிரிப்பது பிறரின் கவனத்தை ஈர்க்கத்தான் என்று அவரது குடும்பத்தினர் நினைத்தனர். ஆனால், அது சூடோபல்பர் அஃபெக்ட் {Pseudobulbar Affect (PBA)} எனப்படும் நோய்ச் சிரிப்பு என்பது சில ஆண்டுகள் கழித்தே கண்டு பிடிக்கப்பட்டது.

உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் மூளையின் முன் பகுதியுடன், உணர்வுகளை வெளிப்படுத்துவத்தைக் கையாளும் சிறு மூளை மற்றும் மூளைத் தண்டு ஆகியவற்றுக்கு இடையே உள்ள இணைப்பு சேதமடையும் போது இந்த நிலை உண்டாகிறது.

நரம்பியல் நோய்கள், அல்சைமர் நோய் மற்றும் உடலில் உள்ள திசுக்களின் இறுக்கம் உள்ளிட்ட உடல்நலக் கோளாறுகள் இருப்பவர்களுக்கு இந்த



நோய் வரும்.

"உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல், சமூக சூழ்நிலைக்கு ஏற்றவகையில் அல்லாமல் முறையற்ற வகையில் உணர்வுகளை வெளிப்படுத்துதல் மற்றும் ஒரு நபர் தான் உணர்வதை சீரற்ற வகையில் வெளிப்படுத்துவது ஆகியவையே இந்த நோய்," என்கிறார் நரம்பியல்-உளவியல் நிபுணர் ஆண்டி டயர்மேன்.

"நான் சிரிக்கும்போது உண்மையில் அழுகிறேன் என்று எனக்குத் தெரியும். ஆனால், அதை அறியாமல், நான் நேரெதிராக நடந்துகொள்வதால், சிலர் என்னிடம் கோபமாகவும், என் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையிலும் நடந்து கொள்வார்கள்," என்கிறார் பால்.

"நாம் சிரிப்பை மிகவும் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறோம். ஆனால், உங்களுக்குப் பிடித்த ஒருவரிடம் ஒரு நகைச்சுவையைப் பகிர்ந்து கொள்ளும்போது, சிரிப்பு மிகவும் வலிமையான தாக்கத்தை உண்டாக்கும்," என்கிறார் பால்.

பாலின்தாய்நெஸ்டா அவரை முழு நேரமும் கவனித்துக் கொள்கிறார். 72 வயதான அவரது தந்தையும், பாலின் இரண்டு சகோதரர்களும் அவருக்கு உதவியாக இருக்கின்றனர். தன் குடும்பம் தன்னை புரிந்து நடந்து கொள்வதாக பால் கூறுகிறார்.



"சிரிப்பு வருவதற்கு சில நொடிகள் முன்பே அதை என்னால் உணர முடிவதால் சில நேரங்களில் அதை என்னால் கட்டுப்படுத்த முடியும். சிரிப்பு வந்தாலும் அதிகபட்சமாக ஒரு நிமிடமே நீடிக்கும். அதைப் பிறர் புரிந்துகொள்ளாமல் போனால் பிரச்சினை உண்டாக அந்த ஒரு நிமிடமே போதும்," என்கிறார் பால்.

உணர்வுகளுக்கு ஆட்படாமல் மோசமான சூழ்நிலைகளையும், மனிதர்களையும் நினைத்துப் பார்ப்பதன் மூலம் சிரிப்பால் நிகழும் விபரீதங்களை அவர் தவிர்த்து வருகிறார். பத்தில் ஒன்பது முறை அவரால் தனது சிரிப்பைக் கட்டுப்படுத்த முடிவதாகக் கூறுகிறார்.

பால் பியூ தாக்குதலுக்கு உள்ளாகி 10 ஆண்டுகள் ஆகின்றன. தான் பரர்த்து வந்த எலெக்ட்ரீஷியன் வேலையை அவர் விட்டுவிட்டார். உள்ளூரில் உள்ள ஹெட்வே கார்மர்தென்ஷைர் (Headway Car marthenshire) எனும் ஒரு தொண்டு நிறுவனத்துக்கு



செல்வதன் மூலம், மூளையில் காயமடைந்தவர்களை பற்றி புரிந்துகொள்ள முடிவதாகவும், தான் தனியாக இல்லை என்பதையும் உணர்வதாக அவர் கூறுகிறார்.

என்னால் செய்ய முடியாத விடயங்கள் பல இருக்கின்றன. ஆனால், இந்தப் பிரசாரத்தை என்னால் செய்ய முடியும். இது இந்த உலகிற்கு ஒரு வலிமையான செய்தியைத் தெரிவிக்கும் என்று நான் நம்புகிறேன். நானும் என் குடும்பமும் இருக்கும் இத்தகைய சூழ்நிலை வேறு யாருக்கும் ஏற்படுவதை நான் விரும்பவில்லை," என்கிறார் பால்.

பாலைத் தாக்கிய நான்கு நபர்களும் ஒன்பது மாதங்கள் முதல் நான்கு ஆண்டுகள் வரை சிறையில் அடைக்கப்பட்டனர்.

"என் உயிரே போகும் அளவுக்கு, என் தலையில் வேகமாக உதைத்த அந்த நபரும் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார். ஆனால், என்னுடைய நிலை என்ன? பத்து ஆண்டுகள் கழித்தும், நான்தான் இன்னும் தண்டனையை அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன்," என்று முடிக்கிறார் பால்.

"அந்தத் தாக்குதலுக்குப் பிறகு, எனக்கு உதவ விரும்பும் மிகச்சிறந்த மனிதர்கள் பலரையும் சந்தித்துள்ளேன். இன்னொரு புறமோ, என்னால் வெளியில் நடமாட முடியாததால் வீட்டுச் சிறையில் இருப்பதைப் போல உணர்கிறேன்," என்கிறார்.

2014-இல் பால்ஸ் பிலெட்ஜ் (Paul's Plegde) எனப்படும் மதுப்பழக்கத்தால் உண்டாகும் வன்முறைகளுக்கு எதிரான பிரசாரம் ஒன்றை டைஃபெட் - போவிஸ் காவல் துறையுடன் இணைந்து செய்து வருகிறார்.

பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் இளைஞர் மன்றங்களுக்கு பால் செல்கிறார்.

"இது உண்மையானதுதான், அரங்கேற்றப்பட்டது அல்ல என்பதை அவர்கள் பார்க்கிறார்கள்," என்கிறார் பால்.

# மனிதா உன்னால் முடியும்!



தோல்வியை தற்கொலை செய்ய வைத்த மாமனிதர் சாயிக்ரோ. வாழ்வில் பல தடவை தோற்றும் முயற்சியை கைவிடாத வெற்றி நாயகன்.

சாய்க்ரோவின் 18ஆவது வயதில் தனது தந்தையாலே ஒன்றிற்கும் உதவாதவன் என ஒதுக்கப்பட்டான். படிப்பிலும் தோல்வி. சாய்க்ரோ முடியும் என முயற்சி செய்தான் **TOYOTA** நிறுவனதிற்கு பிஸ்டனை தயாரிக்க முயற்சி செய்தான். தன்னிடம் இருந்த அனைத்து பணத்தையும் முதலிட்டு ஒரு வருட முயற்சியில் பிஸ்டனை தயாரித்தார்.

ஆனால் **TOYOTA** அதனை நிராகரித்தது. சாய்க்ரோவை பார்த்து எல்லோரும் கேலி செய்தனர் உன்னால் முடியாது என கூறினர். ஆனால் சாய்க்ரோ முயற்சியை கைவிடவில்லை. மீண்டும் முயன்று பல வருட் உழைப்பில் பிஸ்டனை கண்டு பிடித்தார். **TOYOTA**வில் காண்பித்தார். **TOYOTA** நிறுவ்னமும் ஏற்றுக்கொண்டது.

பிஸ்டன் தயாரிக்க பாரிய தொழிற்சாலை தேவைப்பட்டது. ஜப்பான் 2ஆம் உலகப்போருக்கு தயாராக இருந்ததால் சீமெந்து இல்லாத நிலை. தொழிற்சாலை கட்ட சீமெந்து இல்லாத நிலை. சீமெந்துக்குப் பதிலாக சீமெந்துக் கலவையை கண்டுபிடித்து. தொழிற்சாலை கட்டினார். சில நாட்களுகளில் 2ஆம் உலகப் போரில் அமெரிக்கா வீசிய குண்டில் தொழிற்சாலை தரைமட்டமாக்கப்பட்டது.

சாய்க்ரோவின் வாழ்க்கை முடிந்தது என மக்கள் கூறினர். மீண்டும் முயன்று கடன் பெற்று தொழிற்சாலை கட்டினார். ஜப்பானில் ஏட்பட்ட நில நடுக்கத்தில் மீண்டும் தொழிற்சாலை நொறுங்கி தரைமட்டமாக்கப்பட்டது.

சாய்க்ரோவை இராசியில்லாதவன் என கூறினர். துவண்டுவிடவில்லை சாய்க்ரோ. ஒரு நாள் தனது சைக்கிளை பார்த சாய்க்ரோ புது முயற்சியில் இறங்கினார். புல்வெட்டும் இயந்திரத்தில் இருந்த மோட்டாரை சைக்கிளில் பொருத்தி மோட்டார் சைக்கிளை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

மோட்டார் சைக்கிள் தொழிற்சாலை உருவாக்க வங்கிகளிடம் கடன் கேட்டார் வங்கிகள் மறுத்துவிட்டன. முயற்சியை கைவிடாத சைக்ரோ சைக்கிள் நிறுவனங்களின் உதவியுடன் தொழிற்சாலை ஆரம்பித்தார்.

உலகம் போற்றும் நிறுவனத்தின் நிர்வனரானார். தன்னை புறக்கணித்த **TOYOTA**வின் போட்டி நிறுவனமாக தனது நிறுவனத்தை உயர்த்தினார். ஆம் இவரின் முழுப்பெயர் சாய்க்ரோ **HONDA.** இப்போது உங்களுக்கு தெரியும் இவர் யார் என்று. ஆம் இவர்தான் உலகில் முதன்,மை நிறுவனமான **HONDA** நிறுவனத்தின் அதிபதி **Soichiro HONDA.**

சாய்க்ரோவின் இறுதி வரிகள் "**Success represents the 1% of your work**

# ஊழிநாள் கடிகாரம் (Doomsday Clock) பற்றித் தெரியுமா?

ஊழிநாள் கடிகாரம் (Doomsday Clock) என்பது 1947 ஆம் ஆண்டிலிருந்து உலகின் முடிவைக் குறியீடாகக் காட்டுவதற்கான சிக்காகோ பல்கலைக் கழக அணு அறிவியலாளர்கள் செய்திமடல் பணிப்பாளர் சபையினால் காட்சிப்படுத்தப்படுகின்ற மணிக்கூட்டு முகப்பாகும்.

இக்கடிகாரத்தில் மணிகூட்டின் நேரமுட்கள் நள்ளிரவை நெருங்குவது உலகம் பேரழிவை நெருங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மனிதன் அணுசக்தி மற்றும் இயற்கையை முறைதவறிப் பயன்படுத்தியதன் பலாபலனாக இது நோக்கப்படுகின்றது.

அண்மையில் (கடந்த 10.01.2012 இல்) இதைப் பராமரிக்கும் விஞ்ஞானிகள் இக்கடிகாரத்தின் நேரத்தை ஒரு நிமிடத்தால் முன்னேற்றி நள்ளிரவுக்கு 5 நிமிடங்கள் முன்னோக்கி வைத்ததாக (பி.ப11:55) அறிவித்தனர். உலகில் நிகழ்ந்த மனித இருப்புக்கு ஆபத்தான நிகழ்வுக்கும் அதற்கான எதிவுகூறல்களுக்கு அமைய அம்மணிக்கூடு ஆக்கப்பட்ட 1947 இலிருந்து இருபது தடவைகள் இம்மணிக்கூடு மாற்றஞ் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் இது நள்ளிரவுக்கு ஏழு நிமிடங்கள் இருக்கத்தக்கதாக (பி.ப 11:53) சீர்செய்யப்பட்டது.

1947 இல் ரசியா மற்றும் அமெ ரிக்காவைத் தளமாகக் கொண்ட மேற்கத்திய நாடுகளுக்கு இடையே நிலவும் அரசியல் அதிகார போர் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு நள்ளிரவுக்கு ஏழு நிமிடங்கள் முந்தியதாக இக்கடிகாரம் செப்பஞ் செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் அணு ஆயுதப் பாவனை மட்டும் கருதி இதன் செப்பமிடல் நிகழ்ந்த போதிலும். பின்னர் காலநிலை மாற்றம், இயற்கை வளம் மற்றும் நிலக்கரி பயன்பாடு என்பவையும் அடிப்படையாகக் கருதப்பட்டது.



# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1890

## சுந்தர்

ஒரு பெண் தேவதையாவதும் தேவையில்லாமல் போவதும் அவள் வாழ்க்கையில் சந்திக்கும் ஆண்மகனால்தான்




## ரூபினி

எல்லோரிடமும் பேசிப் புரிய வைக்க நினைக்காதீர்கள்... சிலநேரத்தில் எதிரே இருப்பது எருமை மாடாகக் கூட இருக்கலாம்



## ஸ்ரெல்லா

அவமானங்களும் அவ்வப்போது மனிதனுக்குத் தேவைதான். இல்லையென்றால் மானம் என்ற ஒன்றை மனிதன் மறந்தாலும் மறந்து விடுவான்



## வைகரன்

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கடுப்புல கொடுத்த வரமாத்தான் இருக்கனும்



## தூயவன்

சாவின் விளிம்புவரை சென்றவன் கும்பிடாத தெய்வங்களே இல்லை. கஷ்டத்தின் விளிம்புவரை சென்றவன் திட்டாத தெய்வங்களே இல்லை



## நிருத்திகா

வெளிப்படுத்தாமலேயே புரிந்து கொள்ளப்பட வேண்டுமென நினைக்கிறாள் பெண்... புரிந்து கொண்டாலும் வெளிப்படுத்துவதில்லை ஆண்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 203

## தொற்றா நோய்களின் தொடர்கதை முடிக்க

தொற்றாநோய்களின் தொடர் கதை-கண்டு
வற்றிப்போகுமோ-எம் வாழ்வின் வரைகள்
முற்றிப்பழுக்கும் முதுமைப் பாதையில்
பற்றிப்பிடிக்கும் -இப் பாவப் பிணிகள்.

தொகுதிக்கொன்றாய்த் தொடரும் கதைகள்
பகுதி பிரித்தெம்மைப் பாடாய்ப் படுத்தும்
குருதியில் குளுக்கோஸ் கும்மாளம் போட
கொலஸ்ட்ரோல் வந்துகுடிகொ(ல்)ள்ளத் தொடங்கும்.

வழிகள் மறிக்கும் வாசல்கள் மூடும்.
குருதித் தட்டுப்பாட்டின் குறையைநிரப்ப
குழம்பிய அங்கங்கள் குறைவேலைசெய்யும்
அரைவேலைசெய்ய-எம் அவதிகள் தொடங்கும்.

இதயத் துடிப்பில் இடறல்கள் வர
இடதுநெஞ்சுவலியில் துடிக்கும்.
பெரியஅடைப்பில் பெருங் குழாய் வெடிக்கும்
பம்பும் பணிக்குப் பங்கம் வந்திட

பாயும் குருதிபல வழி தேடும்
நுரையீரல் வயலில் நிரம்பிவழிய
மூச்சுத் திணறல் முகாம் அங்குபோடும்
கால்கள் வீங்கும் களைப்பாய் இருக்கும்

கட்டிலில் தூக்கம் -பழையகதையாகிப் போகும்.
விட்டதைமுடிக்கும் வேளைவரமுன்னே
தொட்டகுறையோடுதொலைந்துபோகநேரும்
இத்தோடுமட்டுமா இன்னமும் இருக்கு

கழுத்துக் குழாய்களில் காவல் இருக்கும்
கொலஸ்ட்ரோல் வந்துகொழுவிப் பிடிக்க
கொன்னைதட்டும் குழம்பிப் போவோம்
பிடிபெரிதானால் முடக்கிப் போடும்...

அதுவேமுடிவாகவும் கூடும்
முழுதும் கேட்கவேமூச்சுவாங்குதே...
இதற்குமுடிவுதான் என்ன?
மரணம் வந்துவாசல் தட்டும் வரை

மயங்கியே இருப்போமா?
மனம் நினைத்ததைச் செய்வோமா?
விரும்பியதைச் செய்யவிலங்குகளா நாம்
விழிப்புணர்வு பெறுவோம்
விளக்கத்தைக் கேட்போம்

வருமுன் காப்பது . வரும் நோய்களுக்கு
நன்று பரம்பரையப் பார்த்து-நம்மை
பதப்படுத்தல் நன்று
உணவே மருந்தென்று உறுதி எடுப்போம்

உடற் பயிற்சி உயிர் காக்கும் கடமையெனக் காப்போம்
கற்றுத் தேர்ந்தவர் காவலில் இருக்கசற்றுப்
பொறுப்பதேன் சாத்திரம் பார்ப்பதேன்
முற்றுடல் சோதனை முறையான பரிசோதனை

புற்றுநோய் தொடங்கமுன் புரியவைத்திடும்
வரைமுறை எத்தனை உள்ளது ஏன் இன்னும் தாமதம்?
நித்திரை நினைவைச் சீராக்க உதவும்
எட்டரை மணித் துளிகள் -அதற்காய் ஏற்பாட்டில் வைப்போம்.

எத்தனை இருப்பினும் இத்துணை வேண்டும்
உளநலத்தினை வளமாக்க உரியன செய்வோம்.
கற்றுக் கொண்டதைக் கணக்கில் எடுப்போம்
காடுகாணும் நாள் வரையும் காத்திரமாய் இருப்போம்

Dr.Sivani Pathmarajah,USA

## ஆறு மணி நேரத்துக்கும் குறைவாக தூங்குபவர்களுக்கு நோய் எதிர்ப்புத்தன்மை குறைகிறது



ஒருநாளைக்கு ஆறு மணி நேரத்துக்கும் குறைவாக தூங்குபவர்களுக்கு ஜலதோஷத்தை உண்டாக்கும் வைரஸின் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக ஆய்வின் முடிவுகள் தெரிவித்துள்ளன.

இது குறித்து நடத்தப்பட்ட பரிசோதனையில், 164 ஆரோக்கியமானவர்களின் தூங்கும் பழக்கம் கண்காணிக்கப்பட்டது. அதற்காக அவர்களின் கைகளின் மணிக்கட்டில் தொடு உணர் கருவிபொருத்தப்பட்டது.

அதன் பிறகு அவர்களின் மூக்கில் ஜலதோஷத்தைத் தோற்றுவிக்கும் ரினோவைரஸ் அடங்கியதிரவத்தின் சில சொட்டுக்கள் விடப்பட்டன.

இவர்கள் அனைவரும் ஒரு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டு கூர்ந்து கண்காணிக்கப்பட்டனர். இவர்களில் எத்தனை பேருக்கு ஜலதோஷம் பிடித்தது என்று கண்காணிக்கப்பட்டது.

இந்தப்பரிசோதனையின் இறுதியில் கிடைத்த முடிவுகள் குறைவான தூக்கம் மனிதர்களின் நோய் எதிர்ப்புத் தன்மையின் வீரியத்தைக் குறைக்கிறது என்பதை உறுதி செய்திருக்கின்றன.

இந்தப் பரிசோதனையில் தூக்கத்தின் கால அளவு மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டது. தூக்கத்தின் தன்மை கணக்கில் எடுக்கப்படவில்லை. விட்டு விட்டு தூங்குவது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

மாறாக ஒருவர் ஒருநாளைக்கு எவ்வளவு நேரம் தூங்குகிறார் என்பது மட்டுமே கணக்கு என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஆய்வின் முடிவுகளின் படி, ஒருநாளைக்கு ஏழு மணி நேரத்துக்கும் அதிகமாக தூங்குபவர்களோடு ஒப்பிடும் போது, ஒருநாளைக்கு ஆறு மணி நேரத்துக்கும் குறைவாக தூங்குபவர்களுக்கு ஜலதோஷம் பிடிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக தெரிய வந்திருக்கிறது.

யாழ். மருத்துவக்குழு.

## அநாவசிய கட்டுப்பாடுகள் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல

வாழ்க்கையில் விதிக்கப்படும் அநாவசியமான கட்டுப்பாடுகள் மனிதனின் உடல் உள சமூக நன்னிலையாகிய உண்மையான சுகாதார நிலையை பாதிக்கும் எனஆய்வுகள் உறுதி செய்கின்றன.

சுவையாக உண்பதும்வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. சுவையான உணவு வகைகளை யாரும் தியாகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. உப்பு, உறைப்பு, புளிப்பு, இனிப்பு போன்ற அனைத்து சுவைகளும்ஆபத்தானவை என எண்ணிக் கொள்கிறோம். ஐஸ்கிறீம்,பாயாசம் போன்றவற்றை உண்ணும் பொழுது குற்ற உணர்வுக்கு ஆளாகின்றோம்.

உப்பு உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. உப்பின் அளவு உடலில் குறைந்துவிட்டால் அது பல தீயவிளைவுகளுக்கு வழிவகுக்கும். வெப்ப வலயநாடுகளில் வசிக்கும் மக்களுக்கு ஒப்பீட்டளவில் அதிகளவு உப்புதேவைப்படுகிறது. காரணம் வியர்வையின் மூலம் பெருமளவு உப்பு இழக்கப்படுதலாகும். எனவே உயர்குருதிய முக்கம் உள்ளவர்கள் கூட 6-10 கிராம் வரையிலான உப்பை தினந்தோறும் உள்ளெடுப்பது நல்லது. உப்பின் முக்கியத்துவம் அறிந்தே எம் முன்னோர் "உப்பில்லா பண்டம் குப்பையிலே" "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பது போன்ற பலஉப்பை பற்றிய விடயங்களை கூறி வைத்திருக்கிறார்கள்.எனவே போதியளவு உப்பு சேர்த்து கறிசமைக்க பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் அளவுக்கு அதிகமான உப்பை உணவிலே சேர்த்துக் கொள்வதை தவிர்ப்பது நல்லது.

இதே போன்று உணவிலே உறைப்பு, புளிப்பு சுவைகளை சேர்ப்பதனால் தீயவிளைவுகள் எதுவும் ஏற்பட்டு விடப் போவதில்லை. இவை உணவின் சுவையைமெருகேற்றும் என்பதுடன் சமிபாட்டிற்கும் உறுதுணையாக இருக்கும்.ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்ற விடயத்தை மறந்துவிடலாகாது.

பால், முட்டை போன்றவற்றை போதியளவிலே உணவிலே சேர்த்துக் கொள்ள முடியும். இவை இயற்கையான பாதுகாப்பான நிறை உணவுகளாகும். வெங்காயம், உள்ளி, இயற்கையான வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை நீரிழிவு, இருதய நோய் உள்ளவர்கள் கூட போதியளவு உண்ண முடியும்.



சுகதேகிகளும் நோய்க்கு ஆட்பட்வர்களும் உணவை சுவையானதாக சமைத்து உண்ணும்பொழுது அவர்களின்உடல் உள ஆரோக்கியம் மேம்படும்.

Dr. சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 059 4937) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்